
தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 143 • 27.05.2018

அண்ணா பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் கூரியர் சேவை
AnnA EXPRESS COURIER SERVICE
976, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 5656
070 330 5500



## விக்னேஸ்வரனை குறிவைத்து இரகசிய ஒப்ரேஷன்!



## உடைக்கப்பட்டது ஆனந்தபுரம் BOX
## கடாபி ஏன் வெளியேறவில்லை?



## 'தமிழரசுக்கட்சியில் தலையிருக்க வாலாடுகிறது'
சிறிகாந்தா பரபரப்பு பேட்டி

# காதலியாக நடித்த பெண் புலி
## கொழும்பில் புலிகளின் இரகசிய ஒப்ரேஷன்

DS NO - 882
# சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை



வற்றாப்பளை கண்ணகி அம்மன்
ஆலயத்தின் வருடாந்த
பொங்கல் உற்சவம்
சிறப்புற வாழ்த்துகின்றார்கள்

தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE 0777226247
021-2217678 / 0776140361
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com

கிளை நிறுவனங்கள்
யாழ்ப்பாணம்
இல 281C, மணிக்கூட்டு
கோபுரவீதி யாழ்ப்பாணம்
0212228004/0703015004

மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
0212243393/0703013014


சங்கானை
ஒடக்கரை வீதி, சங்கானை
0212251664/0703013016

வேலணை
வங்களாவடி சந்தி
0212215472/0703013012

# முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் சிறப்பு மலர்
























# முள்ளிவாய்க்காலில் நடந்தது என்ன?

மே 18ம் திகதி காலையிலேயே பல்கலைகழக மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தின், பொதுச்சுடரேற்றும் இடத்திற்குசென்று, அந்தஇடத்திற்குள்யாரும் நுழையக்கூடாதென சர்ச்சையை உருவாக்க தொடங்கினார்கள். வடமாகாணசபையின் ஏற்பாட்டுகுழு உறுப்பினர்கள் சென்றபோது, அவர்களையும் உள்ளே நுழைய விடாமல் ரகளை செய்தார்கள். உணர்வுபூர்வ நினைவேந்தலில் மாணவர்கள் திடீரென ரகளையை ஏற்படுத்தியதால் அவர்கள் அதிர்ச்சியடைந்து விட்டனர். அந்த இடத்தில் சர்ச்சையை உருவாக்ககூடாதென அவர்கள் இயன்றவரை சமரசத்திற்கு முயல, மாணவர்கள் உரத்தகுரலில் ரகளை செய்தனர். வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்தான் இறுதியில் தலையிட்டு, இது சர்ச்சைக்குரிய இடமல்ல என கூறி, மாணவர்களின் கையிலேயே பொறுப்பை கொடுத்தார். அவர் அதிகமாக விட்டுக்கொடுக்கிறார் என்ற விமர்சனம் மாகாணசபை தரப்பிலிருந்து வைக்கப்பட்டது. ஆனால் சி.வீ.கே அந்த இடத்தில் சர்ச்சையை உருவாக்காமலிருக்கவே முயன்றார்.

பொதுச்சுடரேற்றும் பகுதியை தனியான அமைப்பாக பிரிப்பது என திட்டமிட்டது மாகாணசபை. அப்படியான அமைப்பை உருவாக்கி அலங்கரித்தது ஜனநாயக போராளிகள். ஆனால் நினைவேந்தலின்போது, சீமானின் கட்சி நிகழ்வுகளை போல "கறுப்புபூனைகள்" நான்கு மூலைகளில் பாதுகாப்பிற்கு நின்ற வேடிக்கையான சம்பவங்களையும் மாணவர்கள் அரங்கேற்றினர்.

நினைவேந்தல் தொடங்குவதற்கு முன்னர் தமிழரசுக்கட்சியின் சில மாகாணசபை உறுப்பினர்கள் பிரதான கூடரேற்றும் பகுதிக்கு அண்மையாக நின்றனர். அவர்களை அங்கிருந்து பல்கலைகழக மாணவர்கள் வெளியேற்றினர்.

இதற்குள், நினைவேந்தல் அறிவிப்பு பொறுப்பிற்கு மாகாணசபையினால் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணத்திலிருந்து முதலமைச்சருடன் வாகனத்தில் செல்வதற்கு முன்னரே, பல்கலைகழக மாணவர்கள் ஒலிவாங்கியை கையில் எடுத்து விட்டனர். பின்னர் அறிவிப்பாளர் சென்று ஒலிவாங்கியை கையேற்க முயன்றபோது, அவரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டனர்.

முதலமைச்சர் பிரதான சுடரேற்றும் பகுதியை நோக்கி செல்ல, அவருடன் மாவை சேனாதிராசா, சி.வீ.கே. சிவஞானம், கே.சயந்தன், இ.ஆனல்ட் உள்ளிட்ட பலர் சென்றனர். முதலமைச்சரை மட்டுமே உள்ளே நுழைய அனுமதித்த மாணவர்கள், மற்றவர்களை அவமானப்படுத்தும் விதமாக திருப்பியனுப்பினார்கள்.


நினைவேந்தல் பகுதி உள்ளக ஒழுங்கமைப்பை பெருமளவில் செய்து முடித்தது ஜனநாயக போராளிகள்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பகுதியிலிருந்து முன்னாள் போராளி துளசியை வலுக்கட்டாயமாக தள்ளி வெளியேற்றிய மாணவர்கள்









முள்ளிவாய்க்காலில் இறுதியுத்த சமயத்தில் நிலவிய உணவுப்பஞ்சத்தை சமாளிக்க கஞ்சி தயாரித்து வழங்கப்பட்டது. அதை நினைவுகூரும்விதமாக, நினைவேந்தலில் கஞ்சி வழங்கப்பட்டது

அதன் பேச்சாளர் துளசிதான் அவற்றை ஒழுங்கமைத்திருந்தார். அவரை அந்த பகுதியில் இருந்து வலுக்கட்டாயமாக தள்ளிச்சென்று வெளியேற்றினார்கள். ரௌடிகள் போல அவர்களின் செயற்பாடு இருந்தது.

இந்த இரண்டு சம்பவங்கள் நடந்தபோதும், முதலமைச்சர் அவற்றை கவனித்துக் கொண்டிருந்தார். எதுவும் பேசவில்லை.

நீண்டகாலம் போராடியவர்களும், நினைவேந்தலிற்காக பாடுபட்டவர்களும் மாணவர்களால் அவமானப் படுத்தப்பட்டபோது, முதலமைச்சர் மௌனமாக இருந்தது தவறு.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள் இந்த நினைவேந்தலை பொறுப் பேற்பதில் உள்ள அபாயத்தை கடந்த இதழ்களில் சுட்டிக்காட்டியிருந்தோம். தமிழர்களின் அரசியலை புலம்பெயர் அமைப்புக்கள் பணத்தின் மூலம் தீர்மானிப்பதென்பது மிக ஆபத்தானது. பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு, பணத்தை வீசியெறிந்து, ஆட்களை பிடித்து காரியம் சாதிக்க அனுமதிப்பது ஆபத்தானது.

அன்றைய நிகழ்வில் முதலமைச்சரை கௌரவப்படுத்தியதாக தோன்றலாம். ஆனால் இதன்பின்னால் முதலமைச்சருக்கு சூட்சுமமான பொறி வைக்கப் படுகிறது. அண்மைய நிகழ்வுகளை கவனித்தால், முதலமைச்சரின் நண்பர்கள் திட்டமிட்டு வெட்டியகற்றப்படுவதை அவமானப்படுத்தப்படுவதை கவனிக்கலாம். இப்படியான நிகழ்வுகளில் பேச முடியாமல் முதலமைச்சர் மௌனமாக இருப்பது, அவரது நண்பர்களை இழக்க செய்யும். நண்பர்கள் அல்லாத தமிழ் அரசியல் தரப்பும் ஒதுக்கப்பட்டு, அந்த இடத்தில் முதலமைச்சர் தூக்கி நிறுத்தப்படுகிறார்.

17ம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் பல்கலைகழக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து மறுநாள் எடுத்த மதுபான போத்தல்களென இணையங்களில் வெளியான படங்கள்

இது ஆழமான அர்த்தத்தையுடைய நகர்வை. இதை செய்யும் பல்கலைகழக மாணவர்கள் கூட இந்த அரசியலின் பின்னணியை உணர்ந்திருக்க மாட்டார்கள். பின்னணியிலிருந்து செயற்படுத்தும் தரப்பு நுட்பமாக காய்களை நகர்த்துகிறது.

இந்த சந்தர்ப்பங்கள் எதிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சிக்கலை சந்திக்கவில்லையென்பதையும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

இப்பொழுது தமிழ் அரசியலில் முதலமைச்சருக்கு நெருக்கமான நண்பர்கள் யார்?

தமிழரசுக்கட்சி இல்லை. ஏற்கனவே இரண்டு தரப்பிற்குமிடையில் வெட்டு விழுந்துவிட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, மற்றும் உதிரிகளாக முதலமைச்சருடன் உறவில் இருக்கும் ஆட்களை திட்டமிட்டு முதலமைச்சரிலிருந்து பிரிக்கும் நுணுக்கமான ஒப்ரேஷன் இது.

அன்றைய நிகழ்வில் ஒதுக்கப்பட்ட எல்லோருக்குமே நிச்சயம் ஏற்பட்டிருக்கும் உணர்வு "முதலமைச்சராவது எமக்காக ஒரு வார்த்தை பேசியிருக்கலாமே... அவரும் மௌனமாக இருந்தார். அவருடன் போகுமிடங்களில் இப்படியான சிக்கல் வராலாம்" என்பது. ஒருவித அதிருப்தி ஏற்படுவதுடன், அவருடன் அடுத்தடுத்த நிகழ்வில் இணைய தயக்கம் வரும்.

இதைத்தான் இந்த ஒப்ரேஷனை இயக்குபவர்கள் தலைமைச்செயலக ஆட்கள் விரும்புகிறார்கள்.

இந்த ஒப்ரேஷன் வெற்றியளித்தால், முதலமைச்சரின் முன்னால் இருக்கும் தெரிவுகளே இருக்காது. ஒரேயொரு தெரிவு மட்டுமேயிருக்கும். அது தமிழ் தேசிய மக்கள் முன்னணியை நோக்கி செல்வது!

வேறு தெரிவுகள் இல்லாமல், முதலமைச்சர் முன்னணியை நோக்கி செல்லவேண்டிய நிலைமையேற்பட்டால், முதலமைச்சரால் அவர் இப்பொழுது திட்டமிடுவதை போன்ற பரந்த கூட்டணியை உருவாக்க முடியாது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியை பொறுத்தவரை சுத்த தங்கம் அவர்கள் மட்டுமே. யாருடன் கூட்டணி வைக்கலாமென்பதை விட, யாருடன் வைக்க முடியாது என்ற பெரிய லிஸ்றையே அவர்கள் வைத்துள்ளார்கள்.


நண்பர்கள் வெட்டப்பட்ட நிலையில், நிர்ப்பந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டமைப்பிற்குள் முதலமைச்சர் சென்றால், அது அவருக்கு தங்க கூண்டாகவோ, இரும்புக்கூண்டாகவோதான் இருக்கும்.



பொதுச்சுடர் ஏற்றும்பகுதிக்கு வரும் முதலமைச்சரும், ஏனையவர்களும்




▶ அப்பா சனத் ஜெயசூர்யா பந்துகளை சிக்கர்களாகவும், பவுண்டரிகளாகவும் தெறிக்கவிட்டார் எனில், மகன் ரெனுக்க கோல் போஸ்டை நோக்கி சீற விடுகிறார். ஆம். சனத் ஜெயசூர்யாவின் மகன் ரெனுக்கவிற்கு கால்பந்தாட்டத்தில்தான் ஆர்வம். மகன் விரும்புவதற்கு ஆதரவளிப்பேன் என்கிறார் பாசக்கார தந்தை. அண்மையில் இங்கிலாந்தின் Man City Juveniles இளையுடன் நடந்த ஆட்டத்தில், இலங்கை சார்பில் ரெனுக்க களமிறங்கியிருந்தார். பாசக்கார தந்தை அதை இன்ரகிராமில் அப்லோட் செய்ய, பிறகென்ன லைக்ஸ் அள்ளியது.




"உன் மாமியார்கூட என்ன சண்டை?"
"மழைல குடைய எடுத்துட்டுப் போனதுக்கு,
'ஏன் ஈரமாக்கிக் கொண்டு வர்ற?'னு கேட்கறாங்க."

▶ இந்திய டெஸ்ட் அணி வீரர் சதிஸ்வர் புஜராவின் கணக்கில் அரிய ஒருநாள் சதமொன்று சேர்ந்துள்ளது. இங்கிலாந்தின் ரோயல் லண்டன் ஒருநாள் தொடரில், யோர்கைஷயர் அணிக்காக ஆடும் புஜரா, வொர்ஸ்டர் ஷயார் அணிக்கு எதிராக சதம் அடித்தார். டெஸ்ட் ஆட்டக்காரரான புஜரா 94 பந்துகளில் 101 ஓட்டங்களை எடுத்தார். ஆனாலும் அவரது அணி தோல்வியடைந்தது.






"ஒரு வருஷத்துக்குப் பிறகு, இன்னைக்குத்தான்
என் வீட்டுக்காரர் குழந்தைகளுடன் விளையாடுறார்!"
"வெளிநாடு போயிருந்தாரா?"
"இல்லை. செல்போன் ரிப்பேர் ஆயிடுச்சு!"




▶ ரபெல் நடாலின் கதை முடிந்துவிட்டதென்றுதான் போன வருடம் எல்லோரும் நினைத்திருந்தார்கள். ஆனால் காயம், மோசமான போர்மிலிருந்து மீண்டு வந்து ஒரு வருடமாக அசத்திக் கொண்டிருக்கிறார். ரோஜர் பெடரர், நடால் என்ற இரண்டு மூத்த இளைஞர்கள்தான் இன்றைய திகதியில் ரென்னிஸ் உலகின் அசைக்க முடியாத வீரர்களாக உள்ளனர். இப்பொழுது இத்தாலியின் ரோமா தொடரில் சம்பியனாகியுள்ளார். ஏழாவது முறையாக இந்த பட்டம் வெல்கிறார். இதன்மூலம் அங்கீகரிக்கப்பட்ட பெரிய தொடர்களில் அதிக பட்டம் வென்றவர்கள் வரிசையில் ஜெகோவிச்சை கடந்து இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளார்.


நயன்தாரா விக்னேஷ் சிவனுடன் ஏ.ஆர்.ரஹ்மான்

▶ கோலமாவு கோகிலா செம ஹப்பி. யூடியூப்பில் 3 மில்லியன் பார்வையாளர்களை கடந்து விட்டது, கல்யாண வயசு வீடியோ. நயனுடன் யோகி பாபு ரொமான்ஸ் செய்யும் வீடியோ இவ்வளவு ரீச் ஆகுமென எதிர்பார்க்கவில்லை படக்குழு. ஆரம்பமே சரவெடியாக இருக்க, படத்திற்கு நல்ல எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதெல்லாம், கல்யாண வயசு பாடல் ரீச் ஆனது இருக்கட்டும், இருவரும் கல்யாண வயசை கடந்து போய்க்கொண்டிருக்கிறீர்களே என, விக்னேஷ் நயன் ஜோடியை பார்த்து கேட்க ஆரம்பித்துள்ளனர்.



▶ இலங்கை அரசியல்வாதிகளில் சமூக வலைத்தளத்தில் அக்டிவாகவும், அதிகமான ரசிகர்களையும் கொண்டவர் நாமல் ராஜபக்ச. என்னதான் போராட்டம், பொதுக்கூட்டமென்றாலும் அங்கிருந்தபடியே ஒரு செல்பியாவது எடுத்து அப்லோட் செய்து, எப்பொழுதும் ட்ரெண்டியாகவே இருப்பார். அவர் சமீபத்தில் தனது பெற்றோரின் திருமண புகைப்படத்தை பதிவேற்ற, அது கொண்டாடப்பட்டு வருகிறது.


# றோ உளவாளி கிட்டு!

கே.ராகோத்தமன்

'Prabhakaran thought of comitting suicide' என்று அவர் பேசிய வீடியோ டேப் மற்றும் பத்திரிகைச் செய்திகளைக் காண்பித்து அவரை விசாரணை செய்த அந்த அதிகாரி, அதைக் கொண்டே அவரை ராஜீவ் கொலை வழக்கில் ஒரு சாட்சியாகச் சேர்க்கவும் வகை செய்தார்.

தடா நீதிமன்றத்தில் வைகோ சாட்சி சொல்ல வந்தார். (அவர் 250வது சாட்சி.) விசாரணையின்போது, 'நான் அப்படிப் பேசவே இல்லை. வீடியோவில் இருப்பது நான்தான். ஆனால் அந்தக் குரல் என்னுடையது இல்லை' என்று வாக்குமூலம் அளித்தார்.

ராஜீவ் கொலை விசாரணையைப் பொறுத்தளவில் வைகோதான் முதல்



முன்னாள் இந்திய பிரதமர் சந்திரசேகர்



'றோ' உளவு அமைப்பின் தலைவரான ஜி.எஸ். பாஜ்பாய்




hostile witness. பிறகு தடா கோர்ட் அனுமதி பெற்று அந்தக் குறிப்பிட்ட விடியோ கேசட்டைப் பரிசோதனைக்கு அனுப்பினோம்.

அந்தக் குரல், வைகோவினுடையது தான் என்பது தெள்ளத் தெளிவாக நிரூபணமானது. ஆனாலும் அவர்மீது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

எங்களுக்கு மேல் விசாரணைக்கு அனுமதியளிக்க வேண்டிய கார்த்தி கேயன், அதைக் கண்டுகொள்ளாமல் விட்டது ஏன் என்பது புரியாத புதிர்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கைப் பொறுத்தவரை மரகதம் சந்திரசேகர் தொடங்கி, வைகோ, கருணாநிதி வரை அத்தனை அரசியல்வாதிகளிடமும் நிகழ்த்தப்பட்ட 'மேலதிகாரிகளின் விசாரணை' மிகவும் மேம்போக்காக அமைந்துவிட்டதில் தனிப்பட்ட முறையில் எனக்கு வருத்தம் உண்டு.

இன்னும் ஆழமான, விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்க வேண்டும் என்கிற ஆதங்கம், என்னைப் போல் அந்த விசாரணையில் ஈடுபட்ட வேறு பல சி.பி.ஐ. புலனாய்வு அதிகாரிகளுக்கும் உண்டு.

அந்த விசாரணையை இப்போதும் மேற்கொள்ள முடியும். மரகதம் சந்திரசேகர் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் நலமாகவே உள்ளார்கள்!

இந்திய ஜனநாயகத்தை வழிநடத்தும் அரசியல் சாசனச் சட்டம் தேர்தல் களுக்கென்று சிறப்பு விதிமுறைகள் பலவற்றை வகுத்துத் தந்திருக்கிறது.

மிக நுணுக்கமான, அனைத்துவிதப் பிரச்னைகளின் சாத்தியங்களையும் யோசித்து, ஆலோசித்து, ஒவ்வொரு பிரச்னைக்கும் உரிய தீர்வுகளை அது நமக்குத் தருகிறது.

அதனடிப்படையில்தான் சுதந்தர இந்தியாவில் இதுநாள் வரை தேர்தல்கள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு வேட்பாளர் உடல்நலக் குறை வினாலோ, எதிர்பாராத விதங்க ளாலோ தேர்தல் சமயத்தில் இறந்து போவாரேயானால், அவர் போட்டி யிடும் தொகுதியில் மட்டும் தேர்தலைத் தள்ளி வைக்கச் சொல்லிச் சட்டம் சொல்கிறது. ஆனால் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சமயம் நமது நாட்டில் நடந்தது என்ன?

மூன்று கட்டங்களாகப் பொதுத் தேர்தல்கள் திட்டமிடப்பட்டு, முதல் கட்டத் தேர்தல்கள் மட்டுமே முடிவடைந்திருந்த சமயம் அது. மே 23 மற்றும் 26ம் திகதிகளில் இரண்டாம், மூன்றாம் கட்டத் தேர்தல்கள் நடக்கவிருந்த சமயத் தில்தான் 21ம் திகதி ராஜீவ் காந்தி கொல்லப்படுகிறார்.

ஒரு மாபெரும் ஜனநாயக தேசத்தின் மக்கள், தமது அடுத்தத் தலைவராக யார் வரவேண்டும் என்று தீர்ப்பளிக்கத் தயாராகிக்கொண்டிருந்த சமயத்தில், திட்டமிட்டு, மக்களின் விருப்பம் நிறைவேறிவிடக் கூடாது என்னும் எண்ணத்துடன் ஒரு சதிச்செயல் மேற்கொள்ளப்பட்டு, குறிப்பிட்ட தலைவர் படுகொலை செய்யப்பட்டதால், அவர் போட்டி யிடும் தொகுதியில் மட்டுமல்லாமல், தேர்தல்கள் நடக்கவேண்டிய அனைத் துத் தொகுதிகளிலும் அது தள்ளி வைக்கப்படுகிறது.

அது, அந்தச் சமயத்தின் அவசிய மாகக் கருதப்பட்டு, அரசியல் சாசன சட்டப் பிரிவு 324ன்படி அந்த நடவடிக்கையை அன்றைய தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் எடுத்தார்.

படுகொலைச் சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு மறுநாளே, அதாவது மே 22ம் திகதி, டி.என். சேஷன் இந்த அறிவிப்பை வெளியிடுகிறார். தேர்தல்கள் ஒத்திவைப்பு. சுதந்திர இந்தியாவில் அப்படியொரு சம்பவம் நடப்பது அதுவே முதல்முறை.

அத்தனை பரபரப்பான, குழப்பங்கள் மிகுந்த, கொந்தளிப்புகள் மிகுந்த நேரத்தில், அன்றைய பாரதப் பிரதமர் சந்திரசேகர் அவசரமாகத் தமது சிசிறிகி (Committee of Cabinet Affairs and Political Affairs)வைக் கூட்டினார்.

தேசத்தின் மிக உயர்ந்த, அதி முக்கியத்துவம் வாய்ந்த கமிட்டி அது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்களுள் சிலர், அப்போதைய ஐ.பி. தலைவராக இருந்த எம்.கே. நாராயணன், 'றோ' உளவு அமைப்பின் தலைவரான ஜி.எஸ். பாஜ்பாய், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி.

சி.சி.பி.ஏவின் அந்த அவசரக் கூட்டத்தில் பிரதமர் சந்திரசேகர், உளவு அமைப்புகளின் தலைவர்கள் இருவரிடமும், 'இந்தப் படுகொலைக்குக் காரணமானவர்கள் யார்? உளவுத்துறை என்ன செய்திருக்கிறது? உங்கள் ரிப்போர்ட் என்ன?' என்று கேட்டார்.

உளவுத்துறைத் தலைவர்கள் பதில் சொல்வதற்கு முன்னால் முந்திக்கொண்ட சுப்பிரமணியம் சுவாமி, 'சந்தேகமில்லாமல் விடுதலைப் புலிகள்தான் இதனைச் செய்திருக்க வேண்டும்' என்று அடித்துச் சொன் னார். அது அவரது யூகமா, கணிப்பா, கைவசம் அப்போதே ஏதேனும் ஆதாரம் வைத்திருந்தாரா என்பதெல்லாம் இங்கு முக்கியமில்லை. சம்பவம் நடந்த மறுநாள் காலை சுப்பிரமணியம் சுவாமி பிரதமரிடம் ஆணித்தரமாக ஒரு விஷயத்தைச் சொல்கிறார். அது உண்மை என்று அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றாலும், ஓர் உளவுத்துறைத் தலைவர் அதனை மறுக்க விரும்பினால் எத்தகைய வலுவான ஆதாரங்களுடன் செய்ய வேண்டும்!

ஆனால் நடந்ததை எண்ணினால் சிரிப்புத்தான் வருகிறது. "நோ! நிச்சயமாக அதனை விடுதலைப் புலிகள் செய்திருக்கவே முடியாது! அவர்கள் செய்யவில்லை என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்' என்று உடனே குறுக்கிட்டுப் பேசிய 'றோ' தலைவர் பாஜ்பாய், அதற்குச் சொன்ன காரணம்தான் வினோதமானது.

'I have a mole in LTTE. I am sure it was not done by LTTE' பிரதமர் சந்திரசேகருக்கே அது வியப்பளித்திருக்கக் கூடிய விஷயம்தான். "றோ"வுக்கு விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஓர் ஒற்றனா? யார் அது? றோ தலைவர் நிதானமாகச் சொன்னார்:

'என் உளவாளியின் பெயர் கிட்டு'

(தொடரும்)


பிரபாகரன் - கடாபி

மினி தொடர் 10

# ஆனந்தபுரம் BOX உடைந்தது... கடாபி ஏன் வெளியேறவில்லை?

## யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்.., கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

ஆனந்தபுரத்தின் எப்படியான நிலைமையிருந்தது, எப்படி அந்த BOX உருவானது என்பதை கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். அதைப்பற்றி இன்னும் சிறிது விளக்கமாக கூற வேண்டுமென வாசகர்கள் பலர் அலுவலகத்திற்கு நேரில் வந்தும், தொலைபேசியிலும் கேட்டுக் கொண்டனர். ஆனந்தபுரம் BOX பற்றிய விபரங்கள், தீபத்தில் வெளியாகும் "இறுதியுத்தத்தில் நடந்தது என்ன?" தொடரில் விபரமாக வெளியாகும் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எனவே வாசகர்கள் அதுவரை பொறுத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

என்றாலும், பல வாசகர்கள் ஆர்வமாக கேட்டதால் மேலோட்டமான சில விடயங்களை குறிப்பிட்டுவிடுகிறோம். கடாபியின் இறுதிநாட்களுடன் ஆனந்தபுரம் BOX உம் தொடர்புபட்டிருந்ததால், அதை குறிப்பிடுகிறோம்.

மாத்தளன், வலைஞர்மடம், பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிக்கு புதுக்குடியிருப்பு மற்றும் வட்டுவாகல் பகுதிகளால் மட்டுமே தரைப் பாதையிருந்தது. பச்சைப்புல்மோட்டை பகுதியால் ஆழம்குறைந்த பாதையொன்றிருந்தது. ஆனந்தபுரம் BOX சமயத்தில் வாகனங்கள் செல்லக்கூடிய பாதையொன்றிருந்தது. (அதன்பின்னர் பெருமழை பொழிய, அந்தப்பாதை நீரால் மூடப்பட்டுவிட்டது)

முள்ளிவாய்க்காலை நோக்கி பின்வாங்குவதென புலிகள் தீர்மானித்ததைவிட, அந்த இடத்தில் புலிகளை முடக்குவதென இராணுவம் தீர்மானித்தது என்பதுதான் சரி. அதற்கு இரண்டு காரணம். முதலாவது, அது பரந்த வெட்டைவெளியான பிரதேசம். புலிகளால் நீண்டகாலம் அங்கு தாக்கு பிடிக்க முடியாது. பயிர்களும் விளையாது. உணவு உற்பத்திக்கும் வாய்ப்பில்லை.

இரண்டாவது முல்லைத்தீவு வரைபடத்திலேயே காடுகளிலிருந்து தொலைவில் உள்ள இடம் அது மட்டும்தான். புலிகளை காடுகளிற்கு அருகில் முடக்க முயன்றால், திட்டத்தில் கொஞ்சம் பிசகி புலிகள் காட்டுக்குள் நுழைந்தால் பரோட்ட சூரி மாதிரி கோட்டை அழித்துவிட்டு, மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டுமென்பது பாதுகாப்பு தரப்பிற்கு தெரிந்திருந்தது.

புலிகள் மீண்டும் காட்டுக்குள் நுழைய அனுமதிக்காமல் இருப்பதெனில், காட்டைவிட்டு வெகுதொலைவில் அவர்களை முடக்க வேண்டும். முல்லைத்தீவில் அப்படியான இடம் முள்ளிவாய்க்கால்தான்.

புதுக்குடியிருப்புத்தான் புலிகளின் கடைசி கேந்திர நிலையம். புதுக்குடியிருப்பை கைவிடுவது, அரசியல் இராணுவ அர்த்தங்கள் அனைத்திலுமே புலிகளிற்கு பாதகமானது. தொடர்ந்தும் பின்நகர்ந்து கொண்டிருக்க முடியாது என்ற முடிவிற்கு பிரபாகரன் வந்திருந்தார். புதுக்குடியிருப்பின் பின்பகுதியில் ஆனந்தபுரத்தில்தான் அவரது முகாம் அமைந்திருந்தது. அந்த முகாமில் இருந்து இனிமேல் பின்நகரவே மாட்டேன் என்ற முடிவிற்கு பிரபாகரன் வந்திருந்தார்.

இந்த முடிவை அவர் ஏன் எடுத்தார், அந்த நாட்களில் என்ன நடந்தது, அந்த முடிவை யார் மாற்ற வைத்தார்கள், அதன் விளைவுகள் என்ன போன்ற விசயங்களை இந்த பகுதியில் நாம் குறிப்பிடவில்லை. அது இறுதியுத்தத்தில் நடந்தது என்ன பகுதியில் இடம்பெறும். அதுவரை வாசகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

புலிகள் ஆனந்தபுரத்தில் நிலைகொண்டபோது, ஆனந்தபுரத்திற்கும் வலைஞர்மடத்திற்குமிடையில் ஒரு தரைப்பாதையிருந்தது. நந்திக்கடலில் நீர்வற்றியிருந்ததால் வாகனப் போக்குவரத்து செய்யக்கூடியதாக இருந்தது. ஆனந்தபுரம் முழுமையாக இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பின்னர், அடுத்தடுத்த நாட்களில் முல்லைத்தீவில் பெருமழை கொட்டி, அந்த நீரேரி நிரம்பிவிட்டது. அடைமழையால் இடம்பெயர்ந்து தகரக்கொட்டகைக்குள் இருந்த மக்கள் பெரும் சிரமப்பட்டாலும், இராணுவ ரீதியான ஒரு சாதகத்தை புலிகளிற்கு கொடுத்தது. நீரேரி தண்ணீரால் நிரம்பியதால், இராணுவத்திற்கு தரைவழி நகர்வு செய்ய சிரமமானது. எனினும், இந்த சாதகத்தையும் புலிகளால் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. இத்துடன், ஆனந்தபுரம் தொடர்பான விசயங்களை முடித்துக்கொண்டு, கடாபியின் இறுதிக்கணங்கள் பற்றி குறிப்பிடுகிறோம்.

ஆனந்தபுரம் மீது 2009 மார்ச் 31ம் திகதி நள்ளிரவு இராணுவம் முற்றுகையை ஆரம்பித்தது. அதன் பின்னர் அங்கு எப்படியான போர் நிலவியது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இலங்கையில் குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பில் அதிக வெடிபொருள்கள் வீசப்பட்ட களமாக அதுதான் இருக்கும். அங்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் போராளிகளிற்கு இருக்கவில்லை. ஆனந்தபுரம் முற்றுகைக்குள்ளான பின்னர் போதிய உணவுப்பொருள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...







# ஹப்பி பீரியட்ஸ்

ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் வயதுக்கு வருகிற பருவம், கருத்தரிக்கிற பருவம், பெரி மெனோபாஸ், மெனோபாஸ் என்று நான்கு நிலைகள் உள்ளன. இந்த நான்கு நிலைகளிலும் பெண்கள் நிச்சயம் தெரிந்துகொள்ளவேண்டிய உடல் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட தகவல்கள், அப்போது செய்யவேண்டிய, செய்யக் கூடாத விஷயங்கள் பல இருக்கின்றன. அவற்றை இங்கு விளக்கமாகச் சொல்கிறார்கள், மருத்துவ நிபுணர்கள். இந்த இணைப்புப் புத்தகம், 13 வயதுச் சிறுமியில் இருந்து 50 வயது பெண்வரை பீரியட்ஸ்பற்றிய அவர்களின் அத்தனை சந்தேகங்களையும் போக்கும்.


**முதல் நிலை**

**வயதுக்கு வந்த புதிதில்**

மாதவிடாய் காலத்தில் மனரீதியாக ஏற்படும் பாதிப்புகள் குறித்த சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும், மகப்பேறு மருத்துவர் கீதா ஹரிப்ரியா விளக்கம் அளிக்கிறார்.

**'ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம்'**

மாதவிடாய், பெண்களுக்கு உடலில் மட்டும் மாற்றங்களை ஏற்படுத்துவ



தில்லை, மன ரீதியாகவும் சில மாற்றங்களை ஏற்படுத்தும். உடலிலுள்ள ஹார்மோன்களின் ஏற்றத்தாழ்வு நிலை காரணமாக, இந்த மனநிலை மாற்றங்கள் ஏற்படும். அடிக்கடி கோபம் அடைவது, காரணமே இல்லாமல் எரிச்சல் அடைவது, சோகமாக உணர்வது, அழுவது, சில நேரங்களில் மிகவும் மகிழ்ச்சியாக உணர்வது, சட்டெனச் சோர்வடைவது போன்ற உணர்வுகள் ஏற்படும். இந்த மனநிலை மாற்றங்களைத்தான் 'ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம்' (Pre Menstrual Syndrome - PMS) என்கிறோம். குறிப்பாக, இதனால் சில பெண்கள் மன அழுத்தத்துக்கு ஆளாவார்கள். பலரும் இதை இயல்பாகக் கடந்துவிட, சில பெண்கள் மட்டும் இதைப் பற்றிய விழிப்பு உணர்வு இன்மையால் மன அழுத்தத்துக்கு ஆளாகிவிடுவார்கள்.

**சட்டென்று மாறுமா மனநிலை?**

அப்படிச் சொல்ல முடியாது. அவரவர் உடலில் இருக்கும் ஹார்மோன்களின் ஏற்றத்தாழ்வு நிலையைப் பொறுத்துதான், ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம், மனநிலையில் மாற்றங்கள் எல்லாம் ஏற்படுகின்றன.



இந்தியாவில், 10 % முதல் 15 % பெண்கள்தான், இந்த சிண்ட்ரோமால் பாதிக்கப்படுகின்றனர். இது பரம்பரை நோயோ அல்லது பெண்களுக்குக் கட்டாயம் ஏற்படும் நோயோ கிடையாது. நம் பழக்கவழக்கங்கள், நோய் எதிர்ப்பு சக்தியின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படும் உடல் மாற்றம். சிலருக்கு வாந்தி வருவது போன்ற உணர்வு, வயிற்றுவலி, கால்வலி ஏற்படும். திருமணமான பெண்களுக்கு, மாதவிடாய் வருவதற்கு முன், 'நாம் இன்னும் கர்ப்பமாகவில்லையே' என்ற

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

---


இல்லை. அங்கு நின்றவர்களில் கணிசமானவர்கள் புதிய போராளிகள். அவர்களால் அந்த கொடூர தாக்குதலை எதிர்கொள்ள முடியவில்லை.


புலிகளின் ராங்கி ஒன்றும் அங்கு நின்றது. துரதிஸ்டவசமாக முன்னரண் மண்அணையில் அது புதைந்தும் விட்டது. அதை எடுக்கும் வாய்ப்பும் புலிகளிற்கு இருக்கவில்லை.

குறுகிய நிலப்பரப்பில், போதிய பாதுகாப்பு ஏற்பாடு இல்லாத நிலையில், புலிகள் மீது நடத்தப்பட்ட அகோர தாக்குதலில், புலிகளின் அணிகள் நிலைகுலைந்து விட்டன. ஒன்றிணைந்து திட்டமிட்டு எதையும் செய்யும் நிலைமை அவர்களிற்கு இல்லாமல் போனது. அதேநேரம் தொடர்ந்தும் ஆனந்தபுரத்திற்குள் நிலைகொள்ள முடியாத அதீத உக்கிர தாக்குதல் அவர்கள் மீது நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது ஆனந்தபுரத்தில் இருந்த அணிகளிற்கு இரண்டேயிரண்டு தெரிவுக்ள்தான் இருந்தன. ஒன்று ஆனந்தபுரத்தைவிட்டு வெளியேறுவது. இரண்டு அங்கேயே மரணமடைவது.

ஆனந்தபுரத்தை இனி தக்கவைக்கவே முடியாதென்ற நிலைமையேற்றபட்டபோது, முற்றுகையை உடைக்க சில முயற்சிகள் செய்து பார்த்தார்கள். முடியவில்லை.

புலிகள் இன்னொரு உத்தியை பாவித்து பார்த்தார்கள். முற்றுகையை உடைத்து ஆனந்தபுரத்தில் சிக்கிய அணிகளை மீட்க பிரதான நிலப்பரப்பில் இருந்த அணிகள் முயன்றன. இரட்டை வாய்க்கால் பகுதியால் புலிகள் ஒரு உடைப்பு தாக்குதலை மேற்கொண்டனர். அந்த பகுதியால் இராணுவத்தின் முற்று




ஆனந்தபுரம் BOX இற்கு பத்துநாள் முன்னைய நிலவரம்

கையை உடைத்தால், ஆனந்தபுர முற்றுகையில் இருந்த போராளிகளை வெளியில் எடுக்கலாம் என நினைத்தார்கள். மந்துவில், இப்போதைய இராணுவத்தின் போர் நினைவுச் சின்னம் உள்ள பகுதிக்கு அப்பாலான பகுதியில் அந்த தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் இந்த தாக்குதலும் வெற்றியளிக்கவில்லை.

இதன்பின்னர், ஆனந்தபுரத்திற்குள் சிக்கிய தளபதிகள் தமக்கிடையில் தொலைத்தொடர்பு கருவியில் பேசி, அவரவர் நிற்கும் பகுதியால் உடைப்பை மேற்கொண்டு தப்பிக்க வசதியானவர்கள் தப்பிக்கலாமென்ற முடிவையெடுத்தனர்.

இதுதான் புலிகளிற்கு பெரும் அழிவை கொடுத்தது.

ஏனெனில், ஆனந்தபுரம் முற்றுகை ஆரம்பிக்கும்போது, எல்லா தளபதிகளும் கிட்டத்தட்ட சமனான ஆளணி, ஆயுத வளங்களை வைத்திருந்தனர். ஆனால் மூன்றுநாள் அகோர யுத்தத்தில் பலர் மரணமானார்கள். இப்பொழுது எல்லோரிடமும் சமமானளவு ஆள், ஆயுத பலமிருக்கவில்லை. ஆனால், ஒன்றிணைந்து தாக்குதல் நடத்தும் வாய்ப்பும் இல்லை. அதனால் அவரவர் நிலைகொண்டிருந்த பகுதிக்குள்ளால் தாக்குதல் நடத்த முடிவெடுத்தார்கள்.

இந்த தாக்குதல் நடத்தப்பட்டபோது, கடாபி நடக்க முடியாத நிலைமையில் இருந்தார். அவரை இரண்டு போராளிகள் தோளில் காவிக்கொண்டு வெளியேறுவதாக இருந்தது.

கடாபி தங்கியிருந்த பகுதி மந்துவில் குளத்திற்கு அண்மையாக இருந்த இடம். இந்த முனையில் தாக்குதல் நடத்திய புலிகள், இராணுவத்தின் முன்னரணை உடைத்துவிட்டனர்!

கடாபி தங்க வைக்கப்பட்டிருந்த பகுதியில் இராணுவத்தின் முன்னரண் உடைக்கப்பட்டது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மை அந்த உடைப்பிற்குள்ளால் கடாபி வெளியே வரவில்லையென்பது!

ஏன் வரவில்லை?

அதற்கு முன்னர் கடாபி மரணமடைந்து விட்டாரா?

அதுவும் இல்லை. அப்படியாயின்?

அதை அடுத்த வாரம் சொல்கிறோம்.

(தொடரும்)


கவலை மனதில் இருக்கும். மாதவிடாய் ஏற்படும்போது, அது எரிச்சலாகவோ, அழுகையாகவோ, கோபமாகவோ வெளிப்படும்.

**சிகிச்சை என்ன?**

ஏற்கெனவே சொன்னதுபோல, இதை இயல்பாகக் கடந்துவிடும் பெண்களுக்குப் பிரச்னையில்லை. இதன் வீரியம் அதிகமாக இருக்கும் பெண்கள் மட்டும், அதற்கான மருத்துவத்தை நாடலாம். இதற்காகச் சில மருந்துகள் இருக்கின்றன. ஒவ்வொருவரின் உடலைப் பொறுத்து, மருத்துவரின் ஆலோசனைப்படி அவற்றை எடுத்துக்கொள்ளலாம். தவிர, இந்த நாள்களில் பொதுவான சில வாழ்வியல் முறைகளையும் பழகிக்கொள்ளலாம். உணவில் உப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும். காய்கறிகள், பால், முட்டை போன்ற விற்றமின் நிறைந்த உணவுகள், கீரை வகைகள் ஆகியவற்றை அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டும். கோப்பி, டீ ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது. உடல் பருமனாக இருப்பவர்கள், வோக்கிங் அல்லது 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது நல்லது.

***ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம் பிரச்னை உள்ள பெண்களுக்கு, மெனோபாஸ் தொடங்குவதற்கு முந்தைய காலத்திலும் பாதிப்புகள் ஏற்படுமா?***

மெனோபாஸ் என்பது ஹார்மோன் குறைபாடு. ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம் என்பது ஹார்மோன் சமநிலையின்மை. மறதி, கவனமின்மை,



தன்னம்பிக்கையின்மை போன்ற உணர்வுகள் இந்த இரண்டிலுமே ஏற்படும் என்றாலும், இரண்டுமே வெவ்வேறு உடல்நிலை மாற்றங்கள். உடல்வலி, மூட்டுவலி, போன்ற உடல்ரீதியான பாதிப்புகளும் ஏற்படும். ஆனால், மெனோபாஸுக்கு முந்தைய காலத்தில் பெண்களுக்கு, 'விரைவில் நமக்கு மாதவிடாய் நின்றுவிடும்' என்ற எண்ணம்,மனதளவில்சற்றேநிம்மதியை ஏற்படுத்தும். ஆனால், கல்சியம் மற்றும் ஹார்மோன் குறைபாட்டால், சில உடல் உபாதைகள் ஏற்படலாம்.

***ஏற்கெனவே மன அழுத்தத்தில் இருக்கும் பெண்களுக்கும், அதன் காரணமாக ப்ரீ மென்ச்சுரல் சிண்ட்ரோம் ஏற்படுமா?***


மன அழுத்தத்துக்கும்ப்ரீமென்ச்சுரல் சிண்ட்ரோமுக்கும் சம்பந்தம் இல்லை. மன அழுத்தத்தால் பிஎம்எஸ் ஏற்படாது. என்றாலும், ஏற்கெனவே ஸ்ட்ரெஸ் மற்றும் மன அழுத்தத்தில் இருக்கும் பெண்களுக்கு, பிஎம்எஸ் பாதிப்புகள் கொஞ்சம் அதிகமாக இருக்கும்.


**இரண்டாம் நிலை**


**கருத்தரிக்கிற பருவம்**

மாதவிடாய் காலத்தில் முக்கியமான காலம், இனப்பெருக்கச் சுழற்சிக் காலம் (Reproductive Age Circle). இதைப் பற்றி விளக்குகிறார் மகப்பேறு மருத்துவர் கனிமொழி.

- பொதுவாகப் பெண்களுக்கு, 18 வயது முதல் 44 வயது வரை இனப்பெருக்கச் சுழற்சிக் காலம் ஏற்படும்.
- 21 வயது முதல் 35 வயது வரையிலான மாதவிடாய் சுழற்சியின் போது, கருவுறுதலில் உச்சம் (Peak Of Fertility) ஏற்படும். அந்த நேரத்தில் கர்ப்பம் அடைந்தால் எந்தக் குறைபாடும் இல்லாமல் ஆரோக்கியமாகக் குழந்தை பிறக்கும்.
- 28 நாள்களுக்கு ஒருமுறை ஏற்படும் மாதவிடாய் சுழற்சி, நோர்மல் சைக்கிள் (Normal Cycle).
- 24 நாள் முதல் 35 நாள்களுக்குள் ஏற்படும் மாதவிடாய் சுழற்சி, ரெகுலர் சைக்கிள் (Regular Cycle).
- 24 நாள்களுக்குக் குறைவான இடைவெளியில் ஏற்படும் மாதவிடாய் சுழற்சி, ஷோர்ட் சைக்கிள் (Short Cycle).
- மாதவிடாய் சுழற்சி இடைவெளி 35 நாள்களுக்கு மேல் அதிகரித்தால் அது 'ஒலிகோமெனோரியா' (Oligomenorrhea).
- ஷோர்ட் சைக்கிளும், ஒலிகோமெனோரியாவும் ஹார்மோன் குறைபாடு அல்லது கர்ப்பப்பை









சம்பந்தப்பட்ட ஏதாவது பிரச்னை இருந்தால் ஏற்படும்.

- சீரான இடைவெளியில் ஏற்படும் நோர்மல் சைக்கிள் பீரியட்ஸின் சுழற்சியை இரண்டாகப் பிரிக்கலாம்ஃபொலிக்குலர் பேஸ் (Follicular Phase) மற்றும் லூட்டியல் பேஸ் (Luteal Phase)
- ஃபொலிக்குலர் பேஸ் என்பது, மாதவிடாய்க்குப் பிறகான 14 நாள்கள். கர்ப்பப்பையில் மாதா மாதம் நிறைய கருமுட்டைகள் வளரும். எந்த முட்டைக்கு அதிகளவில் நுண்ணுயிர் ஊக்கப்படுத்தும் ஹார்மோனை (Follicle Stimulating Hormone) வாங்கிக் கொள்கிற தன்மை இருக்கிறதோ, அந்த முட்டைதான் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சியை அடையும்.
- ஒரு முட்டை மட்டும் பெரிதாக வளர ஆரம்பித்ததும், மற்ற முட்டைகளுக்கெல்லாம் ஹார்மோன் சப்ளை கிடைக்காமல் அழிந்துபோகும். பெரிதாக வளர்ச்சியடைந்த முட்டை ஈஸ்ட்ராடயால் (Estradiol) என்கிற ஹார்மோனைச் சுரக்கும். அந்த ஹார்மோன் தேவையான அளவுக்குச் சுரந்த பிறகு, எல்ஹெச் (LH) என்கிற ஹார்மோன் அதிகமாகும். மாதவிடாயின் 12, 13வது நாள் ஈஸ்ட்ரோடயால் ஹார்மோனின் அளவு அதிகரிக்கும். பின்னர், எல்ஹெச் ஹார்மோன் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கும். அது சுரக்க ஆரம்பித்து 18லிருந்து 36 மணி நேரத்துக்குள்ளாக, கருப்பையில் பெரியதாகி இருக்கிற முட்டை 18 மி.மீட்டரிலிருந்து 20 மி.மீட்டர் வரை வளர்ந்திருக்கும். அப்போது, எல்ஹெச் ஹார்மோன் அதிகரித்து அந்தக் கருமுட்டையானது கருப்பை நுண்ணறையில் இருந்து வெளியேறும். அந்த நேரத்தில் ஒரு பெண் உறவு மேற்கொள்ளும்போது கர்ப்பம் தரிக்க வாய்ப்புண்டு.
- 18 முதல் 36 மணி நேரம் எல்ஹெச் ஹார்மோன் அதிக அளவில் இருக்கும். அதன் பிறகு, அந்த முட்டை எப்போது வேண்டுமானாலும் நுண்ணறையில் இருந்து வெளிவரலாம். அந்த நேரத்திலும் கர்ப்பம் தரிக்க நேரிடும்.
- எல்ஹெச் ஹார்மோன் குறைந்த பின்னர், கர்ப்பம் தரித்திருந்தால், புரொஜெஸ்ட்ரோன் (Progesterone) என்கிற ஹார்மோன் சுரக்கும். பொதுவாக 5 முதல் 6 நாள்களில் கரு, கருப்பையில் உட்காரும். ஒருவேளை கர்ப்பம் தரிக்கவில்லை எனில், 21வது நாளில் கார்பஸ் லூட்டியம் (Corpus Luteum) சுருங்க ஆரம்பித்து, அடுத்த சைக்கிளுக்குத் தேவையான சுழற்சியை மேற்கொள்ள ஆரம்பித்துவிடும். அதற்கடுத்து, கார்பஸ் லூட்டியம் விரிவதற்கு ஒரு வாரம் ஆகும். அதன் பிறகு, கருவுறாத முட்டை மாதவிடாயாக வெளியேறும்.
- மாதவிடாயின் 21வது நாளில் கர்ப்பமாகி இருந்தால், 21லிருந்து 28வது நாளில் புரொஜெஸ்ட்ரோன் (Progesterone) ஹார்மோன் அதிகரித்து, பிரீயட்ஸ் சுழற்சியின் போது ஏற்படும் கருமுட்டை வளர்ச்சியைத் தடுக்கும். இதை லூட்டியல் பேஸ் என்பார்கள்.
- சுழற்சிக் காலத்தில் 14வது நாளுக்கும், 15வது நாளுக்கும் இடையில் நடைபெறும் சுழற்சி 'ஓவுலேஷன்' (Ovulation) எனப்படும். எளிமையாகச் சொல்ல வேண்டுமெனில், கரு முட்டை வெளிப்படுவதுதான் ஓவுலேஷன். இந்த ஓவுலேஷன் நடந்தால்தான் ஃபாலிக்குலர் பேஸும், லூட்டியல் பேஸும் இரண்டாகப் பிரிந்து அதனதனுடைய சுழற்சியை மேற்கொள்ளும்.
- ஷோர்ட் சைக்கிளாக பீரியட்ஸ் சுழற்சி இருந்தால் அதற்குத் தைரோய்டு பிரச்னைகள், மெனோபாஸ் அல்லது கர்ப்பப்பைப் பிரச்னைகள் காரணமாக இருக்கலாம்.
- ஒருவேளை 45 முதல் 50 நாள்கள் வரையிலான இடைவேளையில் பலமுறை பீரியட்ஸ் தள்ளி வருகிறது எனில், உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. ஏனெனில், அது கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்.

(தொடரும்)

**தீபம்**
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
**தொடர்புகளிற்கு**
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

✎ டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

சந்தேகம்... புதிதாகத் திருமணமானவர்களுக்கு அதிகம் ஏற்படும். குறிப்பாக, தாம்பத்ய உறவில்! எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் தீராத, திரும்பத் திரும்ப எழுகிற சந்தேகங்கள் அவை.

புதிதாகத் திருமணமான ஓர் இளம்ஜோடி என்னிடம் வந்தார்கள். அந்த ஆண் 'எங்களுக்குத் திருமணமாகி இரண்டு மாதங்கள் ஆகின்றன. மனைவி கர்ப்பமாகிவிட்டாள். 'இனிமேல் செக்ஸ் வைத்துக்கொள்ளக் கூடாது' என்கிறார்கள் வீட்டிலிருக்கும் பெரியவர்கள். உண்மையா டாக்டர்?' என்று கேட்டார். நான் விளக்கம் சொல்லி அவர்களை அனுப்பிவைத்தேன். இது தொடர்பாக இரண்டு சந்தேகங்கள் எல்லோருக்குமே ஏற்படும். ஒன்று, கர்ப்பமாக இருக்கும்போது செக்ஸ் வைத்துக்கொள்ளலாமா, கூடாதா? இரண்டாவது, பிரசவத்துக்குப் பிறகு எத்தனை நாள்கள் கழித்து செக்ஸில் ஈடுபடலாம்? ஆனால், இது குறித்துக் கேட்கக் கூச்சப்படுகிறார்கள். மருத்துவர்களும், சொல்லாமல் விட்டுவிடுகிறார்கள்.

இதற்குப் பெண்ணின் உடல் ஆரோக்கியம் கர்ப்பத்தின்போது எப்படி இருந்தது என்பதைப் பரிசோதித்தால்தான் தெரியவரும். பொதுவாகவே, ஒன்பதாவது மாதம் வரை செக்ஸ் வைத்துக்கொள்ளலாம். ஆணின் உடல் எடை கர்ப்பமான பெண்ணின் வயிற்றை அழுத்தாதபடிக் கவனமாக இருக்க வேண்டும்.


கர்ப்ப காலத்தில் நோய்த்தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால், இருவரும் பிறப்புறுப்புகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வேகமாகவோ, கடுமையாகவோ உறவில் ஈடுபடக் கூடாது. அதேபோல ஏற்கெனவே குறைமாதத்தில் குழந்தை பிரசவித்திருக்கும் பெண்கள் மீண்டும் கருவுற்றால், கர்ப்பப்பை வாய் (Cervix Dilated) கிழிந்திருந்தால், சில பெண்களுக்குக் கர்ப்ப காலத்திலும் பிறப்புறுப்பில் ரத்தக்கசிவு ஏற்படும்; அவர்கள் வயிற்றில் இரட்டைக் குழந்தைகள் இருந்தால், கர்ப்பப்பையில் குழந்தைக்கு ஊட்டச்சத்துகள் கொடுக்கும் 'நஞ்சுக்கொடி' (Plecenta), கர்ப்பப்பையின் வாய் பகுதியில் அமைந்திருந்தால் (Placenta Previa) உறவுகொள்ளக் கூடாது. இதையெல்லாம் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது.

சுகப்பிரசவமாக இருந்தால் மூன்று வாரங்கள் கழித்து உறவுகொள்ளலாம். அதுவும் பெண்ணின் உடல்நிலையைப் பொறுத்தது. பிரசவத்தின்போது பிறப்புறுப்புக்கும் ஆசனவாய்க்கும் நடுவில் இருக்கும் பகுதி கிழிந்து (Episiotomy), தைக்கப்பட்டிருந்தால், அது முழுமையாகக் குணமாகும்வரை உறவில் ஈடுபடக் கூடாது.


சிசேரியன் பிரசவமாக இருந்தால், குழந்தை பிறந்து 6 வாரங்கள் கழித்தே உறவுகொள்ள வேண்டும். மருத்துவரின் ஆலோசனையைக் கேட்டுக்கொள்வது நல்லது. குழந்தை பிறந்த பிறகு, சில பெண்களுக்கு உடலுறவின்போது பிறப்புறுப்பில் சுரக்கும் திரவம் நின்றுவிடும். இதன் காரணமாக, செக்ஸில் ஈடுபடும்போது எரிச்சல், வலி ஏற்படும்.


இதைத் தவிர்க்க, மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்தகங்களில் விற்கப்படும் எண்ணெய் போன்ற ஜெல்களைப் பயன்படுத்துவது நல்லது. கர்ப்பமாக இருப்பது செக்ஸ் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை அல்ல. இதைப் புரிந்து கொள்வோம்; இல்லறத்தில் சந்தோஷம் காண்போம்.

(இன்னும் கற்றுத் தருகிறேன்...)



▶ முள்ளிவாய்க்கால் நினைவையொட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் 20.05.2018 யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இரத்தான நிகழ்வு நடைபெற்றது.





▶ இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் தாயாரின் இறுதி கிரியைகள் அண்மையில், இந்தியா சிவகங்கை மாவட்டம் திருப்பந்தூர், அம்பத்தூர் கிராமத்தில் இடம்பெற்றது. இறுதி கிரியைகளில் தமிழ்நாட்டின் அரசியல் பிரமுகர்கள், அமைச்சர் பைசர் முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# தமிழரசுக்கட்சியில் தலையிருக்க வாலாடுகிறது!

## சிறிகாந்தா பரபரப்பு பேட்டி

பீஷ்மர்

ரெலோ செயலாளர் நாயகம் சிறிகாந்தா, அண்மைக்காலமாக அதிரடி கருத்துக்களிற்காக அதிகம் பேசப்பட்டவர். அவரது அலுவலகத்தில் அவரை சந்தித்தோம். உள்ளூராட்சி தேர்தல், ஆசனபங்கீடு, அரசியலமைப்பு பணி, வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் என பல விசயங்களை பேசியுள்ளார்.

**தீபம் : கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சிறிய சரிவு தென்படுகிறதே. ஏனிந்த சரிவு?**

**என்.சிறீகாந்தா:** கூட்டமைப்பு கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பதில் காட்டப்பட்ட கவனயீனம். வேட்பாளர்களிற்கு செல்வாக்கு உள்ளதாக கருதப்படும் பகுதிகளின் சமூக பின்னணிகளை முக்கியத்துவம் கொடுத்து தேர்ந்தெடுக்க தவறியது. அடுத்த காரணம், கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிற்கிடையில் வேட்பாளருக்கான வட்டாரங்களை பங்கீடு செய்வதில் தமிழரசுக்கட்சி தரப்பில் காட்டப்பட்ட குறுகிய அரசியல் ஆதாயத்துடன் கூடிய அணுகுமுறை. அதனால் ஏற்பட்ட குழப்பங்கள்.

இன்னுமொருகாரணமுண்டு. கடந்த ஜனாதிபதி தேர்தலிற்கும் பாராளுமன்ற தேர்தலிற்கும் பின்னரான காலகட்டத்தில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவாக தமிழ் தேசியகூட்டமைப்பு பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும் வெளிப்படுத்திய அரசியல் நிலைப்பாடு. இந்த அரசியல் நிலைப்பாடு தொடர்பாக பல விமர்சனங்கள் உண்டு. எமது



கட்சியும் ஒரு சில சந்தர்ப்பங்களில் தன்னுடைய கருத்து வேறுபாட்டை குறிப்பிட்டுள்ளது. போர்க்குற்ற விசாரணையில் காலஅவகாசம் வழங்கப்பட வேண்டுமா என்பதில் எமக்கு வேறு கருத்திருந்தது.

ஒட்டுமொத்தமாக சொன்னால் அரசிற்கு த.தே.கூ ஏதோ முண்டு கொடுப்பதை போலவும், அவரசாங்கத்திற்க அழுத்தம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது கூட தேவைப்பட்ட அளவிற்கு அதை செயற்படுத்த தவறியது என்று தமிழ்மக்கள் தரப்பில் பல்வேறு தரப்பினராலும் திட்டமிட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட தீவிர பிரசாரம், ஒரு குழப்பத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது.

மூன்றாவது காரணம், வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் எமது மக்களிடையே இரண்டு, சிங்கள கட்சிகளும் பல்வேறு ஊக்குவிப்புக் களை முன்வைத்து வாக்கு வேட்டையாடுவதில் ஓரளவு வெற்றிகண்டுள்ள நிலைமை. அரசின் பங்காளிகளான இந்த இரண்டு கட்சிகளும், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பலவீனமான தரப்பினரை குறிவைத்து இதனை மேற்கொண்டுள்ளன. மிக வேதனையோடு சொல்ல வேண்டும் எமது மக்களிலும் ஒரு பகுதினர் இந்த வலைக்குள் சிக்கியுள்ளனர். இந்த காரணங்களின் ஒட்டுமொத்த தாக்கம்தான் தேர்தலில் வெளிப்பட்டது.

**தீபம் : ரெலோவாக அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பாக இதை சுய விமர்சனம் செய்து கொண்டீர்களா?**

**என்.சிறீகாந்தா:** தேர்தலின் பின்னர் நாம் ஒரு தடவை எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனின் கொழும்பு உத்தியோககபூர்வ வீட்டில் சந்தித்து விவாதித்தோம். இரண்டு வாரங்களின் முன்னர் அடுத்த கூட்டத்தை நடத்த திட்டமிட்டும், நடத்த முடியாமல் போய்விட்டது. எதிர்க்கட்சி தலைவருக்கு வேறு நிகழ்வுகள் இருந்ததால் ஒத்திவைத்தோம். இந்தவாரம் மீண்டும் கூடுவோம். இந்த விசயத்தில் ஒரு ஆத்ம பரிசோதனை தேவைப்படுகிறது.

ஒளிவுமறைவின்றி நாம் பேச வேண்டியுள்ளது. தயவுதாட்சண்யமின்றி விரலை நீட்டி சில மதிப்பீடுகளை செய்ய வேண்டியுள்ளது. இதை நாம் செய்ய தவறினால் கூட்டமைப்பு எதிர்காலத்தில் அனாவசியமான சரிவுகளை சந்திக்க வேண்டி வரும்.

இம்முறை எதிர்பார்த்தளவு வெற்றி கிடைக்காதற்கு நாங்கள்தான் காரணம். வேறு யாருமல்ல. நாங்கள் ஒரு ஆத்ம பரிசோதனையை செய்ய வேண்டியுள்ளது. அது செய்யப்படும்.

**தீபம் : கூட்டமைப்பின் உள்ளக நடவடிக்கைகள் தொடர்பாக ஒளிவு மறைவின்றி நீங்கள் முன்வைக்கவுள்ள முக்கியமான விமர்சனங்கள் என்ன?**

**என்.சிறீகாந்தா:** எந்தவொரு தனிப்பட்ட பிரமுகரையும் இந்த விடயத்தில் நாம் குற்றம்சாட்ட முடியாது. கூட்டமைப்பாக நாம் செயற்பட்டு வந்தோம். ஆனால் கூட்டான சிந்தனை கூட்டமைப்பிற்குள் தேவையான அளவிற்கு இருக்கவில்லை.

பாராளுமன்ற குழு எல்லாவற்றையும் செய்யலாம் என்ற அடிப்படையில் செயற்பட்டார்கள். அவர்களால் ஒரு மட்டுப்படுத்தப்பட்டளவில்தான் செயற்பட முடியும். ஆனால் எமக்கு அங்கத்துவக்கட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக்குழு உள்ளது. அந்தக் குழுவில் பாராளுமன்றத்தில் இடம் பெறாதவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். ஆனால் இந்த ஒருங்கிணைப்புகுழு கூட்டங்களில், பாராளுமன்ற குழுவில் இருப்பவர்கள் சமூகமளிப்பதில்லை. அழைக்கப்படுவதுமில்லை. இதனால் அவர்களின் உள்ளக குழறுபடிகளை சுட்டிக்காட்ட முடிவதில்லை.

ஆசனப்பங்கீடு தொடர்பில் கொழும்பில் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் எடுத்த முடிவுகளில் பல மாவட்ட மட்டங்களில் உதாசீனப் படுததப்பட்டது. அதை தமிழரசுக் கட்சியின் தலைமை மறுத்துரைத்து, முடிவுகளை அமுல்படுத்தியிருக்க வேண்டும்.

உள்ளூராட்சி தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா, அம்பாறை மாவட்டங்களில் இந்த பிரச்சனையிருந்தது. எடுக்கப்பட்ட முடிவுகளை மாவட்ட தலைமைகள் மீறி செயற்பட முனைந்தபோது, அது தட்டிக் கேட்கப்படவில்லை. ஆனால் இந்த நிலைமை ரெலோவிலோ, புளொட்டிலோ இருக்கவில்லை. இரண்டு கட்சிகளிலும் தலைமையை மீறி யாரும் வாலாட்ட முடியாது. ஆனால் தமிழரசுக்கட்சியில் உள்ளூராட்சி தேர்தலில் அந்த நிலைமை இருக்கவில்லை. இதனால்தான் பல குளறுபடிகள் ஏற்பட்டன. அவை தேர்தல் முடிவுகளிலும் எதிரொலித்துள்ளன.

**தீபம் : உள்ளூராட்சி தேர்தல் ஆசன பங்கீட்டில் ரெலோவிற்கு சற்று அதிகமாகவே ஆசனங்கள் வழங்கப்பட்டு, பொருத்தமான வேட்பாளர்களை கண்டறிய முடியாமல் ரெலோ நிறுத்திய வேட்பாளர்களால் தான் தோல்வி வீதம் அதிகரித்ததென்ற கருத்து தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களிடம் உள்ளதே?**

**என்.சிறீகாந்தா:** தமிழரசுக்கட்சிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களை தமிழரசுக் கட்சி வென்றெடுத்த விகிதாசாரத்தை விட, எமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தை நாம் வென்றெடுத்த விகிதாசாரம் அதிகம். அதை என்னால் நிரூபிக்க முடியும். நாம் கோரிய சில வட்டாரங்களை தமிழரசுக்கட்சி மறுத்து தான் எடுத்துக்கொண்டதால், அவர்கள் சம்பந்தப்படாத வேறு வட்டாரங்களில் நிறுத்த வேண்டியிருந்தது. உதாரணம் கோப்பாய். நாங்கள் புத்தூரை சேர்ந்த வேட்பாளர்களை உரும்பிராயில் நிறுத்தி வெற்றியும் கண்டோம். இதொரு உதாரணம். கோப்பாயில் எட்டு வட்டாரங்கள் எமக்கு ஒதுக்கப்பட்டன. அதில் ஏழு வட்டார வேட்பாளர்கள் வென்றார்கள். அதிலும் இருவர் தமது வட்டாரத்தைவிட்டு உரும்பிராய்க்கு போய் போட்டியிட்டார்கள். உரும்பிராயில் தமிழரசுக்கட்சிக்கு பலத்த எதிர்ப்பிருந்ததால் இந்த நிலைமை ஏற்பட்டது. புத்தூர் தமக்குத்தான் என தமிழரசுக்கட்சியின் உள்ளூர் மட்டத்தில் குறுகிய சிந்தனையிருந்தது. இப்படியான சிந்தனை பரவலாக காணப்பட்டது.

திருகோணமலை நகரசபையில் எமக்கு இரண்டு வட்டாரங்கள் ஒதுக்கியிருக்க வேண்டும். எதையும் ஒதுக்கவில்லை. இறுதியில் தமிழர்கள் பெரும்பான்மையில்லாத ஒரு வட்டாரத்தை ஒதுக்கினார்கள். திருகோணமலையின் ஏனைய பிரதேசசபைகளில் எந்த வொரு வட்டாரத்தையும் ஒதுக்கவில்லை. இதனால் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் சுயேட்சைக்குழுக்களை நிறுவி போட்டியிட்டார்கள்.

**தீபம்: புதிய அரசியலமைப்பிற்கான வாய்ப்பு இனி எந்தளவில் இருக்கும்?**

**என்.சிறீகாந்தா:** அறவே கிடையாது இந்த பாராளுமன்றத்தின் எஞ்சியுள்ள காலத்தில் என அடித்துக்கூறுவேன். எங்கள் பிரச்சனையை இந்த இரண்டு கட்சிகளாலும் ஆக்கபூர்வமாக கையாள முடியாது. அது தொடர்பில் எந்த கற்பனையும் எமக்கில்லை. கூட்டமைப்பிலுள்ள சிலர் இப்பொழுதும், இனப்பிரச்சனைக்கான தீர்வு புதிய அரசியல்சாசனத்தின் ஊடாக வருமென நம்புகிறார்கள். அதைப்பற்றி நான் எதுவும் கூற முடியாது.

இலங்கை சிங்களவர்களின் நாடு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

என்ற சிந்தனை சிங்கள கட்சிகளிடம் தொடர்கின்ற வரையில், ஒரு நீதியான அரசியல் தீர்விற்கு இடமில்லை. நாங்கள் வெளிப்படையாக இதை சொல்ல தயங்கவில்லை. உள்ளூராட்சி தேர்தல் மேடைகளிலும் சொன்னோம்.

இந்த பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்திற்குள் ஒரு அரசியல் தீர்வை எட்ட முடியவில்லையென்றால் நாங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு அரசியல் தீர்வைப்பற்றி தொடர்ந்து கனவுகண்டு கொண்டிருக்க முடியாது. நாங்கள் சமஷ்டி ஆட்சியை கோருகிறோம். அவர்கள் அதை தர தயாராக இல்லை. அவர்கள் தர தயாராக இல்லாத ஒன்றை பிடுங்கியெடுக்கும் வலிமையும் எம்மிடமில்லை. ஆகவே என்னதான் தீர்வு?


ஒன்றில் நாங்கள் அடங்கிப் போக வேண்டும். அல்லது இலங்கை தீவின் ஒற்றுமைக்கு அப்பால் நாங்கள் சிந்திக்க தயாராக வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனைபேர் இதை சிந்திக்க தயாராக இருக்கிறார்கள் என எனக்கு தெரியவில்லை.


இந்த பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்திற்குள் தீர்வு இல்லையெனில் நாங்கள் இந்த பிரச்சனையை சர்வ தேச சமூகத்தின் முன்பாக கொண்டு செல்ல வேண்டும். அதற்கான துணிச்சலும், நேர்மையும், அரசியல் முதிர்ச்சியுமுள்ள தலைமை எமக்கு தேவைப்படுகிறது.

அரசியலமைப்பில் கடந்த 30 வருடங்களாக காணி, பொலிஸ் அதிகாரம்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பை பாதுகாப்போம் என சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டு வரும் நாட்டின் தலைவர்கள், அதை பாதுகாப்பதில்லை.

இப்பொழுது நாம் செய்யக்கூடியது, காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைக்கு வழங்க வைப்பது. ஆயுதப்போராட்டம் எமக்கு தந்தது 13வது திருத்தம்தான். அதை அகிம்சைப் போராட்டமோ, சத்தியாக்கிரக போராட்டமோ, கறுப்புக் கொடி போராட்டமோ தரவில்லை. அந்த போராட்டத்தை கொச்சைப்படுத்தாமல் இதை சொல்கிறேன்.

பொலிஸ் அதிகாரத்தின் மூலம், எமது தமிழ் இளைஞர்கள் யுவதிகளை கொண்ட பொலிஸ் படையொன்று அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்பட்டால் 24 மணி நேரத்திற்குள் வாள்களுடன் திரியும் இந்த சின்னப்பையன்களையெல்லாம் அடக்கலாம். காணி அதிகாரத்தை எடுப்பதன் மூலம், எமது நிலங்களை காப்பாற்றலாம். கிழக்கின் அனேக பகுதிகள் பறிபோய்விட்டது. முல்லைத்தீவில் சிங்கள குடியேற்றம் சீறிக்கொண்டு வருகிறது.



**தீபம் : இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் அனைத்திற்கும் ஒரே விதமான முடிவுகளே கிடைத்துள்ளன. அப்படியிருக்க 2015 இல் இருந்து தீர்வுக்கான தெளிவான கால எல்லையை குறிப்பிட்டு உத்தரவாதமான வாக்குறுதிகள் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். மூன்று வருடம் கழிந்து இப்பொழுது அந்த அணுகு முறை சரியென நினைக்கிறீர்களா?**

**என்.சிறீகாந்தா:** 2009 வைகாசி 18ம் திகதி எமது ஆயுத பலம் வெளி நாடுகளின் உதவியோடு முறியடிக்கப் பட்ட பிறகு, மோசமான அழிவுகளை சந்தித்த தமிழினம் நிமிர்ந்து நடக்க முடியாமல் இன்னமும் நொண்டிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எமக்கு வேறுவழியிருக்க வில்லை.

ஆனால் இந்த வழிமுறையின் ஊடாக நாங்கள் சென்றதால் எங்களுடைய அனுபவங்கள் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. ஆட்சியாளர்கள் மாறுகிறார்கள். அவர்களுடைய அணுகுமுறை மாறவில்லை. அவர்களின் பேச்சுக்களும் அவர்களிற்கு முன்னால் இருந்த பிதாமகன்களின் பாணியில்தான் உள்ளன. 1930,40களில் சட்டசபைகளில் சிங்கள தலைவர்கள் ஆற்றிய உரையை படித்து பாருங்கள். அவர்களிற்கு பின்னர், அவர்களின் பிள்ளைகள் 1950,60களில் அதைத்தான் பேசினார்கள். இப்பொழுது பேரப்பிள்ளைகள் பேசிக்கொண்டிருக்கிறாரகள்.

சிங்கள ஆளும் வர்க்கம் இதிலிருந்து மாறப்போவதில்லை. இதனால்தான் 1968ஆம் ஆண்டிலேயே நாங்கள் மாணவர்களாக இருந்தபோது தனிஈழ கோரிக்கையை முன்வைத்தோம். அப்பொழுது அது எள்ளி நகையாடப்பட்டது. நகைச்சுவையாக பேசப்பட்டது. அதை முன்வைத்த எமது தலைவர் வீ.நவரத்தினம் தோற்கடிக்கப்பட்டார். அவருடன் இணைந்திருந்த நாங்கள் எல்லோருமே அரசியல் ஏமாற்றங்களை சந்தித்தோம். ஆனால் கிட்டத்தட்ட ஆறேழு வருடங்களில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. எல்லோரும் தமிழீழ கோரிக்கைக்கு பின்னால் அணி திரண்டார்கள்.

பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் சிங்கள அரசிற்கு அந்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் காலத்தில்கூட அவர்களிற்கு அந்த சந்தர்ப்பம் இருந்தது. நாங்கள் சந்தர்ப்பங்களை தவறவிட்டோம் என்று மாத்திரம் சொல்லமாட்டேன். விடுதலைப்புலிகளிற்கு நல்ல சந்தர்ப்பம் இருந்தது. அவர்கள் சுதந்திர ஈழத்தைகைவிடாமல் ஒரு சமரத்திற்கு போயிருக்கலாம்.

2007 இன் தொடக்கத்தில் தம்பி தமிழ்செல்வனிடம் அதை குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அடுத்த சந்திப்பில் அதற்கு பதிலளிப்பதை போல, நாங்கள் நேரடியாகவே ஈழத்தை வலியுறுத்தி நிற்போம் என எனக்கு கூறினார்.

பூரண சுயாட்சியை பெற்றுக் கொண்டு, சுதந்திர ஈழத்தை நோக்கி போயிருக்கலாம். ஆனால் விடுதலைப்புலிகள் இலக்கிலேயே ஒரே குறியாக இருந்ததால் அதை பயன்படுத்தவில்லை.

ஆனால் ஒரேநாட்டிற்குள் அதிகார பகிர்வை காண சிங்கள தலைவர்களிற்கு பல வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் அவர்கள் அதை பயன்படுத்துபவர்களாக இல்லை.

இனிமேல் இப்படியான சந்தர்ப்பங்கள் வரும் என்ற நம்பிக்கையுமில்லை. நாங்கள் மக்களை ஏமாற்ற முயாது. கடந்தகால படிப்பனைகள் எமக்கு முன்பாக உள்ளன.

ஒருமித்த நாட்டுக்குள் தீர்வை காண சம்பந்தன் முயன்று கொண்டிருக்கிறார். இதில் அவர் வெற்றிபெறுவார் என்ற நம்பிக்கை எமக்கில்லை. ஏனெனில், அது வெற்றிபெறுவது சம்பந்தனின் கையிலில்லை. சிங்கள அரசுகளின் கையிலேயே உள்ளது.

*(தொடரும்)*

# சி(ரி)த்ராலயா

## பிரிந்த நண்பர்கள்... ஒளிர்ந்த நட்பு!

ஸ்ரீதரும் கோபுவும் ஐந்தாம் வகுப்பில் தொடங்கி ஒன்றாகப் படித்தவர்கள். கோபுவின் வீடு செங்கல்பட்டு சின்னமணிக்காரத் தெருவில் இருந்தது. ஸ்ரீதரின் வீடு மறுகோடியில் நத்தம் என்ற பகுதியிலும் இருந்தது. பள்ளிவிட்டால் நண்பன் கோபுவைத் தேடி வந்துவிடுவார் ஸ்ரீதர். ஒன்பதாவது படிக்கும்போது ஸ்ரீதருக்குக் கலையார்வம் துளிர்த்தது. மனோகரா என்னும் நாடகத்தை எழுதி, பள்ளி ஆண்டு விழாவில் அரங்கேற்றினார். அதில் ஸ்ரீதர் கதாநாயகனாகத் தோன்ற, அதே நாடகத்தில் காமெடியன் ரோலில் சக்கை போடு போட்டார் கோபு.

அதுமட்டுமல்ல, நாடகத்தின் நகைச் சுவைப் பகுதியை கோபுதான் எழுதினார். ஸ்ரீதர்கோபு கூட்டணி முதல் முதலாக உருவானது பள்ளியாண்டு விழாவில்தான். இவர்கள் இருவருடன் ரங்கநாதன் என்ற மாணவனும் படித்தார். இவர்தான் 'கடுகு' அகஸ்தியன் என்ற பிற்கால எழுத்தாளராக உருவெடுத்தார். இவர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடிவிட்டால் அவர்கள் இருக்கும் இடம் கண ஜோராகக் களை கட்டிவிடும். அடிக்கடி சாகசங்களிலும் இறங்கிவிடுவார்கள்.

### காப்பாற்றிய கதாநாயகன்

அப்போது பாலாற்றுக் கரையில் மாந்தோப்புகள் நிறைய உண்டு. அந்தத் தோப்பு மாங்காய்களைத் திருடி அவற்றைத்துவைக்கிறகல்லில்உடைத்து உப்புக்கல் வைத்துத் தின்றால்தான் ருசி. தோட்டக்காரர் இல்லாத சமயத்தை உளவறிந்து மாங்காய் அடிக்கச் செல்ல வேண்டும். அப்படி மதிய சாப்பாட்டுக்கு அவர் சென்றிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு ஸ்ரீதரும் கோபுவும் தோப்புக்குள் நுழைந்து மாங்காய் அடித்துக்கொண்டிருந்தார்கள். மாயக்காரன் மாதிரி அங்கே திடீரென்று வந்து நின்றார் தோட்டக்காரர். ஸ்ரீதர் உட்பட எல்லோரும் அலறி அடித்து ஓட்டம் பிடித்துவிட, சுதாரிப்பதற்குள் கோபுவைக் கொத்தாகப் பிடித்துக்கொண்டார் தோட்டக்காரர்.

பள்ளிக்கூடப் பிள்ளை என்று கூடப் பார்க்காமல் கோபுவின் முதுகை மத்தளம் ஆக்கினார் தோட்டக்காரர். இரக்கமில்லாத தோட்டக்காரர் ஆத்திரம் அடங்காமல் மாங்காய் திருடிய கள்வர்களின் தலைவனைப் பிடித்துவிட்டது போன்ற கர்வத்துடன் கோபுவை மரத்தில் கட்டிப் போட்டார். ஆனால், கோபுவுக்கு நண்பன் மீது நம்பிக்கை இருந்ததால் மரங்களில் தொங்கிக்கொண்டிருந்த மாங்காய்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஸ்ரீதர் தனக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதரை அழைத்து வந்து கோபுவை மீட்டுக்கொண்டுபோனார்.

"என்னை மரத்தில் கட்டிப் போட்ட விவகாரத்தை யாரிடமும் சொல்லக் கூடாது" என்று சத்தியம் செய்யச் சொன்னார் கோபு. ஸ்ரீதரும் சத்தியம் செய்துகொடுத்தார். ஆனால், மறுநாள் பள்ளிக்கூட மணியை அடித்துக்கொண்டே பியூன் கோபுவைப் பார்த்து "இன்னா கோபு, மாந்தோப்புல செம மாத்து மாத்திட்டாங்களாமே?" என்றான். அவன் கேட்ட விதம் பள்ளிக்கூடம் முழுவதும் மணியடித்துச் சொல்லி விட்டேன் என்பது போல இருந்தது கோபுவுக்கு.

"என்னடா ஸ்ரீ! நீ செய்த சத்தியம் அவ்வளவுதானா?" கோபு கோபத்துடன் கேட்டார்.

"டேய் நீ மாட்டிக்கிட்டதும் உன்னைக் காப்பாத்தனுமேன்னுதான் நான் தப்பிச்சுப்போனேன். நானும் உன்னோட மாட்டியிருந்தா நம்மள யார் காப்பாத்தியிருப்பா சொல்லு?" என்று ஸ்ரீதர் பதில் சொன்னதும் கோபுவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.



ஓய்வுத் தருணம் ஒன்றில் கோபுவும் ஸ்ரீதரும்...



'காசேதான் கடவுளடா' படத்தில் லட்சுமி, முத்துராமன், 'தேங்காய் சீனிவாசன், ஸ்ரீகாந்த்...

### கேள்வித்தாள் வள்ளல்

பள்ளித்தேர்வு நேரம் நெருங்கி விட்டால் காமெடியன் கோபு ஹீரோவாக மாறிவிடுவார். கோபுவுடைய தந்தை துரைசாமிதான் இருவருக்கும் வகுப்பு வாத்தியார். அவர் வீட்டு பீரோவில்தான் கேள்வித்தாள்கள் அடங்கிய பைலை வைத்திருப்பார். ஸ்ரீதர் கோபுவை விசேஷமாகக் கவனிப்பார். கோபுவும் பீரோவைத் திறந்து தன் அப்பாவுக்குத் தெரியாமல் கேள்வித்தாள்களில் ஒன்றை உருவிடுவார். கேள்வித்தாள் இருந்து விட்டால் போதுமா, புத்தகத்தில் பதில்கள் எங்கே இருக்கின்றன என்று தேட வேண்டுமே! ஸ்ரீதரும் கோபுவும் ரங்கநாதனைத் தேடி ஓடுவார்கள்.

கையில் கேள்வித்தாள் கிடைத்ததும் ஸ்ரீதரும் கோபுவும் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டை தாண்டவே மாட்டார்கள். இருவரும் பார்டர் மார்க் மேதாவிகள். ஆனால், ரங்கநாதன் மட்டும் சென்டம் வாங்கிவிடுவார்.

கோபுவையும் ஸ்ரீதரையும் குறித்து துரைசாமி வாத்தியாருக்கு எந்தச் சந்தேகமும் எழவில்லை. ஆனால், ரங்கநாதன் சென்டம் வாங்குவதைப் பார்த்து வியந்துபோன அவர், அந்தத் தகிடுதத்தத்தின் சூத்திரதாரிகள் கோபுவும் ஸ்ரீதரும் என்று தெரிந்து சுதாரித்துக்கொண்டார் வாத்தியார். தேர்வு நேரங்களில் கோபுவை வீட்டுச் சிறையில் தள்ளிவிடுவார். ஆனால், கோபு அசர மாட்டார். புழக்கடையிலிருந்து சின்ன சின்ன கற்களைப் பொறுக்கி வைத்து, கேள்வித்தாள்களைக் கல்லில் சுற்றி மடித்து வீதியில் எறிவார்.

ஸ்ரீதர் அதை லாகவமாகப் பிடித்து, ரங்கநாதனிடம் கொண்டுபோய்ச் சேர்த்து அவர் இரக்கப்பட்டுத் தரும் பார்டர் மார்க் பதில்களை மட்டும் தெரிந்துகொண்டு பதில்களை எழுதி, நண்பனுக்காக மீண்டும் கோபுவின் வீட்டு மாடியை நோக்கி கல்லில் எறிய, கோபு அதைத் தாவிப் பிடிப்பார். இந்தப் பரிமாற்றத்தில் தொடங்கிய இவர்களது லட்சியக் கூட்டணி, பின்னாளில் கதைவசன தாள்களின் பரிமாற்றத்தில் முடியும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்களா என்று தெரியவில்லை.

### பிரிந்த நண்பர்கள்

பள்ளி இறுதி வகுப்பு முடிந்ததும் ஸ்ரீதருடைய அப்பா அவரைக் கூட்டுறவு அலுவலகத்தில் வேலையில் அமர்த்திவிட்டார். ஸ்ரீதருடன் திரிந்து கொண்டிருந்த கோபுவை எப்படியாவது பிரித்துவிட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அவரைக் காரைக்குடிக்கு நாடு கடத்துவதுபோல அழைத்துச் சென்று அழகப்பா கல்லூரியில் இன்டெர்மீடியேட் படிப்பில் சேர்த்தனர். இதற்கு கோபு ஒப்புக்கொள்ள மாட்டார் என்று தெரிந்துகொண்ட கோபுவின் பெற்றோர், அழகப்பா கல்லூரில் புகழ்பெற்ற கிரிக்கெட் டீம் இருப்பதை எடுத்துக்கூறி ஆசை காட்டி அவரைக் கல்லூரியில் அடைத்துவிட்டு வந்தார்கள்.

அதை உண்மை என்று நம்பிய கோபு, கல்லூரியின் கிரிக்கெட் அணியில் சேர்ந்து திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி வெல்வதற்குக் காரணமாக இருந்தார். ஆனால், நண்பன் ஸ்ரீதர் நம் அருகில் இல்லையே என்ற கவலை அவரை அரித்துக்கொண்டேதான் இருந்தது.

அங்கிருந்து கோபுவுக்கு கடிதங்கள் எழுதி தனது நட்பைப் பத்திரமாக வைத்துக்கொண்டார். காரைக்குடியில் கோபு படித்துக்கொண்டிருந்தபோது அழகப்பா கல்லூரியின் பொறியியல் துறை கட்டிடத்தைத் திறப்பதற்காக வந்திருந்தார் பிரதமர் ஜவாஹர்லால் நேரு. சிவப்பு சிங்கமாக நின்றிருந்த காஷ்மீர் ஆப்பிள் நேருவைத் தொட்டுக் கைகுலுக்கி, நண்பன் ஸ்ரீதரிடம் பீற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை.

ஆனால், நேருவை நெருங்க முடியவில்லை. மானசீகமாக நேருவின் கையைக் குலுக்கிவிட்டு, அவர் கல்லூரிக்கு வந்து சென்ற நிகழ்வை நண்பனுக்கு கோவையாக எழுதி அனுப்பினார். அவ்வளவு சீக்கிரம் பாராட்டிவிடாதவர் ஸ்ரீதர், 'நானே நேருவைக் கண்டதுபோல் நல்ல வர்ணனையில் எழுதியிருக்கிறாய் சினேகிதா' என்று ஸ்ரீதரிடமிருந்து பாராட்டு வரிகளுடன் பதில் வந்தது.

காரைக்குடியில் கோபு தங்கியிருந்த இடத்தின் பெயர் கல்லுக்கட்டி. அங்கிருந்த குளக்கரை எதிரில் இருந்த ஏ.வி.எம் சன்ஸ் கட்டிடத்தின் மாடியில்தான் நண்பர்களோடு தனது அறையைப் பகிர்ந்திருந்தார் கோபு. 'வேதாள உலகம்', 'வாழ்க்கை' போன்ற ஏ.வி.எம்மின் படங்களை அங்கிருந்த சரஸ்வதி தியேட்டரில் பார்த்த கோபு, எப்படியாவது ஏ வி எம் செட்டியாரைச் சந்தித்து அவரைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்திருந்தார்.


ஆனால், பிற்காலத்தில் 'காசேதான் கடவுளடா' நாடகத்தை ஏ.வி.எம். செட்டியார் வாங்கி, திரைப்படமாகத் தயாரித்து, அதைத் தன்னையே இயக்கச் சொல்வார் என்று கோபு சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. விதி இப்படித்தான் சிறு சிறு சம்பவங்களின் மூலமாக எதிர்காலத்துக்குக் கட்டியம் கூறும் என்பதை கோபு அப்போது உணர்ந்திருக்கவில்லை.

சிரிப்பு தொடரும்

1970களில் நடக்கின்ற கதை. கல்லூரி இளம் மாணவி அலியா பட், கவலை என்பதையே அறியாத ஒரு சந்தோஷப் பறவை. திடீரென்று ஒருநாள் அவருடைய வாழ்க்கையே திசை மாறுகிறது. இந்தியப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் அவரது அப்பா ரஜித் கபூர், பாகிஸ்தானைச் சேர்ந்த ராணுவ வீரர் விக்கி கவுஷலுக்கு அலியாவை திருமணம் செய்து வைக்கிறார். விக்கியின் அப்பாவும், ரஜித் கபூரும் பிரிவினைக்கு முன்பு இருந்தே நண்பர்கள். திருமணம் ஆகிச் செல்கின்றபோதுதான் அலியாவுக்குத் தெரிகிறது. தான் ஒரு உளவாளியாக விக்கியின் வீட்டுக்குச் செல்வது. அதன்பிறகு ஒவ்வொரு கணமும் மரணத்தை நெருங்கியபடி, நாட்டுக்காக ரிஸ்க் எடுக்கிறார்.

இந்நிலையில் அலியாமீது அதீத காதலும், நம்பிக்கையும் வைத்திருக்கும் விக்கியின் அன்பு, அலியாவைத் தவிக்க வைக்கிறது. இறுதியில் நடப்பது, இதயங்களை நொறுக்கும் கிளைமாக்ஸ். கவிஞர், எழுத்தாளர், இயக்கு னர் என பன்முகம் கொண்டவர், ஆஸ்கர் வென்ற குல்சார். அவரது மகள் மேக்னா குல்சார் இயக்கி இருக்கிறார். இதற்குமுன் அவர் சில படங்களை இயக்கி இருந்தாலும், இந்த ஒரே படத்தால் அப்பாவின் உயரத்தை தொட முயன்றுள்ளார்.

சீட்டின் நுனியில் ரசிகர்களைக் கொண்டு அமர்த்தும் காட்சிகளும், திரையில் இருந்து பார்வையை ஒரு கணமும் அகலவிடாத திரைக்கதையும் மேக்னாவின் மாயாஜாலம். தியேட்டரிலிருந்து வெளிவரும்போது, ஒருவித வலியுடன் ரசிகனைத் திரும்ப வைப்பதில்தான் அவர் ஜெயிக்கிறார். அலியா பட், மாடர்ன் துறுதுறு கேரக்டர்களுக்கு மட்டுமே லாயக்கு என்று, மசாலா டைரக்டர்கள் சிலர் முடிவு கட்டியிருந்தனர். உட்தா பஞ்சாப் என்ற படத்திலேயே அதை மாற்றிக் காட்டியவர், இதில் மிரட்டிக் காட்டியிருக்கிறார், தன் நடிப்பை. படத்தின் ஆரம்பத்தில் வரும் அந்த அப்பாவி கல்லூரிப் பெண்ணுக்கும், திருமணத்துக்குப் பிறகு வரும் அலியாவுக்குமே எத்தனை வித்தியாசங்கள் தெரிகின்றன. ரஜித் கபூர், விக்கி கவுஷல் என எல்லோருமே கொடுத்த கேரக்டர்களில் கில்லி ஆடியிருக்கிறார்கள். முதல் பகுதியின் ஆரம்பத்தில் சில காட்சிகள் மெதுவாக நகர்வது மட்டும்தான் திருஷ்டிப் பொட்டு. ஆனால், சீக்கிரமே திரைக்கதை தனது சரியான ட்ராக்கைப் பிடித்து விட, அதிவேகம் எடுக்கிறது படம். எடிட்டர் நிதின் பைத், படத்தின் இன்னொரு ஹீரோ என்று கூட சொல்லலாம். சங்கர் எஹசான் லாய், பாடல்களை விட பின்னணி இசையில் பிரமாதப்படுத்தி இருக்கிறார்கள்.






## மீண்டும் நடிக்கிறார் ஸ்ரேயா!

திருமணத்தின் பின் நடிப்பதா வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தார் ஸ்ரேயா. அவர் தொடர்ந்து நடிக்க கணவர் அனுமதி அளித்தார். ஆனாலும் பொருத்தமான வாய்ப்புகள் வரவில்லை. திருமணத்துக்கு முன்பு ஸ்ரேயா நடித்த நரகாசூரன் உள்ளிட்ட 3 படங்கள் திரைக்கு வராமலிருக்கிறது. இந்நிலையில் அவருக்கு புதியபட வாய்ப்பு வந்திருப்பதால், நடிப்பை தொடர முடியும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறார். டோலிவுட்டில் என்.டி.பாலகிருஷ்ணாவுடன் கடந்த ஆண்டு 'கவுதமிபுத்ர சதக ரனி'படத்தில் நடித்திருந்தார் ஸ்ரேயா. தற்போது மீண்டும் அவருடனே ஜோடிபோட ஸ்ரேயாவுக்கு வாய்ப்பு அமைந்திருக்கிறது. இப்படத்தை வி.வி.விநாயக் இயக்க பேச்சு நடக்கிறது. ஏற்கனவே என்.டி.ராமராவ் வாழ்க்கை சரித்திரத்தில் பால கிருஷ்ணா நடித்து வருகிறார். இப்படத்தில் இயக்குனர் தேஜாவுக்கும். பாலகிருஷ்ணாவுக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டதையடுத்து தேஜா விலகுவதாக கூறினார். எனவே இப்படத்தின் படப்பிடிப்பு தொடர முடியாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இப்படத்தின் இயக்குனர் பொறுப்பை பாலகிருஷ்ணாவே ஏற்க வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## டா[illegible]ன் படத்தில் அமிதாப்!

முழுக்க முழுக்க பாலிவுட் நடிகையாகவே மாறிவிட்டார் டாப்சி. நான் சபானா படத்திற்கு பிறகு ஆக்சன் படங்களிலும் நடிக்க தொடங்கி உள்ளார். அந்த வகையில், தற்போது பாட்லா என்றொரு ஹிந்தி படத்தில் கதையின் நாயகியாக நடிக்கிறார் டாப்சி. சுஜாய் கோஷ் இயக்கும் இந்த திரில்லர் படத்தில் அமிதாப்பச்சனும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தில் அமிதாப்பச்சனுடன் நடித்தது சிறந்த அனுபவம் என்று கூறியுள்ள டாப்சி, அவரது காட்சிகள் படத்திற்கு பெரிய பலமாக அமைந்திருக்கிறது என்றும் கூறியுள்ளார். இருவரும் ஏற்கனவே பிங்க் என்ற படத்தில் நடித்திருக்கின்றனர்.

## ஜெமினியின் குடும்பத்திற்குள் குழப்பம்

காதல் மன்னன் ஜெமினி கணேசன் அலுமேலு, புஷ்பவள்ளி, நடிகை சாவித்ரி என 3 பேரை திருமணம் செய்துகொண்டார். அலுமேலு மகள் கமலா செல்வராஜ். சாவித்ரி மகள் விஜய சாமுண்டீஸ்வரி. சமீபத்தில் சாவித்ரி வாழ்க்கை வரலாறு படம் 'நடிகையர் திலகம்'பெயரில் திரைக்கு வந்தது. சாவித்ரி கதாபாத்திரத்தை கீர்த்தி சுரேஷ் ஏற்று நடித்தார். சாவித்ரி வாழ்க்கைபற்றிய பெரும்பாலான விஷயங்களை அவரது மகள் விஜய சாமுண்டீஸ்வரி பட இயக்குனர் நாக் அஸ்வின், கீர்த்தி சுரேஷிடம் கூறியிருந்தார். அதன் அடிப்படையிலும், உண்மை சம்பவங்களின் அடிப்படையிலும் இப்படம் உருவாக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. சாவித்ரி குடிப்பழக்கத்துக்கு அடிமையாவதுபோன்ற காட்சி படத்தில் இடம்பெறுகிறது.

அவரை குடிக்கச் சொல்லி ஜெமினி கணேசன் வற்புறுத்துவது போன்ற காட்சியில் ஜெமினி வேடம் ஏற்று துல்கர் சல்மான் நடித்திருந்தார். அப்போதுமுதல் சாவித்ரி குடிப்பழக்கத்தை தொடங்குவதுபோல் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தை பார்த்த சாவித்ரி மகள் விஜய சாமுண்டீஸ்வரி, இயக்குனர், கீர்த்தி சுரேஷுக்கு பாராட்டு தெரிவித்திருந்தார். ஆனால் ஜெமினியின் மற்றொரு மகளான டாக்டர் கமலா செல்வராஜ் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். இதுபற்றி அவர் கூறும்போது,'எனது தந்தை ஜெமினிகணேசனைப்பற்றி தவறாக இப்படத்தில் சித்தரித்திருக்கிறார்கள். அந்த நாட்களில் எனது தந்தை ஸ்டார் ஹீரோக்களில் ஒருவராக இருந்தார்.

சாவித்ரிக்கு எனது தந்தை ஜெமினிதான் குடிப்பழக்கத்தை கற்றுத்தந்ததுபோல் காட்சி அமைத்திருப்பது வேதனை அளிக்கிறது. பிராப்தம் படத்தை சாவித்ரி உருவாக்கும்போது என் தந்தையும் நானும் சாவித்ரி வீட்டுக்கு சென்றோம். ஆனால் அவரது உறவினர்களும், வாட்ச்மேனும் எங்களை வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை. அதன்பிறகு அவரது வீட்டுக்கு நான் சென்றது கிடையாது'என்றார் கமலா.

## மாஜி காதலனின் பெயரை அழித்த தீபிகா

பாலிவுட் காதல் ஜோடிகள் இணைவதும் பிரிவதும் சகஜமாகிவிட்டது. கோச்சடையான் படத்தில் நடித்த தீபிகா படுகோன் இந்தியில் பல்வேறு படங்களில் ரன்பீர் கபூருடன் இணைந்து நடித்துள்ளார். அவர்களுக்குள் காதல் மலர்ந்த நிலையில் தீபிகா தனது முதுகுப்புறத்தில் ஆர்கே என்று டாட்டூ போட்டுக்கொண்டார். ரன்பீர் கபூர் என்பதின் சுருக்கமே ஆர்கே. இந்நிலையில் இருவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டதையடுத்து காதலை பிரேக் அப் செய்துகொண்டனர். தீபிகாவுக்கும் பாலிவுட் முன்னணி ஹீரோக்களில் ஒருவரான ரன்வீர் சிங்கிற்கும் காதல் மலர்ந்தது, அதேபோல் கத்ரின் கைப்புடன் ரன்வீர் கபூருக்கு காதல் மலர்ந்தது. இவர்களில் கத்ரினா, ரன்வீர் கபூர் ஜோடி லிவிங் டு கெதர் பாணியில் வசித்தனர். வருடக்கணக்கில் நீடித்த இந்த காதலும் பிரேக்அப்பில் முடிந்தது. ஆனால் ரன்வீர்சிங், தீபிகா காதல் நீடிக்கிறது. இருவரும் அடிக்கடி டேட்டிங் செய்வதுடன், படங்களிலும் இணைந்து நடிக்கின்றனர். இருவரும் இணைந்து நடித்த பத்மாவத் படம் சில அமைப்பினரின் எதிர்ப்புக்குள்ளானபோதும் வெற்றிபெற்றது. இதில் இருவரும் எதிரும் புதிருமாக நடித்திருந்தனர். ஆனாலும் இப்படத்தின் சிறப்பு காட்சி திரையிட்டபோது ஜோடியாக வந்து படம் பார்த்தனர். இருவருக்கும் திருமண ஏற்பாடு நடந்துவருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் தீபிகா தனது மாஜி காதலன் பெயரில் பதிவிட்ட ஆர்கே என்ற டாட்டூவை நீக்கி இருக்கிறார். கடந்த ஆண்டு கேன்ஸ் படவிழாவிற்கு வந்தபோது ஆர்கே டாட்டூ தீபிகா முதுகுப்புறத்தில் தென்பட்டது. இம்முறை அவர் பங்கேற்றபோது அந்த டாட்டூ அழிக்கப்பட்டிருந்தது.




## ரூட்டை மாற்றுவாரா சந்தானம்?

டிவியில் இருந்து சினிமாவிற்கு வந்து வெற்றிபெற்றவர்கள் சிவகார்த்திகேயனும், சந்தானமும். சிவகார்த்திகேயன் ஹீரோவாக வெற்றிபெற, காமெடியனாக வெற்றிபெற்ற சந்தானத்துக்கும் ஹீரோ ஆசை பிடித்துக் கொண்டது. இதுவரை அவர் நாயகனாக நடித்த படங்களில் தில்லுக்கு துட்டுபடம் மட்டும்தான் ஓடியது. எப்போதே எடுத்து முடிக்கப்பட்ட சர்வர் சுந்தரம்பல வெளியீட்டுத் திகதிகளை அறிவித்து, பிறகு தள்ளிப் போய் கடைசியாக இப்போது ஜூலை 6ம் திகதியன்று வெளியாகும் என அறிவித்திருக்கிறார்கள். சந்தானம் நாயகனாக நடிக்க ஆரம்பித்த ஓடி ஓடி உழைக்கணும் படமும் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது. கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தின் இயக்குனர் மணிகண்டன் இயக்கத்தில் இப்படம் 2016ம் ஆண்டில் ஆரம்பமானது. சில காட்சிகள் மட்டும் படமாக்கப்பட்டு பின்னர் அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டது. சந்தானம் நடித்து கடைசியாக வெளிவந்த சக்க போடு போடு ராஜா படம் தோல்வியடைந்த்தால் சந்தானத்திற்கு இருக்கும் வியாபாரமும் போய்விட்டது. தற்போது எந்த புதிய படங்களிலும் நடிக்காமல் வீட்டிலேயே கிடக்கிறாராம். மீண்டும் நகைச்சுவை நடிகராக நடிக்க வந்தால் வருமானமும் வரும், பழைய பெயரும் வரும், ஆனால் அவர் வருவாரா ? என கோலிவுட்டிலேயே கேட்டு அவரை அணுகாமல் இருக்கிறார்களாம்.

## அர்ஜூன் ஏன் வில்லனானார்?

விஷால் நடித்திருக்கும் இரும்புத்திரை படத்தில் வில்லனாக நடித்துள்ளார். வில்லனாக நடித்ததை பற்றி, அர்ஜூன் கூறியுள்ளார். "விஷால் தந்தையும் நானும் நண்பர்கள். அவர்தான் விஷாலை என்னிடம் உதவி இயக்குனராக சேர்த்துவிட்டார். இயக்கம் கற்க வந்தவரை ஒரு காட்சியில் நடிக்க வைத்தேன். அவரது நடிப்பு திறமை எனக்கு தெரியவந்தது. அவரது தந்தையிடம் இதுபற்றி சொன்னபோது விஷாலை வைத்து செல்லமே படம் தயாரித்தார். படம் வெற்றி பெற்றது. இன்று வெற்றிகரமான ஹீரோவாக இருக்கிறார் விஷால். தயாரிப்பாளராக, நடிகர் சங்க பொதுச் செயலாளராக, தயாரிப்பாளர்கள் சங்க தலைவராக பொறுப்பு வகிக்கிறார். இரும்புத்திரை படம் டிஜிட்டல் மயமான நவீனயுகத்தில் என்னென்ன தவறுகள் நடக்கிறது என்பதை சொல்கிறது. வில்லன் வேடம் என்றாலும் வித்தியாசமானதாக இருந்ததால் மகிழ்ச்சியுடன் இதில் நடித்தேன். இவ்வாறு அர்ஜூன் கூறினார். இதுபற்றி விஷால் கூறும்போது, "ஆர்யாதான் இப்படத்தில் வில்லனாக நடிக்கவிருந்தார். அப்போது இந்த கதாபாத்திரம் வேறுமாதிரி டிசைன் செய்யப்பட்டிருந்தது. அர்ஜூன்சார் நடித்துள்ள இந்த கதாபாத்திரம் நல்ல பெயரை பெற்றுள்ளது" என்றார்.

## நாகசைதன்யாவுடன் ஜோடி சேரும் ரகுல் பரீத் சிங்

மகேஷ்பாபுவுடன் நடித்த ஸ்பைடர் படத்தின் தோல்விக்கு பிறகு தெலுங்கில் படவாய்ப்புகளே இல்லாமல் இருந்தார் ரகுல் பிரீத் சிங். தமிழ், ஹிந்தி படங்களில் நடித்தபடி தொடர்ந்து தெலுங்கு படங்களுக்காக முயற்சி எடுத்து வந்த அவருக்கு இப்போது நாக சைதன்யாவுடன் நடிக்கும் ஒரு படவாய்ப்பு கிடைத்துள்ளது. வெங்கடேஷ் · நாகசைதன்யா இணைந்து ஒரு மல்டி ஹீரோ படத்தில் நடிக்கிறார்கள். பாபி இயக்கும் இந்த படம் ஜூன் மாதம் தொடங்குகிறது. இந்த படத்தில் வெங்கடேஷ்க்கு ஜோடியாக நடிக்கும் நாயகி இன்னும் முடிவாகாத நிலையில், நாக சைதன்யாவுக்கு ஜோடியாக ரகுல்பிரீத் சிங் நடிப்பது உறுதியாகியிருக்கிறது. இதற்கு முன்பு நாகசைதன்யா ரகுல்பிரீத்சிங் ஆகிய இருவரும் ராரண்டாய் வேடுகா சுதன் என்ற படத்தில் ஜோடி சேர்ந்துள்ளனர். இது அவர்கள் இணையும் இரண்டாவது படமாகும்.

## ஆட்டம் போட்ட சார்மி

நடிகை சார்மி படங்களில் நடிக்காமல் தயாரிப்பு பொறுப்பாளராக இயக்குனர் புரி ஜெகனாத் படங்களில் பணியாற்றி வருகிறார். சமீபத்தில் அவர் பணியாற்றிய மெகபூபா படம் திரைக்கு வந்தது. இந்நிலையில் சார்மி ஓட்டல் பார் ஒன்றில் பீர் பாட்டிலை ஒரு கையிலும், பீர் நிரப்பிய கிளாசை மற்றொரு கையிலும் பிடித்தபடி குத்தாட்டம்போடும் வீடியோ இணைய தளத்தில் வெளியானது. இதுபற்றி ரசிகர்கள் கமெண்ட் பகிர்ந்து வருகின்றனர். பாட்டிலும் கையுமாக சார்மி ஆடும் ஆட்டத்தை பலர் விமர்சனம் செய்திருக்கின்றனர். மெஹபூபா படம் ரிலீஸ் ஆன சந்தோஷத்தில் இப்படி ஆட்டம்போட்டாரா? அல்லது கடினமான அப்படத்தை வெற்றிகரமாக முடித்து கொடுத்தோம் என்பதால் ஆட்டம்போடுகிறாரா? சார்மியின் பிறந்தநாள் பார்ட்டியா? என்பதுபற்றி அவர் தரப்பிலிருந்து விளக்கம் எதுவும் தரப்படவில்லை.

## மனிஷா யாதவின் அடுத்த ரவுண்ட்


வழக்கு எண் 18/9, ஆதலால் காதல் செய்வீர், ஜன்னல் ஓரம், பட்டய கிளப்பணும் பாண்டியா போன்ற படங்களில் கதாநாயகியாக, கிளாமர் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நடித்தவர் மனிஷா யாதவ். ஆனால் பட வாய்ப்புகள் பெரிதாக வரவில்லை. திரிஷா இல்லனா நயன்தாரா படத்தில் கிளாமர் கதாபாத்திரத்தில் நடித்ததுடன், சென்னை 28 இரண்டாம் பாகத்தில் சொப்பன சுந்தரி பாடலுக்கு நடனம் ஆடி கவர்ச்சி விருந்து படைத்தார். கிளாமர், நடிப்பு என இரண்டு பாத்திரத்துக்கும் நடிக்க தயாரானதையடுத்து இயக்குனர்களின் பார்வை மனிஷா பக்கம் திரும்பியது. அடுத்து, 'ஒரு குப்பை கதை' படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. ஹீரோவாக நடன இயக்குனர் தினேஷ் நடித்துள்ளார். அஸ்லம் தயாரிக்க காளி ரங்கசாமி இயக்கி உள்ளார். இப்படத்தை ரெட் ஜெயண்ட் மூவிஸ் வெளியிடுகிறது. இப்படத்தின் ஆடியோ வெளியிடப்பட்டது. அதில் பேசிய உதயநிதி ஸ்டாலின்,'விஜய்சார் நடித்த குருவி படம் மூலமாக தயாரிப்பில் இறங்கி 10 வருடம் வெற்றிகரமாக ஓடிவிட்டது. மைனா போன்ற நல்ல படங்களை தந்தபோது பாராட்டினீர்கள். அதுபோன்று ஒரு நல்ல தாக்கத்தை ஒரு குப்பை கதை படமும் ஏற்படுத்தும்'என்றார்.

## விஷாலின் மனைவி தமிழ்ப்பெண்ணாம்!

தயாரிப்பாளர் சங்க தலைவராகவும், நடிகர் சங்க செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருபவர் நடிகர் விஷால். இவர் நடித்த இரும்புத்திரை கடந்த வாரம் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படம் தெலுங்கிலும் அபிமன்யுடு என்ற பெயரில் வெளியாக உள்ளது. இந்நிலையில் விஷால் அளித்த பேட்டி ஒன்றில், தனது திருமணம் பற்றி பேசியிருக்கிறார். அதில், நிச்சயம் ஒரு தமிழ் பெண்ணை தான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். அவர் யார் என்று இப்போது சொல்ல மாட்டேன். 2019ம் ஆண்டு ஜனவரியில் அறிவிப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

## உலக யன்னல்

தேசமித்ரன்



பலரும் ஆரூடம் கூறியபடியே வெனுசுவேலாவில் நடந்த பொதுத்தேர்தலில் பதவியிலிருக்கும் ஜனாதிபதி நிக்கொலாஸ் மதூரோ வென்றதாக நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. 48 விகிதத்தினர் வாக்களித்ததாகவும் அவற்றில் 68 விகிதமானவை மதூரோவுக்குச் சார்பாகவும் இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நாளுக்கு முன்பே வாக்காளர்கள் மீது போடப்பட்ட கண்காணிப்புக்கள், எதிர்க்கட்சி வேட்பாளர்களை ஒடுக்கியவை, மற்றும் இலவச விநியோகங்களால் தேர்தல் பிரச்சாரம் நியாயமான முறையில் நடாத்தப்படவில்லை என்று கண்காணிப்பு அமைப்புக்களாலும், சர்வதேசரீதியிலும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதேபோலவே தேர்தல் நாளிலும் பல வாக்குச்சாவடிகளில் பலவித தில்லுமுல்லுகள் நடாத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. தவிர, நிஜத்தில் வெறும் 30 விகித வாக்குகள் மட்டுமே போடப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மதூரோவுக்கு எதிராகப் போட்டியிட அனுமதிக்கப்பட்ட பல்கொன் 20 விகித வாக்குகள் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. மற்றைய எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணிக்கும்படி தமது ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்டன. அவர்கள் உட்பட சகல எதிர்க்கட்சிகளும் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றன.

வெனிசூவேலாவின் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக லத்தீன் அமெரிக்காவின் 14 நாடுகள் தங்களதுதூதர்களை வெனிசூலாவிலிருந்து திருப்பியழைத்திருக்கின்றன. அமெரிக்கா வெனிவேசூலாவின் மீது பொருளாதாரத்தடைகளை விதித்திருக்கின்றது.

வெனிசுவேலா ஒரு எண்ணெய் வளம் நிறைந்த நாடாக இருந்தாலும் அதை சர்வதேசத்தில் விற்க முடியாத நிலையே நீண்டகாலமாக இருந்து வருகிறது. காரணம் மதூரோவின் சர்வாதிகார ஆட்சியைத் தண்டிக்க உலகின் பெரும்பாலான நாடுகள் வெனிசூவேலாவுடன் வர்த்தகம் செய்ய மறுத்து வருவதாகும்.

அதனால் தனது எண்ணெய் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அரசின் எண்ணெய் நிறுவனம் தனது சொந்தக் கொள்வனவுகளுக்கான கட்டணங்களையும் பல வெளிநாடுகளுக்குச் செலுத்த முடியவில்லை. விளைவாக அந்த எண்ணெய் நிறுவனத்தின் கப்பல்கள் சர்வதேச நீருக்குள் சென்றால் அவற்றை கைப்பற்றுமாறு சர்வதேசக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தனது முக்கிய வருமானம் பாதிக்கப்பட்ட நிலையில் உள்நாட்டின் தேவைகளுக்கான முக்கிய தயாரிப்புக்கான முதலீடுகள் இல்லாமல் தவிக்கிறது வெனிசூவேலா. அதனால் நீண்டகாலமாகவே நாடெங்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

---

வெவ்வேறு திசைகளிலிருந்து ஆதிக்கம்மிகுந்த சர்வதேச சக்திகள் ஒன்றுடனொன்று வர்த்தக, அரசியல்ரீதியில் ஒருவருக்கொருவர் அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்க, 19.05 சனியன்று பிரிட்டனின் இளவரசர் ஹரியும் பிரபல அமெரிக்க நடிகை மெகன் மெர்க்லேயும் பிரமாண்டமாகத் திருமணம் செய்துகொண்டனர்.

சாகச வாழ்வில் ஆர்வமுள்ள ஹரியைப் 11 வயதிலிருந்தே பல பெண்கள் மொய்க்க ஆரம்பித்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பெண் சிநேகிதிகள் பலரை ஒன்றன்பின் ஒன்றாகச் சந்தித்துப் பழகி ஒதுக்கிவிட்டு கடைசியாக "முகமறியாத சந்திப்பு" ஒன்றில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மெகனிடம் பழகி காதல்கொண்டதாகச் சொல்கிறார் ஹரி. ஆரம்பத்தில் எவர் கண்ணிலும் படாமல் தென்னாபிரிக்காவிலுள்ள பிரத்தியேக உல்லாச விடுதியில் சந்தித்து மெகனும், ஹரியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டார்கள்.

தொடர்ந்து கனடாவில் பிரபல தொலைக்காட்சித் தொடரொன்றில் நடித்தபடி வாழ்ந்து வந்த மெகனை மாதத்துக்கு இரண்டுமுறை லண்டனிலிருந்து சென்று சந்தித்தும் வெவ்வேறு சாகச விளையாட்டுக்கள் செய்யும் இடங்களுக்கு விஜயம் செய்து வளர்ந்த இரண்டு வருட காதல் உலகின் பெரும்பகுதிகளிலும் பேசப்பட்டது. காதலின் உச்சக் கட்டமாக விண்ட்ஸர் அரண்மனையில் நடாத்திய திருமண வைபவம் உலகின் மூலைமுடுக்கிலெல்லாம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டுப் பெரும் வருமானத்தை ஈட்டியது மன்றி பிரிட்டனுக்கும் பெரும் பொருளாதார வருமானத்தை ஈட்டித் தந்ததாக குறிப்பிடப்படுகிறது.

---



பொதுத்தேர்தல்கள் நடத்தப்பட்டபோது எதிர்பாராத முடிவைப்பெற்ற நாடாகியது ஈராக். போர்களுக்கு பின்பு இரண்டாவது தடவையாக ஜனநாயகரீதியாக அங்கே தேர்தல்கள் நடாத்தப்பட்டன. ஐ.எஸ் என்றழைக்கப்படும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கம் ஈராக்கில் அழிக்கப்பட்டபின் நடாத்தப்பட்ட முதலாவது பொதுத்தேர்தல் இதுவாகும்.

மத்திய கிழக்கின் வழக்கமான ஷீயா சுன்னி மார்க்க இஸ்லாமியச் சக்திகளின் போட்டி இத் தேர்தலிலும் இருந்தது. அமெரிக்க அரசின் ஆதரவைப்பெற்று அரசு கட்டிலில் இருந்த பிரதமர் ஹைதர் அபாதியின் அணி 42 இடங்களை பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றது.

ஈராக்கில் பலமானதாக இருப்பது ஷீயா மார்க்க இஸ்லாமியர்களே. அவர்கள் இத் தேர்தலில் இரண்டு பிரிவாக பிரிந்து போட்டியிட்டார்கள். அமெரிக்காவை ஈராக்கிலிருந்து விரட்டுவதில் குறியாக இருக்கும் ஈரானின் ஆதரவைப்பெற்ற ஷீயா மார்க்க இயக்கத் தலைவரான ஹாதி அல் அமீரியின் அணியின் 48 வேட்பாளர்கள் வெற்றிபெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றார்கள். இவ்வணிதான் தேர்தலில் வெல்லும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

முக்தடா அல் சாதிர் என்ற பிரபல ஷீயா போதகரின் ஆதரவில் நின்ற அணியே ஈராக்கிய தேர்தலில் 54 இடங்களைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. வேட்பாளராக நிற்காத முக்தடா அல் சாதிர் ஷீயா மார்க்க இஸ்லாமியராக இருப்பினும் ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஈராக்கிய அரசியலில் இருந்து தள்ளியிருக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்.

கடந்த வருடம் சவூதி அரேபியா சென்று ஷீயா முஸ்லீம்களின் எதிரியான சவூதிய இளவரசன் முஹம்மது பின் சல்மானை சந்தித்து ஆதரவைப் பெற்றவர். லஞ்ச ஊழல்களால் ஸ்தம்பித்திருந்த அரசாங்கத்தில் வெறுப்படைந்த மக்களை ஒன்றுபடுத்திய ஒரு அணியை உண்டாக்கி வெற்றியடைந்திருக்கிறார். இவர் மூன்றாவது இடத்தைப்பெற்ற ஹைதர் அபாதியின் அணியினருடன் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் வலயத்தை விட்டு விலகி சமய வலயத்தை கவனித்தால் ரோமன் கத்தோலிக்க சமயத் திருச்சபைக்கு இரண்டு முக்கிய மூக்குடைப்புக்களைப் பெற்றிருக்கிறது. நீண்டகாலமாகவே திருச்சபையின் அமைப்பையும், பெருமையையும் காப்பாற்றுவதற்காக அதற்குள் தமது பாலியல் குற்றங்களை, முக்கியமான வயதுக்கு வராதவர்களை பாலியல் இச்சைகளுக்கு பாவிக்கும் பாதிரியார்களை காப்பாற்றி வருவதாக திருச்சபையின் மீது பல நாடுகளிலும் குற்றஞ் சுமத்தப்பட்டு வருகிறது. இது பற்றிய பல வழக்குகள் உலகின் பல நாடுகளில் நடந்து வருகிறது.



ஆஸ்திரேலியாவை சேர்ந்த பேராயர் பிலிப் வில்ஸன் அடிலெய்ட் நீதிமன்றத்தில் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இவர் சிறார்கள் மீது பாலியல் குற்றங்களை செய்த பாதிரியார்களை தனது சிறகுக்குள் வைத்துக் காப்பாற்றியதற்காக சிறைக்கனுப்படும் கத்தோலிக்க சமயத்தின் அதி முக்கிய புள்ளி ஆவார்.

1970 களில் ஆஸ்திரேலியாவில் பல சிறார்களை தனது பாலியல் இச்சைக்கு பாவித்தவர் ஜேம்ஸ் பிளெட்சர் என்ற பாதிரியார். 1990 களில் கைது செய்யப்பட்டு ஆஸ்திரேலியாவின் பல நீதிமன்றங்களில் இதே குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் பிளெட்சர். கத்தோலிக்க சமயபீடத்தின் நற்பெயரை காப்பாற்றுவதற்காக ஆஸ்திரேலியாவின் திருச்சபை மிகப்பெரும் செலவில் அப்பாதிரியாரை குற்றமற்றவர் என்று காட்ட வழக்கறிஞர்களை அமர்த்தி போராடியது.

தன்மீது சாட்டப்பட்ட பாலியல் குற்றங்களில் ஒன்பது குற்றங்களுக்காக பிளெட்சர் தண்டிக்கப்பட்டார். எட்டு வருட சிறைத்தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த போது 2006 இல் இறந்து போனார்.

பேராயர் பிலிப் வில்ஸன் தற்போது அல்ஸைமர் வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறார். அடுத்த மாதம் முதல் சிறைக்கனுப்பப்படவிருக்கும் அவரை காப்பாற்ற, அவரது வழக்கறிஞர்கள் தொடர்ந்தும் போராடுகிறார்கள்.

கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமன்றி பாப்பரசர் பிரான்சிஸுக்குமே இன்னொரு அவமானம் சிலி நாட்டின் திருச்சபைக்குள் நடப்பவை.

அங்குள்ள திருச்சபைக்குள் நடந்தபல பாதிரியார்களின் பாலியல் குற்றங்களை மறைப்பதில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர் மேற்றிராணியார் ஹுவான் பர்ரோஸ் என்பவராகும். அவர் பெர்னாண்டோ கரடிமா என்ற ஒருகாலத்தில் பிரபலமாக இருந்து வத்திக்கானாலும் சிறார்கள் மீதான பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர் என்று 2011 இல் தடைசெய்யப்பட்ட பாதிரியாரின் குற்றங்களை மறைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர். பிரான்சீஸோ பர்ரோஸுக்கு சிலியத் திருச்சபையில் மேலும் உயர்பதவி கொடுத்ததுமன்றி இவ்வருட ஆரம்பத்தில் சிலிக்கு விஜயம் செய்தபோது ஆதரித்து அறிக்கை விட்டார். அதனால் சிலிய நாட்டின் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் பாப்பரசருக்கு எதிராக மாறியிருக்கின்றனர்.

திருச்சபைக்குள் நடக்கும் பாலியல் குற்றங்கள் பற்றிய ஆராய்ச்சிக்காக பாப்பரசர் நியமித்த குழு சிலி திருச்சபைக்குள் நடந்த பாலியல் குற்றங்களைப் பற்றி வத்திக்கான் நடாத்திய ஆராய்ச்சியின் 2,300 பக்க அறிக்கை 18.05 வெள்ளியன்று வெளியானது. அவ்வறிக்கை அங்கே நடந்ததாக அறியப்பட்டவைகளை விட மோசமான குற்றங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அவ்வறிக்கையில் சிலி திருச்சபை உயர்மட்டத்தினர் அங்கே பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்த வாக்கு மூலம்கள், ஆதாரங்களை திட்டமிட்டே அழித்து விட்டது, திசைதிருப்பியது போன்றவை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. சிறார்களை தங்கள் பாலியல் இச்சைக்கு பாவித்த பாதிரியார்களை திருச்சபை காப்பாற்ற முற்பட்டமையும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.


விளைவாக சிலி நாட்டின் ஒவ்வொரு மேற்றிராணியார்களும் தங்கள் இடத்தைக் காலி செய்ய முன்வந்திருக்கின்றனர். காரணம் கத்தோலிக்க திருச்சபைக்குள் நீண்டகாலமாக நடந்து வந்த சிறார் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களும் அவைகளை பாப்பாண்டவர் உட்பட்ட சகல உயர்மட்டத்தினரும் மூடிமறைக்க முற்பட்டதும் ஆகும்.

பதவியிலிருக்கும் 31 மேற்றிராணியார்களும், ஓய்வுபெற்ற '3' மேற்றிராணியார்களும் தங்கள் ராஜினாமாவுக்கான கையெழுத்துக்களை பாப்பரசரிடம் கையளித்திருக்கின்றனர். சரித்திரரீதியாக ஒரு நாட்டின் கத்தோலிக்க திருச்சபையின் உயர்மட்டத்தினர் சகலரும் கூடிய மாநாட்டில் இப்படி நடப்பது இதுவே முதல் தடவையாகும். அவர்கள் ஒவ்வொருவரை பற்றியும் ஆராய்ந்து அவர்களை பதவியில் தொடர அனுமதிப்பதா, இல்லையா என்று முடிவு செய்வது பாப்பரசர் கையிலிருக்கிறது.

"நடந்தவைகளை எவரும் மூடி மறைக்க முடியாது, அடுத்தவர்களின் தோள்களிலும் சுமக்க வைக்க முடியாது" என்று அறிக்கைவிட்ட பாப்பரசர் பிரான்சீஸ் சிலிய மேற்றிராணிகள் எல்லோரும் உண்டாகியிருக்கும் நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியிருந்தார்.

---

சர்வதேச அரசியல் மோதலில் ஒரு பக்கம் அமெரிக்காவும் மறுபக்கம் ஐரோப்பிய ஒன்றியமும் நிற்கின்றன.



ஈரானின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளரான ஐரோப்பிய ஒன்றியம் 2015 ம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி ஈரானுடன் செய்து கொண்ட அணுத் தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் ஈரான் தொடரத் தயாராக இருப்பின் ஈரானுடன் வர்த்தகத் தொடர்புகளைத் தொடரத் தயாராக இருப்பதில் உறுதியாக இருப்பதாக அறிவிக்கிறது. அதன் மூலம் 08.05 இல் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அமெரிக்கா அதே ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாகவும் அதை மீறும் நாடுகளின் மீது வர்த்தகத்தடை விதிக்கும் என்று அறிவித்ததை மீறி சவால்விடவும் ஐரோப்பிய ஒன்றியம் தயாராக இருப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

"ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் ஷோன் கிளைவுட் யுங்கர் ஈரானிய எண்ணெய் விற்பனைக்கான விலையை எப்படி ஈரானிய வங்கிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கொடுக்கும் என்பதற்கான வழியை முன்வைத்துள்ளார். அதன்படி ஐரோப்பிய ஒன்றியம் ஈரானிய மத்திய வங்கிக்கு நேரடியாக அத்தொகைகளைக் கொடுக்கும். அதேபோலவே ஈரானிய மத்திய' வங்கி ஐரோப்பிய நிறுவனங்களுடன் செய்து கொள்ளும் வர்த்தகத் தொகைகளும் கையாளப்படும். அதன்மூலம் அமெரிக்கா ஈரானுடன் வர்த்தகத் தொடர்புகளைச் செய்யும் நிறுவனங்களை தண்டிக்க இயலாது." என்ற அறிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஈரானிய வெளிநாட்டமைச்சர் ஐரோப்பிய உயர்மட்ட தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பின்பு பல்கேரியாவில் ஸோபியா நகரில் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் அமெரிக்காவின் மத்திய வங்கி ஈரானிய வங்கிகளின் உயரதிகாரிகளின் மீது புதிய கட்டுப்பாடுகளை அறிவித்திருக்கிறது. அதற்கடுத்த கட்டமாக உலகில் எவராலும் போடப்படாத கட்டுப்பாடுகளை ஈரானின் மீது போடவிருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

அமெரிக்கா சீனாவின் மீது அறிவித்திருந்த வர்த்தக மோதலில் அவர்களிடையே நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளின் பின்பு ஓரளவு மெதுமை தெரிகிறது. வர்த்தகத் தொடர்புகளில் அமெரிக்கா சீனாவின் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஈடாக சீனா அமெரிக்காவின் பொருட்களை கொள்வனவு செய்வதில்லை என்ற குற்றச்சாட்டுடன் அம்மோதல் சில வாரங்களுக்கு முதல் ஆரம்பித்திருந்தது.

பேச்சுவார்த்தைகளின் பின்பு சீனா அமெரிக்காவின் விவசாயத் தயாரிப்புகளை கொள்வனவு செய்வதை உடனடியாக அதிகரிக்க விருப்பதாகவும், மற்றைய இயந்திரப் பொருட்களை கொள்வனவு செய்வதை அடுத்தடுத்த வருடங்களில் அதிகரிக்க இருப்பதாகவும் தெரிய வருகிறது.


---

## உலக யன்னல்

ஜெருசலேமுக்கு தமது தூதுவராலயங்களை மாற்றும் நாடுகளின் வரிசையில் அமெரிக்காவுக்கும் பின்பு குவாத்தமாலாவும், பராகுவேயும் சேர்ந்திருக்கின்றன. அந்த நடவடிக்கை எதிர்க்கும் நாடுகளின் அணியை விரைவில் தனது நாட்டில் பொதுத்தேர்தல் நடாத்தவிருக்கும் துருக்கியின் தலைவர் ஒன்றுபடுத்த முயல்கிறார்.

பலஸ்தீனர்களின் தலைவர் அப்பாஸ் அமெரிக்காவிலிருந்து தமது அமைப்பின் உயரதிகாரிகளை திரும்பியெடுத்திருக்கிறார். முதல் தடவையாக அவர் பலஸ்தீனாவுக்குத் தலைநகராக ஜெருசலேமுக்கு பதிலாக அதன் அருகிலுள்ள அல்டிஸ் என்ற நகர் தரப்படும் என்று சொல்லப்பட்டதாக பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், அதை சொன்னது யார் என்பதை தெரிவிக்கவில்லை.

காஸாவில்இஸ்ரேலிய எல்லையில் பலஸ்தீனர்கள் அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்த்துத் திரண்டு எல்லைக் காவலர்களை தாக்கிய ஒரு நாளில் மட்டும் 70 பேர் சுட்டுக் கொல்லப்பட சுமார் 2 500 பேர் கடுமையாகக் காயப்பட்டிருக்கிறார்கள்.



# இதெல்லாம் நடந்தால் பட்சி சிக்கிடிச்சு!

## காதலிக்கும் பெண்களை கண்டுபிடிக்க பத்து வழிகள்

இந்த காதல் சமாச்சாரத்தில் சிக்காத இளவயதுக்காரர்கள் இருப்பார்களா என்று பார்த்தால் நிச்சயம் இல்லையென்று துணிந்து சொல்லலாம். அப்படியில்லையென அடம்பிடிப்பவர்களை விட்டு விடலாம். ஏனென்றால் உலகத்தில் ஒரேயொரு திருஞானசம்பந்தர், ஐன்ஸ்டீன், விவேகானந்தர், தெரசா தானே. எங்காவது ஒன்றிரண்டு பேர்தான் ஊர்சொல்ல வாழ்கிறார்கள். அவர்களை விட்டுவிட்டு விடயத்திற்கு வருவோம்.

காதல் மனிதர்களில் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது? அதைத்தான் வைரமுத்து அழகாக சொல்லிவிட்டார் 'காக்கை கூட உன்னை கவனிக்காது. இந்த உலகமே உன்னை பார்ப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்வாய்' என. பிறகென்ன, அப்படித்தானே தலைகால் புரியாமல் காதலிப்பவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். காதலிக்கும் வரை பேஸ்புக்கில் ரோசாப்பூபடம் வைத்திருப்பவர்கள், மிக துணிவாக நீதியில்லாமல் நானில்லை என்பது மாதிரியான மொக்கை கவிதைகள் எல்லாம் எழுத தொடங்கிவிடுகிறார்கள்.

இந்த பகுதியில் இப்பொழுது பார்க்கப் போவது, காதல் எப்படியெல்லாம் பெண்களை மாற்றுகிறதென்பதை. பொதுவாக நமது பெண்கள் மிக அடக்கமாம். காதல் மாதிரியான விடயங்களை வெளியில் சொல்லமாட்டார்களாம். (யாருக்கப்பா தெரியும்... அவர்கள்தான் சொல்கிறார்கள்) ஆனால் பாருங்கள், பேரூந்துகளிலும், பொதுஇடங்களிலும் காதிற்கும் வாய்க்குமாக தொலைபேசியை மாற்றிமாற்றி குசுகுசுத்துக் கொண்டு திரிவதும் இவர்கள்தான். அவர்கள் வீட்டிலிருக்கும்பாட்டியுடன் தான் அப்படி சின்னியராக கதைக்கிறார்கள் என நம்பிவிடாதீர்கள். இதெல்லாம் காதலிற்கான முதலாவது அடையாளம் என அடித்து சொல்கிறார்கள், இந்த விடயத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்.

பொதுவாகவே உணர்வுகளை அதிகம் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள் என கூறப்படும் நமது பெண்களிற்கு காதல் வந்தால் எப்படி நடப்பார்கள்... எதை வைத்து கண்டுபிடிக்கலாம்? அப்பாவியான பெற்றோர்களே... எச்சரிக்கையுடன் இதை படித்து வைத்திருங்கள்.

1 காலை 9மணி வேலை. 8.30க்கு அரக்கப்பரக்க எழும்பி, ஒழுங்காக பல்லும் விளக்காமல் அகப்படும் உடுப்பை மாட்டி.. பொட்டும் சரியாக வைக்காமல், ஒராளுக்கான சாப்பாட்டு பார்சலுடன் புறப்படுகிறாரா உங்கள் பிள்ளை... அப்பாடா என நெஞ்சில் கைவைத்துக் கொள்ளுங்கள் பெற்றோரே. இன்னும் அவருக்கு ரியூப் லைட் எரியவில்லையென்பது கென் போர்ம்.

ஆனால், 6 மணிக்கே எழும்பி, வாரத்தில் மூன்று நாளு தடவை தலை குளித்து உடுப்பு அயன் செய்து, மாற்றிமாற்றி உடுப்பு போட்டு பார்த்து, பத்து தடவை கண் மை அழித்து அழித்து சரி செய்து, நாலு பொட்டை நாற்பது விதமாக வைத்துப்பார்த்து... நண்பியையோ, நாயையோ காரணம் காட்டி ஒன்றுக்கு இரண்டு பார்சல் சாப்பாட்டுடன் கிளம்புகிறாரா உங்கள் பெண்... ஆறுமுகம்.. அலேர்ட்டாகு.. விடயம் வில்லங்கமாகிவிட்டது.

2 வேலை முடித்து மாலையில் திரும்பியதும், சின்ன வயதிலிருந்ததைப் போலவே, அதிகாரி திட்டியதிலிருந்து, அடுத்த சீற்றிலிருந்தவன் லுக்குவிட்டது வரை அனைத்தையும் அம்மாவிடம் சொல்லி, குடும்பத்துடன் கும்மாளமடிக்கிறாரா...உங்களுக்கு மருமகன் இன்னும் தயாராகவில்லையென்று அர்த்தம்.

ஆனால் பாருங்கள், எல்லோரும் ஒன்றாக இருக்க, அவள் மட்டும் தனியாக இருந்து யோசிக்கிறாள் என்றால், அது ஒன்றில் ஒருதலைக் காதலாக இருக்கும். அல்லது காதலர்களிற்குள் ஏதோ பிச்சல் புடுங்கள். ஏதோ மனோதத்துவ மாத்ருபூதம் என்ற நினைப்பில் இதையெல்லாம் தீர்க்க நினைக்காதீர்கள். 'என்னம்மா பிரச்சனை' யென கேட்டால், தமிழ்பட ஹீரோயின்ஸ் சொல்வதைப் போல தலையிடிக்கிறதென சொல்லிவிட்டு போய்விடுவார்கள்.

அதுபோல, அறையை பூட்டிவிட்டு போனும் கையுமாக இருக்கிறாரா... வெள;ளம் தலைக்குமேல் போன பின்னர் சாணென்ன முழமென்ன?. நீங்கள் வழக்கம் போல 'எங்கள் வீட்டு கல்யாணம்' சீரியல் பார்த்து கொண்டிருங்கள்.

3 வீட்டிலோ, அலுவலகத்திலோ, நண்பர்களிடத்திலோ அவளது தொலைபேசியை யாராவது எடுக்கும்போது பேசாமல் இருந்தால், பட்சிஇன்னும்சிக்கவில்லையென்று அர்த்தம். மாறாக, தூக்க முன்னரே முந்திரிக்கொட்டை மாதிரி செயற்பட்டு பாய்ந்து பறித்தால், ஆள் கிளீன்போல்ட் என்று அர்த்தம்.

4 வீட்டிலிருந்து வெளியில் கிளம்பும் போதோ, நண்பர்கள் எங்காவது செல்லும்போதோ, 'ஏய் வாறியா' என கேட்டால், உடனே ஓகே சொன்னால் ஆள் சிங்கிள்தான். மாறாக,'ம்...' என இழுத்து போனை எடுத்து எஸ்.எம்.எஸ் போட்டால், ஆள் சிங்கத்திடம் பொமிசன் கேட்கிறார் என்று அர்த்தம்.

5 சிலசமயங்களில்உங்கள் மகள்,தோழி தனிமையில் சிரித்துக் கொண்டு நிற்பார்.பிள்ளையைதெல்லிப்பளை, அங்கொடைக்கெல்லாம் கொண்டு போக வேண்டுமென பயப்பிடாதீர்கள்.. இது மேற்றரே வேற. உங்களிற்கு மாப்பிள்ளை பார்க்கும் செலவை குறைத்து விட்டார் என்று அர்த்தம்.

6 கதைக்கும் போது, காதலைப்பற்றி பேச்சு வரும்போது, 'அந்த கருமத்த விடப்பா' என்ற ரீதியில் பேசினால், ஆள் இன்னும் உங்கள் வீட்டுபிள்ளைதான். ஆனால், காதலைப்பற்றி ஆகா ஓகோவென பேசத் தொடங்கினால்... இப்பொழுதே உசாராகிவிடுங்கள்.

7 உங்கள் மகளிற்கு, நண்பிக்கு தொலைபேசி எடுக்கிறீர்கள்... நீங்கள் எடுக்கும் சமயத்திலெல்லாம் அது ரிங் ஆகிறது. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை. அதுபோல வீட்டில், அலுவலகத்தில் போன் எங்கோ, ஆள் எங்கோ என திரிந்தாலும் ஆள் ஓகேதான். ஆனால் எப்பொழுதும் போனும் கையுமாக திரிகிறார்... ஒன்றுக்கு இரண்டு போன் வைத்திருக்கிறார்... எப்பொழுது அழைத்தாலும் வெயிட்டிங்கில் போகிறதென்றால்... பிறகென்ன, யாரந்த பையன் என்பதை அறிய முயலலாம்.

8 யாரைப் பற்றியும் க்வலைப்படாமல், தோன்றும் உடுப்பை அணிந்து சிம்பிளாக திரிந்தால் நம்பிக்கையாக இருக்கலாம். மாறாக, நான் 'பஞ்சாபிதான் போடுவன்.. நான் ஜீன்ஸ், ரொப்தான் போடுவன்... நான் கட்டை, குட்டை பாவாடையெல்லாம் போடமாட்டன்' என திடீர் கலாசார காவலர் போல் பேசுகிறாரா... இது மேற்றரே வேற.

9 வீட்டிலோ, வகுப்பறையிலோ, அலுவலகத்திலோ எல்லா பெண்களோடும் சமமாக இருந்தால, பெரும்பாலும் காதல், கண்றாவியெல்லாம் கிடையாது. மாறாக ஒருத்தியோட மட்டும் எப்ப பார்த்தாலும் கிசுகிசுத்துக் கொண்டிருந்தால் நிச்சயம் லவ்சு தான்.

10 பேஸ்புக்கில் இப்பொழுதும் ஆர்யாவின் படங்களையும், அல்ப்ஸ் மலைத்தொடரையும் தான் உங்கள் மகள் புரபைல் பிக்சராக வைத்துள்ளாரா?. ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். ஆள் இன்னும் மலையேறவில்லை. ஆனால் தனது படங்களை... குறிப்பாக பூக்கள், காதலர்களின் உருவங்களிற்குள் போட்டோசொப்பில் இணைத்து போடுகிறார் என்றால், இப்பொழுதே கல்யாண காட் அடிக்க தயாராகுங்கள்.




11வது ஐபிஎல் சீசனில் பல்வேறு அணிகளில் இடம் பெற்ற வெளிநாட்டு வீரர்களில் 11 பேர் துடுப்பாட்டம், பந்துவீச்சில் சொதப்பி பிளாஃப் ஆகியுள்ளனர்.


ஐபிஎல் போட்டித் தொடர் வியாபார நோக்கத்துடன், கார்ப்பரேட் நிறுவனங்கள் சம்பாதிக்கத் தொடங் கப்பட்டதாக பல்வேறு தரப்பினர் கூறினாலும், உள்நாட்டு இளைஞர்கள் திறமையை நிரூபிக்க அது மிகச்சிறந்த மேடை அமைத்துக் கொடுத்தது. அதேபோல வெளிநாட்டு அணிகளில் இருந்தும் வீரர்கள் பலர் இடம் பெற்று தங்களின் திறமையை மெருகேற்றி வருகின்றனர்.

சில நேரங்களில் அணிகள் ஏலத்தில் புகழ்பெற்ற, அனுபவம் வாய்ந்த சர்வதேச வீரர்களை எடுத்தால் வெற்றி எளிதாகக் கிடைக்கும் என்ற நினைப்பில் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து நட்சத்திர வீரர்களை அணி நிர்வாகங்கள் ஏலத்தில் எடுக்கின்றன. ஆனால், அனைத்து நேரங்களிலும் அவர்கள் சிறப்பாகச் செயல்படுவதில்லை என்பதை ஒவ்வொரு தொடரிலும் அவர்கள் நிரூபித்து வருகின்றனர்.

அந்த வகையிலும் வெளிநாடுகளைச் சேர்ந்த 11 பிளாஃப் வீரர்களை வைத்து ஒரு புதிய அணியே உருவாக் கிவிடலாம் என்ற அளவுக்கு மோசான துடுப்பாட்டத்தையும், பந்துவீச்சையும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் அவர்கள் குறித்த விவரம்.


### ஆர்கி ஷோர்ட்(ஆஸி.)

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இடது கை ஆட்டக்காரரான ஷோர்ட் அங்கு நடந்த பிக் பாஷ் டி20 தொடரில் மிகச் சிறப்பாக விளையாடியுள்ளார். ஹோபர்ட் ஹரிக்கன்ஸ் அணியில் இடம் பெற்று 572 ரன்கள் குவித்து அசத்தினார். இதனால் இவரை ரூ.4 கோடிக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி விலைக்கு வாங்கியது. ஆனால், 7 போட்டிகளில் பங்கேற்ற




ஷோர்ட் இதுவரை 115 ரன்கள் சேர்த்துள்ளார். அதிகபட்சமாக 44 ரன்கள் எடுத்துள்ளார்.

### கொலின் முன்ரோ(நியூசி.)



நியூசிலாந்து வீரரான கொலின் முன்ரோ சிறந்த தொடக்க ஆட்டக்காரர். இவரை டெல்லி டேர்டெவில்ஸ் அணி ரூ.1.90 கோடிக்கு விலைக்கு வாங்கியது. டி20 தடுப்பாட்ட தர வரிசையில் 2ம் இடத்தில் கொலின் முன்ரோ இருப்பதால் மிகப்பெரிய பலமாக அணிக்கு இருப்பார் என்று டெல்லி அணி நினைத்தது. ஆனால், ஒரு போட்டியில் கூட முன்ரோ சோபிக்கவில்லை. 5 போட்டிகளில் களமிறங்கிய முன்ரோ 63 ரன்கள் மட்டுமே சேர்த்தார். அதில் அதிகபட்சம் 33 ரன்களாகும்.

### பிரண்டன் மெக்கலம்(நியூசி)



நியூசிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர். கடந்த ஐபிஎல் போட்டிகளில் தனது அதிரடியான சதம், அரை சதங்களால் வெற்றியை எளிதாக்கிக் கொடுத்தவர். கோலி தலைமையிலான பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பெற்று இருந்த மெக்கலம் இந்த முறை ஐபிஎல் போட்டியில் பெரிய ஏமாற்றத்தை அளித்தார். பெங்களூர் அணியில் விராட் கோலி, டீகொக், மெக்கலம், டிவில்லியர்ஸ் எனச் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் அந்த அணியால் ப்ளே ஓப் சுற்றுக்கு முன்னேற முடியவில்லை.

மிகச்சிறந்த மட்ச் வின்னரான மெக்கலம் 6 போட்டிகளில் களமிறங்கி 127 ரன்கள் மட்டுமே சேர்த்தார். இதில் அதிபட்சம் 43 ரன்களாகும்.

### மக்ஸ்வெல்(ஆஸி.)

அவுஸ்திரேலிய அணியின் இளம் வீரர் மக்ஸ்வெல். ஐபிஎல் தொடரில் மக்ஸ்வெலின் துடுப்பாட்டமும், பந்து வீச்சும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஒட்டுமொத்தமும் தலை கீழானது. சர்வதேச ஓல்ரவுண்டர் வரிசையில் நம்பர் வன் இடத்தில் இருக்கும் மக்ஸ்வெலை ரூ.9 கோடிக்கு விலைக்கு வாங்கியது டெல்லி



டேர்டெவில்ஸ் அணி. ஆனால் ஒரு போட்டியில் கூட மக்ஸ்வெல் மட்ச் வின்னராக அணிக்குத் திகழவில்லை என்பது வேதனையாகும். 12 போட்டிகளில் களமிறங்கிய மக்ஸ்வெல் 169 ரன்கள் சேர்த்தார். சராசரியாக 14 ரன்களும், அதிகபட்சமாக 49 ரன்களாகும்.

### ஆரோன் பிஞ்ச்(ஆஸி.)

அவுஸ்திரேலிய அணியின் மற்றொரு இளம் அதிரடி துடுப்பாட்டக்காரர் ஆரோன் பிஞ்ச். கிங்ஸ் லெவன் பஞ் சாப் அணி ரூ.6.2 கோடிக்கு ஏலத்தில் ஆரோன் பிஞ்சை ஏலத்தில் எடுத்தது. துடுப்பாட்டத்தில் எந்த வரிசையிலும் சிறப்பாகச் செயல்படக்கூடியவர் என்பதால், முதல் இரு போட்டி களிலும் தொடக்க வீரராக பிஞ்ச்



களமிறக்கப்பட்டு, டக்அவுட்டில் தலைதெறிக்க ஓடினார். அதன்பின் நடுவரிசையில் களமிறக்கப்பட்டும் ஆரோன் பிஞ்ச் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை

இந்தத் தொடரில் 10 போட்டிகளில் விளையாடிய பிஞ்ச் 134 ரன்கள் சேர்த்தார். அதிகபட்சமாக 46 ரன் களும், சராசரியாக 16 . ரன்களும் சேர்த்திருந்தார்.

### பென் ஸ்டோக்ஸ் (இங்கிலாந்து)

இங்கிலாந்து சலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ் ஐபிஎல் ஏலத்தில் அதிகமான தொகையான ரூ.12.50 கோடிக்கு எடுக்கப்பட்ட வீரர் ஆவார். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் இடம் பெற்று இருந்த பென் ஸ்டோக்ஸ் ஒரு போட்டியில் கூட துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் முத்திரை பதிக்கவில்லை. 13 போட்டிகளில் களமிறங்கி பென் ஸ்டோக்ஸ் 136 ரன்கள் மட்டுமே சேர்த்தார்.

இவரின் ஒவ்வொரு ரன்னுக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கொடுத்த விலை ரூ.6.38 லட்சமாகும். 13



போட்டிகளில் 29 ஓவர்கள் பந்துவீசி 8 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தினார் பென் ஸ்டோக்ஸ். இவரின் ஓவர் எக்கொனமி ரேட் 9 ரன்களாகும். துடுப்பாட்டத்திலும் சராசரி 16 ரன்களாகும். பென் ஸ்டோக்ஸின் சொதப்பல் ராஜஸ்தான் அணிக்கு மிகப்பெரிய இழப்பாகும்.

### கோரி அண்டர்ஸன்(நியூசி.)

நியூசிலாந்து கலதுறை ஆட்டக்காரரான கோரி அன்டர்ஸன் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் இடம் பெற்று இருந்தார். ஐபிஎல் ஏலத்தில் விலைபோகாமல் அன்டர்ஸன் இருந்தார். இங்கிலாந்து வீரர் அன்டர்ஸன் காயம் காரணமாக விளையாட முடியாத காரணத்தால் மாற்றுவீரராக அன்டர்ஸன் தேர்வு

தொடர்ச்சி 24-ம் பக்கம்...



# இயற்கை உரம் தயாரிக்க உதவும் இ.எம்!

## உதவிக்கு வரும் உயிரியல் 3

தாய் திரவத்திலிருந்து செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கும்முறை பற்றிக் கடந்த இதழில் பார்த்தோம். அப்படித் தயாரிக்கப்பட்ட இ.எம்மை பயன்படுத்தும் விதங்களைப் பார்ப்போம்.

வீடுகள், விவசாய நிலங்கள், நீர்நிலைகள், சாக்கடைகள் ஆகிய இடங்களில் பயன்படுத்த ஏற்றது செறிவூட்டப்பட்ட இ.எம். இதன் அடிப்படை குணம், துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பக்டீரியாக்களை அழிப்பதுதான் என்பதை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். பொதுவாக, தேவையில்லாத அழுக்குகள்தான் தீமை செய்யும் பக்டீரியாக்கள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றன. கரப்பான்பூச்சி உள்ளிட்ட சில பூச்சிகளும் அதனால்தான் வருகின்றன. வீடுகளில் தேவையில்லாத அழுக்குகளை அகற்றி விட்டாலே, பெரும்பாலான பிரச்னைகள் தீர்ந்துவிடும். வீட்டுத் தரையைக் கழுவும்போது, ஒரு வாளி தண்ணீரில் 10 மில்லி செறிவூட்டப்பட்ட இ.எம் கலந்து வீட்டை துடைத்தால் அழுக்குகள், தீமை செய்யும் பக்டீரியாக்கள் ஆகியவை காணாமல் போய்விடும். ஒவ்வொரு முறையும் வீட்டை சுத்தப்படுத்தும்போது, இ.எம் பயன்படுத்தினால், நாளடைவில் தீமை செய்யும் பக்டீரியாக்களே இல்லாத நிலை உருவாகிவிடும்.


அதேபோல், கழிவறைகளைச் சுத்தம் செய்யும்போதும் தண்ணீரில் இ.எம் கலந்து பயன்படுத்தினால் துர்நாற்றம் இருக்காது. தீமை செய்யும் பக்டீரியாக்களும் அழிந்துவிடும். இதை உலகின் பல நாடுகளில் பின்பற்றுகிறார்கள். கழிவறைகள் மட்டுமில்லாது, சமையலறையில் பாத்திரங்கள் கழுவும் தொட்டியைச் சுத்தம் செய்வதற்கும் இதைப் பயன்படுத்தலாம். பொதுவாக நீங்கள் வீட்டில் எந்த இடத்தைத் தண்ணீர் ஊற்றித் துடைப்பதாக இருந்தாலும், அந்தத் தண்ணீரில் ஐந்து முதல் பத்து மில்லி இ.எம் கலந்து பயன்படுத்துங்கள். ஒரு லிட்டர் தாய் திரவத்திலிருந்து 100 லிட்டர் செறிவூட்டப்பட்ட இ.எம் தயாரிக்கலாம் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அந்த அடிப்படையில் ஒரு லிட்டர் தாய் திரவத்திலிருந்து தயாரிக்கும் இ.எம்மை நான்கைந்து குடும்பங்கள், இரண்டு மூன்று மாதங்களுக்குப் பயன்படுத்த முடியும். வீடுகளில் இருந்து சாக்கடை வெளியேறும் இடங்களிலும் அவ்வப்போது இ.எம் ஊற்றுவதன் மூலம், நமது வீட்டைச் சுகாதாரமான வீடாக மாற்றலாம்.

உலகளவில் ஆசிய நாடுகளில் உள்ள சாக்கடைகள்தான் அதிகத் துர்நாற்றம் வீசுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. காரணம், ஆசியாவில்தான் அதிகளவில் அரிசியை உணவாகப் பயன்படுத்துகிறோம். அரிசி கழுவும் தண்ணீரை அந்தக்காலத்தில் மாடுகளுக்குக் கொடுத்தார்கள். தற்போது மாடுகள் அரிதாகிவிட்ட சூழலில், அந்தத் தண்ணீரையும் கழிவு நீரோடு சேர்த்துச் சாக்கடையில்தான் கொட்டுகிறோம். அரிசி கழுவும் தண்ணீரில் உள்ள கார்போஹைட்ரேட், ஸ்டார்ச் சத்துகள், சாக்கடையில் இருக்கும் தீமை செய்யும் பக்டீரியாக்களுக்கு உணவாக அமைந்துவிடுகிறது. அதனால், அந்தப் பக்டீரியாக்களின் பெருக்கம் அதிகமாகிறது. இதைத் தடுக்க, அரிசி கழுவும் தண்ணீரை சாக்கடையில் ஊற்றுவதற்கு முன்பாக, அதில் பத்து மில்லி செறிவூட்டப்பட்ட இ.எம் கலந்து ஊற்றலாம்.

சாக்கடைகளில் பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை இ.எம் கலந்த தண்ணீரைத் தெளிப்பதன் மூலமாக, கொசுக்களைக் கட்டுப்படுத்தலாம். இன்றைக்கு டெங்கு, பன்றி காய்ச்சல் என அத்தனை காய்ச்சல்களுக்கும் அடிப்படையாக இருப்பவை, கொசுக்கள். கொசுக்களின் உற்பத்திக் கூடமான சாக்கடைகளில் இ.எம் தெளிக்கும்போது, கொசுக்களின் லார்வாக்கள் அழிக்கப்படுகின்றன. இ.எம், கொசுக்களின் முட்டையையோ, பெரிய கொசுவையோ அழிக்காது. லார்வா மீது, இது படியும்போது, அதன் மெல்லிய தோல் பாதிக்கப்பட்டு, அது முழுமையான கொசுவாக மாறுவதற்குள் இறந்துபோகும். எனவே சாக்கடைகளில் இ.எம் தொடர் பயன்பாடு, கொசுக்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும். இதை ஊரில் உள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

விவசாயத்தைப் பொறுத்தவரை, எருவை மட்கவைக்கவும், குப்பை எரு தயாரிக்கவும் இதைப் பயன்படுத்தலாம். காய்ந்த இலைதழைக் கழிவுகளை ஓர் அடி உயரத்துக்குத் தரையில் பரப்பி, அதன் மீது இ.எம் கலந்த தண்ணீரைத் தெளிக்க வேண்டும். இதற்கு ஆயிரம் லிட்டர் தண்ணீரில் ஒரு லிட்டர் இ.எம் கலந்தால் போதுமானது. ஓர் அடிக்குக் கழிவுகள், அதற்கு மேலாக இ.எம் தண்ணீர் தெளிப்பு என ஐந்து அல்லது ஆறு அடுக்குகள் அமைத்து அதை, பிளாஸ்டிக் ஷீட் அல்லது தென்னை மட்டைகளைக்கொண்டு மூடிவைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் கழிவுகள் விரைவாக மட்கி எரு தயாராகிவிடும்.

பயிர்களுக்குப் பாசன நீருடன் இ.எம் திரவத்தைக் கலந்துவிடலாம். ஒரு டிரம்மில் சொட்டுச் சொட்டாக இ.எம் விழுவதைப் போல் குழாயை அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த டிரம்மை வாய்மடை அருகே வைத்து, அதில் 100 லிட்டர் தண்ணீருக்கு ஒரு லிட்டர் இ.எம் என்ற விகிதத்தில் தண்ணீரை ஊற்றி வைக்க வேண்டும்.



பாசனநீரில் இந்தத் தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழும்போது, அது மண்ணில் உள்ள தீமை செய்யும் பாக்டீரியாக்களின் செயல்பாட்டை முடக்கி வைக்கும். பாசன நீரில் கொடுப்பதோடு நின்றுவிடாமல், பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை, பத்து லிட்டர் தண்ணீருக்கு 500 மில்லி என்ற அளவில் இ.எம் கலந்த தண்ணீரைப் பயிர்கள் மீது தெளிக்க வேண்டும். இதுபோன்ற தொடர் செயல்பாடுகள் காரணமாகப் பயிரின் வளர்ச்சி சீராக இருக்கும்.

அறுவடை முடிந்த நிலங்களில் ஓரளவு ஈரப்பதம் இருக்கும்போது, இ.எம் கலந்த தண்ணீரை ஸ்ப்ரேயர் மூலமாக வயல் முழுவதும் தெளிக்க வேண்டும். நடவுக்கு முன்பாக மீண்டும் இ.எம் கலந்த தண்ணீரைத் தெளிக்க வேண்டும். இதன் மூலமாக மண்ணில் இருக்கும் ஒரு சில மட்காத பொருள்களும் மட்குவதோடு, தீமை செய்யும் பக்டீரியாக்களின் செயல்பாடு தொடக்கத்திலேயே முடக்கப்படும்.

நீர்நிலைகளில் இ.எம் பயன்பாடு, இ.எம் பயன்படுத்தும் விவசாயிகளின் அனுபவங்கள் ஆகியவை அடுத்த இதழில்... **பரவும்**

### நன்மை செய்யும் நுண்ணுயிர்கள்

இந்த உலகம், மனிதர்களுக்கு மட்டுமானதல்ல; கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் உட்பட கோடிக்கணக்கான உயிர்களுக்கும் உறைவிடம். நாம்தான், உலகை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம் என எண்ணிக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், உண்மையில் உலகை ஆட்டிவைப்பவை பூச்சிகளும், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களும்தாம். நுண்ணுயிர்கள் என்றாலே மனிதனுக்கு எதிரானவை என்ற பொதுவான எண்ணம் உண்டு. உண்மையில் அப்படியில்லை. தனது அனைத்து படைப்பிலும் இரண்டு வாசல்களை வைத்தே இருக்கிறது, இயற்கை. ஒரு வாசல் அடைத்தால், இன்னொருவாசல் திறக்கும். அதன்படி, தீமை செய்யும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்த, சில நன்மை செய்யும் நுண்ணுயிர்களையும் படைத்துள்ளது. அப்படிப்பட்ட நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் குறித்த ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டதுதான், இ.எம் என அழைக்கப்படும் திரவ வடிவிலான நுண்ணுயிர் தொகுப்பு. இ.எம் உள்ளிட்ட நுண்ணுயிர்களை பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்குகிறது, இத்தொடர்.






ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். பிஸ்னஸுக்கும் அது பொருந்தும். எந்தவொரு பிஸ்னஸாக இருந்தாலும் உங்களுடைய பொருள்கள் அல்லது சேவைகளின் சாம்பிள் உங்கள் கைகளில் இருக்க வேண்டும். சாம்பிள் இல்லாமல் எந்த ஒரு பிஸ்னஸையும் செய்யக் கூடாது. முக்கியமாக, ஏற்றுமதியில் சாம்பிள் என்பது மிக முக்கியம்.

சாம்பிள் இல்லாமல் ஏற்றுமதி பிஸ்னஸை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. ஆனால், சாம்பிளை வைத்தே பிஸ்னஸ் செய்பவர்களிடம் உஷாராக இருக்க வேண்டும். இதை முதலில் மனதில் நன்றாகப் பதிய வைத்துக்கொண்ட பிறகே சாம்பிள் தருவது பற்றி யோசிக்க வேண்டும்.

சரி, சாம்பிள் கொடுப்பது எப்படி, எந்தப் பொருளை எவ்வளவு சாம்பிள் தரவேண்டும், எவற்றையெல்லாம் சாம்பிள் தரக்கூடாது என்பது குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

**சாம்பிள் மூன்று வகை**

பிஸ்னஸில் சாம்பிள் கொடுப்பதை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, மூலப் பொருள்கள் மற்றும் பொடி செய்யப்பட்ட பொருள்கள்; இரண்டு, முழுவதுமான செய்து முடிக்கப்பட்ட (Finished) பொருள்கள், அதாவது உடனடிப்பயன்பாட்டுக்கான இறுதிநிலைப் பொருள்கள். மூன்று, பிராண்டட் பொருள்கள், அதாவது ஏற்கெனவே பிரபலமாக உள்ள பொருள்கள். இப்படி மூன்று வகைகளாக 'சாம்பிள்' தர வேண்டிய பொருள்களைப் பிரிக்கலாம். இவற்றில் எப்படி, எவ்வளவு சாம்பிள் தருவது என்பதை இனி தனித்தனியாகப் பார்க்கலாம்.

**மூலப்பொருள்கள் மற்றும் பொடி செய்யப்பட்ட பொருள்கள்**
(Raw and Powder products)

நேரடி உற்பத்திப் பொருள்கள், அதாவது அரிசி, முந்திரி போன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம். அதேபோல், பொடி அல்லது மாவு பொருள்கள். உதாரணமாக, இட்லி பொடி, சாம்பார் பொடி மற்றும் சத்து மாவு போன்றவற்றைச் சொல்லலாம். இவை எதுவாக இருந்தாலும், 100 முதல் 250 கிராம் மட்டுமே சாம்பிள் கொடுக்க வேண்டும்.

கிலோக் கணக்கில் யாராவது உங்களிடம் சாம்பிள் கேட்டால் உஷாராகிவிடுங்கள். உங்களிடம் கிலோக் கணக்கில் வாங்குவதுபோல, வேறு சிலரிடம் வாங்கியே ஒரு கடையைப் போட்டுவிடுவார்கள். அப்படி செய்தால் நீங்களே முதல் போட்டு உங்களுக்குப் போட்டியாக ஒரு ஆளைத் தயார் செய்கிறீர்கள் என்று அர்த்தம்.

**ஃபினிஷ்ட் புரடக்ட்ஸ் (Finished Products)**

ஃபினிஷ்ட் பொருள்கள், அதாவது உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலான பொருள்களான இயந்திரங்கள் மற்றும் உடைகளை இவற்றுக்கு உதாரணமாகச் சொல்லலாம். இவற்றையெல்லாம் சாம்பிள் அனுப்புங்கள் என்று யாராவது கேட்டால், சற்றுக் கவனமாகச் செயல்பட வேண்டும்.




இந்த வகைப் பொருள்களைப் புகைப்படம் எடுத்து அனுப்புவது சிறந்த வழி. அதையும் மீறி, சாம்பிள் தந்தால் உடனடியாக ஓர்டர் கிடைக்கும் என்றால், அவர்களிடம் சாம்பிளுக்கான பணத்தை அனுப்பச் சொல்லிக் கேளுங்கள். பணத்தை அனுப்பினால், சாம்பிள் அனுப்புங்கள். இல்லையெனில், அவருடைய சகவாசமே வேண்டாம் என்று ஒதுக்கிவிடுங்கள்.

அதேபோல், சொஃப்ட்வெயார் தொடர்பான புரடக்டுகள். உதாரணத்துக்கும் வெப் டிசைன், புரடக்ட் டிசைன் அல்லது ஒப் டிசைன் போன்றவை. இந்தவகைதயாரிப்புகளை பிடிஎஃப்ஆக (PDF) கன்வர்ட் செய்து, அந்த பிடிஎஃப்ஐ போட்டோ எடுத்து அனுப்புவதுதான் சிறந்த வழி. ஏதோ ஓர் ஆர்வக்கோளாறில் உங்கள் தயாரிப்புகளை சி.டி அல்லது பென் டிரைவில் போட்டுத் தந்துவிட்டால் அவர்கள் அதை காப்பி எடுத்து உங்கள் பிசினஸை வாரிக் கொண்டு போய்விடுவார்கள். இதற்கு பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும்.

**பிராண்டட் பொருள்கள்**

ஏற்கெனவே பிரபலமாக உள்ள அல்லது ஏற்கெனவே ஒரு பெயரில் விற்பனை ஆகும் பொருள்களை யாராவது சாம்பிள் கேட்டால், உடனே அனுப்பி விடாதீர்கள். பிராண்டட் பொருள்களுக்கு சாம்பிள் வழங்க வேண்டிய அவசியமே இல்லை. அந்தப் பொருள்களைப் பற்றி பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அப்படியே அவர்களுக்கு அந்தப் பொருள்கள் பற்றித் தெரிய வேண்டுமெனில், ஒவ்வொரு பிராண்டுக்கும் இணையதளம் இருக்கிறது. அந்த பிராண்டின் இணையதளத்தில் அதன் தயாரிப்புகள் குறித்த விவரங்கள் இருக்கும். அந்த இணையதளப் பக்கத்தை அனுப்பிப் பார்த்துக்கொள்ள சொல்லிவிட வேண்டும்.

**முக்கியமாக செய்ய வேண்டியவை**

சாம்பிள் தரும் போது, இறக்குமதியாளரிடம் சாம்பிள் அனுப்பிய 15 நாள்களுக்குள் ஓர்டர் தந்தால்தான் உடனடியாகப் பொருள்களை அனுப்பும் வேலைகளில் விரைவாக இறங்க முடியும் என்பதைத் தெளிவாகத் தெரியப்படுத்துவது அவசியம். மேலும், அனுப்பும் சாம்பிளில் பாதியை அவர்களுக்கும், மீதியை உங்கள் ரெஃப்ரன்ஸுக்கும் நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

சாம்பிள் அனுப்பும்போது ஒரு டிக்ளரேஷன் லெட்டரும் நீங்கள் அனுப்ப வேண்டும். அந்தக் கடிதத்தில், இந்தக் காரணத்துக்காக, இந்த சாம்பிள் பொருளை, இந்த இடத்துக்கு அனுப்புகிறேன் என்பது போன்ற விவரங்களை அவசியம் குறிப்பிட்ட வேண்டும்.

என்ன திகதியில் நீங்கள் சாம்பிள் அனுப்புகிறீர்கள், எப்போது அதற்கான பதிலைச் சொல்வார்கள்· என்கிற விவரங்களையும் அதில் குறிப்பிடுவது அவசியம். சாம்பிள் அனுப்பும் பொருள்கள் விற்பனைக்கானதல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும்.

சாம்பிள் கொடுக்கவே கூடாத பொருள்களும் உள்ளன. அவற்றில் முக்கியமானவை காய்கறி, எண்ணெய் போன்ற பொருள்கள். காய்கறிகளுக்கான சாம்பிளை எந்தக் காரணம் கொண்டு கொடுக்கக் கூடாது. அதேபோல், எண்ணெய் பொருள்களை கொரியரில் அனுப்ப அனுமதி இல்லை. அதேசமயம், சாம்பிளாகத் தரப்பட்ட பொருளை வெளிநாடுகளுக்குத் தொடர்ந்து ஏற்றுமதி செய்து கொண்டிருக்கவும் கூடாது.

**(ஜெயிப்போம்)**

# முன்னாள் உறுப்பினர்கள் இருவர்... காதலியாக நடித்த புலிகளின் பெண் உறுப்பினர்

## சிவராம் விவகாரத்தை இடியப்ப சிக்கலாக்கிய சம்பவங்கள்



**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 76**

**பீஷ்மர்**



கருணா பிரிவில் தராகி சிவராமின் பங்கு என்னவென்பதை மேலோட்டமாக கடந்த வாரங்களில் குறிப்பிட்டிருந்தோம். இந்த விவகாரத்தில் நாம் வெளிப்படுத்தியது நூறில் ஒரு விசயம்தான். அவரது பங்கு இதில் இன்னும் பெரியது. பகிரங்கமாக பேசக்கூடியவற்றை பேசியுள்ளோம். அவ்வளவுதான்.

கருணாவுடன் சிவராம் இணைந்து செயற்படுகிறார் என்பதை உறுதி செய்ததன் பின்னர்தான், புலிகள் தமது பாணியில் சிவராமிற்கு எச்சரிக்கை கொடுத்து, அவரை வெளியேற்றினார்கள். புலிகளின் எச்சரிக்கை கிடைத்ததும், மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு கொழும்பிற்கு சென்றுவிட்டார்.

இதில் கவனிக்கத்தக்க விசயம் என்னவென்றால் இந்த சம்பவம் நடந்ததற்கு பின்னர், புலிகளின் உயர்மட்ட தலைவர்கள் யாரும் சிவராமை சந்திக்கவில்லை!

ஒரு முறை கிளிநொச்சிக்கு வந்த தங்கியிருந்து, முயற்சி செய்து பார்த்தார். பலனில்லை.

விடுதலைப்புலிகளுடன் சிவராம் நெருக்கமாக இருந்த காலப்பகுதியில், அவரை வைத்து சிலபல காரியங்களை புலிகள் செய்தனர். கொழும்பிற்கு சில ஆவணங்கள், ஆயுதங்கள் கொண்டு செல்ல சிவராம் உதவியதாக தகவலுண்டு. ஒருமுறை கொழும்பில் சிவராமின் வீட்டை பாதுகாப்பு தரப்பினர் சுற்றிவளைத்தனர்.

இது நடந்தது இரண்டாயிரங்களின் தொடக்கத்தில். அப்பொழுதுதான் கருணாவுடன் சிவராம் நெருங்கிப்பழக ஆரம்பித்தார். அதன்மூலம் கிழக்கில் இருந்த புலிகளின் அணிகளுடன் தொடர்பு ஏற்பட்டு, அவர்கள் கொடுத்து வந்த எதையாவது சிவராம் கொழும்பிற்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அந்த சுற்றிவளைப்பில் எதையாவது எடுத்தார்களா என்பது பற்றிய எந்த தகவலும் இல்லை. இந்த சம்பவம் நடந்தபோது சிவராம் வெளிநாட்டில் இருந்தார்.

உடனே, இலங்கையில் இருந்த பாதுகாப்பு தரப்புடன் தொடர்பில் இருந்த சில தரப்புக்களுடன் பேசி, அந்த விவகாரத்தை கவனித்து, குடும்பத்திற்கு நெருக்கடி ஏற்படாமல் ' பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். இந்த உதவியை குறிப்பிட்ட ஒரு சில தினங்களிற்கு மட்டுமே பார்த்துக்கொள்ள சொல்லி கேட்டிருந்தார். அதன்பின்னர் தான் நாடு திரும்பியதும், கவனித்துக்கொள்வேன் என கேட்டிருந்தார்.

சிவராம் புலிகளிற்காக ஆயுதங்களை கடத்தினாரா இல்லையா, அவரது வீட்டில் ஏதாவது கைப்பற்றப்பட்டதா, இல்லையா என்பதற்கு அப்பால், தனது தொடர்புகள் மூலம் அந்த சூழலை சமாளிக்கும் வல்லமை சிவராமிற்கு இருந்தது என்பதே கவனிக்கப்பட வேண்டியது.

பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளுடன் சிவராம் அடிக்கடி மதுபான விருந்துகளில் கலந்துகொள்வார். தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும், தகவல்களை சேகரிக்கவும் சிவராம் அதை பாவித்தார். வன்னிக்கும், கிழக்கிற்கும் சென்றுவரும் சிவராமிடமிருந்து தகவல்களை கறக்க பாதுகாப்புத்துறையினர் அவரை பார்ட்டிகளிற்கு அழைத்தனர்.

சரி, சிவராமை பார்ட்டிகளிற்கு அழைத்த அதிகாரிகள் எந்தளவு பெரிய ஆட்கள்?

இது உங்களிற்கு அதிர்ச்சியளிக்கும் விசயம். பாதுகாப்புதுறையில் மிகமிக உயர்மட்டத்தில் இருந்த அதிகாரிகள், சிவராமை அழைத்து, தமது பணத்தில் அடிக்கடி பார்ட்டி வைப்பார்கள் என்றளவில் மட்டும் இப்பொழுது விசயத்தை முடித்துக் கொள்கிறோம்.



இலங்கை பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் ஒன்றாக பார்ட்டியில் இருந்துவிட்டு, மறுநாள் கொக்கட்டிச்சோலைக்கு சென்று புலிகளின் முகாமிலும் தங்கிருப்பார். மீண்டும் அடுத்தடுத்த நாளில், புளொட் முகாமிலும்இருப்பார்.இதில்சிவராமின் ஆத்மார்த்த நண்பர்கள் இருந்தது புளொட்டில். மற்றைய இரண்டு இடங்களையும் தேவையின் நிமித்தம் சிவராம் பாவித்தார். அவ்வளவுதான்.

புலிகள், பாதுகாப்புதுறை இரண்டுடனும் சிவராம் நெருக்கத்தை ஏற்படுத்தியது, ஏதோ ஒரு நோக்கத்தை மனதில் வைத்துத்தான் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆகவே, அதற்கேற்ற நூதனமாக இரண்டு தரப்பையும் கையாண்டார். சமச்சீரான அளவில், ஒரு தரப்பில் இருந்து எடுக்கும் தகவலை இன்னொரு தரப்பிற்கு கொடுப்பார். அதே சமயம், இந்த இரண்டு தரப்புக்களும் சிவராமை சரியாக எடைபோட்டுமிருந்தன என்பது தான், முரண்நகையான விசயம்!

அதாவது, ஒரு சூது விளையாட்டைப்போலவே மூன்று தரப்பும் இதை கையாண்டன. கையில் துப்பாக்கியுடன் உள்ள இரண்டு தரப்பையும், அவர்களுடன் நெருக்கமாக பழகுவதன் மூலம் கையாளலாம் என சிவராமும், அவரை வைத்துக்கொண்டு தமக்கு தேவையான விதத்தில் எவ்வளவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாமென இரண்டு தரப்பும் சிந்திக்க இது ஒரு சுவாரஸ்ய சூதாக காட்சிகள் விரிந்தன.

கருணாவின் பிரிவில் சிவராமிற்கு இருந்த பங்கு புலிகளை உண்மையிலேயே கோபமடைய வைத்தது. வேறு சந்தர்ப்பம் எனில், புலிகளே சிவராமை தமது பாணியில் கவனித்திருப்பார்கள்.

ஆனால் கருணா விசயத்தில் புலிகள் வேறுவிதமாக நடந்து கொண்டதை கவனித்திருப்பீர்கள். இயன்றவரை கருணாவுடன் நின்றவர்களை பிரித்தெடுத்து, நம்முடன்தான் அதிகமானவர்கள் நிற்கிறார்கள், கருணாவின் கிளர்ச்சிக்கு ஆதரவில்லையென்பதை காண்பிப்பதுதான் புலிகள் செய்த வேலை. கருணாவுடன் இருந்த போராளிகளை தொலைத்தொடர்பு கருவியில் பேசி, மனம்மாறியவர்களை தமது பக்கம் இழுத்தெடுக்க தனி அணிகளே வேலை செய்தன. அப்பொழுது சிவராமையும் இதே விதமாகத்தான் அணுகினார்கள்.

ஆனால் புலிகளின் “சிக்கலானவர்“ லிஸ்டில் சிவராம் இடம்பெற்றுவிட்டார்!

இதற்குள் இன்னொரு விசயத்தையும் சொல்லிவிட வேண்டும். உமா மகேஸ்வரன் விவகாரத்தின் பின்னர், சிவராமிற்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென மாணிக்கதாசன் புளொட் அமைப்பிற்குள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார், ஆனால் கட்சியில் இருந்த பிற முக்கியஸ்தர்கள் சிலர் அதை தடுத்து வந்தனர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். மாணிக்கதாசன்தான் புளொட்டின்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பாதுகாப்புதுறை பிரதானிகளுடன் நெருக்கமாக பழக ஆரம்பித்ததும், அவர்களிடம் சிவராம் இந்த விவகாரத்தை குறிப்பிட்டு, தனக்கு புளொட்டினால் ஆபத்துக்கள் ஏதும் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென கேட்டிருந்தார்.



இராணுவத்தளபதி. அவரிடம் ஆட்களும், ஆயுதங்களும் இருந்தன. கட்சியின் மற்ற முக்கியஸ்தர்களிற்கு தெரியாமல் தனக்கு மாணிக்கதாசனால் ஏதாவது ஆபத்து நிகழுமோ என சிவராம் உண்மையிலேயே அச்சப்பட்டார்.

பாதுகாப்புதுறை பிரதானிகளுடன் நெருக்கமாக பழக ஆரம்பித்ததும், அவர்களிடம் சிவராம் இந்த விவகாரத்தை குறிப்பிட்டு, தனக்கு புளொட்டினால் ஆபத்துக்கள் ஏதும் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென கேட்டிருந்தார்.

மாணிக்கதாசன் மரணமடைந்ததும், புளொட்டில் இருந்து ஆபத்து ஏற்படும் வாய்ப்பிருக்கவில்லை. என்றாலும், முன்னேற்பாடாக சொல்லி வைத்திருந்தார். மாணிக்கதாசனை தவிர்த்தால், புளொட்டிலிருந்து சிவராமிற்கு ஆபத்தில்லையென்பதை பாதுகாப்பு தரப்பும் தெரிந்து வைத்திருந்ததால், இந்த விசயத்தில் ஒரு அளவிற்கு மேல் அவர்கள் அக்கறை காண்பிக்கவில்லை.

கருணாவின் பிளவு நடந்ததன் பின்னர், கருணா அணியாலும் தனக்கு ஆபத்து எற்படலாமென சிவராம் அச்சப்பட்டார். இது தொடர்பாகவும் தன்னுடன் டீலில் இருந்த பாதுகாப்பு துறை ஆட்களிடம் பேசினார். அவர் அச்சப்படுவதை போல எந்த ஆபத்தும் அவருக்கு நடக்காதென சிவராமிற்கு வாக்களிக்கப்பட்டிருந்தது!

இதை தனக்கு மிக நெருக்கமான வெகு சிலருக்கு சிவராம் சொல்லியுமிருக்கிறார். அவர்களில் சிலருக்கு பாதுகாப்புதுறையுடன் கொஞ்சம் நெருக்கமிருந்தது.. அந்த லிங்குகள் மூலமும் இந்த தகவலை அவர்களும் உறுதிப்படுத்தியிருந்தனர். அவர்கள் இப்பொழுதும் இலங்கையில் இருக்கிறார்கள்.

கருணா தரப்பிலிருந்து தனக்கு உயிராபத்து வரலாமென சிவராம் அச்சப்பட்டதில் நியாயமான காரணம் இருக்கிறது. காரணம் கருணா பிரிவின்போது, கருணாவுடன் நெருக்கமாக செயற்பட்டது, அறிக்கைகள் தயாரித்து கொடுத்தது எல்லாவற்றிலும் சிவராமின் பங்கு உள்ளது. இதனால் புலிகள் கோபப்பட்டு கடும்தொனியில் அவருக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தனர். அதையடுத்து, கருணா அணியை அம்போவென கைவிட்டுவிட்டு, அவர்களிற்கு தெரியாமல் கொழும்பிற்கு தப்பிச் சென்றுவிட்டார்.

சிவராம் தம்மை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் சென்றதில் கருணா அணி முக்கியஸ்தர்களும் கடும் கோபத்தில் இருந்தார்கள். அப்பொழுது "ஆஊ" என்றாலே கொலைவிழுந்து கொண்டிருந்த நேரம். இராணுவம், புலிகள், கருணா குழு மூன்றின் மீதும் மாறிமாறி குற்றம்சுமத்தப்பட்டு கொண்டிருந்தது. கிழக்கில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என அடையாளம்காணப்பட்டவர்கள் குருவி சுடப்படுவதை போல சுட்டுத்தள்ளப்பட்டு கொண்டிருந்தனர். இந்த கொலைகள் தலைநகர் கொழும்புவரை நீண்டது. இப்படியான நிலைமையில்சிவராம் அச்சப்பட்டதில் நியாயமிருக்கிறதுதான்.

இதற்கு முன்னர் சிவராமின் கொலை எப்படி நடந்ததென்பதை பார்ப்போம்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள மதுபானச் சாலையில்சிவராமும்சில நண்பர்களும் 28 ஏப்ரல் 2005 அன்று மது அருந்திக் கொண்டிருந்தார்கள். இரண்டரை மணி நேரத்திற்கும் அதிகமாக அவர்கள் விடுதியில் இருந்துள்ளனர்.

மது அருந்தி முடித்து வெளியேறிய சமயத்தில், வாகனத்தில் கடத்தி செல்லப்பட்டார். பின்னர் மறுநாள் பாராளுமன்ற.. சடலமாக மீட்கப்பட்டார்.

யார் சிவராமை கொன்றார்கள்?

சிவராம் கொலையை பற்றிய இந்த தொடரில், சிவராமை கொன்றது யார் என்பதை சொல்லாமல் விட்டால் எப்படி? சொல்வோம், கொஞ்சம் வித்தியாசமாக.

சிவராம் தனக்கு பிரச்சனை தரக்கூடிய தரப்பு என புளொட்டையும், கருணா குழுவையும் கருதினார். கருணாகுழுவின் "சிக்கலானவர்கள்" லிஸ்றில் சிவராமின் பெயர் நிச்சயம் இடம்பெற்றிருக்கும். அதற்கான காரணத்தை சொல்லிவிட்டோம். புளொட்டின் லிஸ்றில் கடைசிவரை சிவராமின் பெயர் இருக்கவில்லை. மாணிக்கதாசன் மீது சிவராம் அச்சப்பட்டது உண்மை. ஆனால் மாணிக்கதாசன் வைத்திருந்தது புளொட்டின் லிஸ்ற் அல்ல. 1998 இல் மாணிக்கதாசன் மரணமாகிவிட்டார். அதனால் புளொட்டில் இருந்து பின்னாளில் அவருக்கு சிக்கல் இருக்கவில்லை.

ஆனால், இன்னும் இரண்டு தரப்புக்களின் "சிக்கலானவர்" லிஸ்றிலும் சிவராம் இருந்தார். அதில் ஒன்று விடுதலைப்புலிகள்!

இது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். தமது சிக்கலானவர் லிஸ்றில் இருந்த ஒருவருக்கு எப்படி மாமனிதர் கௌரவம் கொடுத்தார்கள் என தலையை பிய்ப்பார்கள். இதற்கான காரணங்களை இந்த தொடரில், பின்னர் குறிப்பிடுவோம்.

இதற்குள் புளொட்டின் பெயர் எப்படி இழுக்கப்பட்டது?

இதுதான் மிகச்சுவாரஸ்யமான ஒரு விசயம்.

புளொட்டின் முக்கியஸ்தரான பீற்றர் என்பவர்தான் சிவராம் கொலையில் குற்றம்சாட்டப்பட்டவர். ஆனால் பின்னர் விசாரணை, நீதிமன்ற வழக்கில் அவர் விடுவிக்கப்பட்டு விட்டார். ஆனால் தமிழ் ஊடகங்கள் சிலதான் புளொட்டை விடுவிக்கவில்லை!

சிவராம் கொலை வழக்கில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியதும், இந்த வழக்கில் புளொட் மீது பழிவிழ காரணமாக அமைந்ததும் சிவராமின் சிம் அட்டை.

சிம் அட்டைகளின் லொக்கேசனை கண்டறியும் தொழில்நுட்பம் அப்பொழுது இலங்கையிடம் இருக்கவில்லை. இலங்கை விவகாரத்தில் அதிக அக்கறை காட்டும் மேற்குநாடொன்றுதான் சிவராமின் சிம்மின் லொக்கேசனை இலங்கைக்கு கொடுத்தது. அந்த லொக்கேசன் பீற்றரின் வாகனம்! சிவராமின் கைத்தொலைபேசியிலிருந்து கழற்றி வைக்கப்பட்டிருந்தாலும், அதன் லொக்கேசனை துல்லியமாக அறிந்து, பீற்றரின் வாகனத்தை பொலிசார் குறிவைத்தனர். அனேகமாக சிம் லொக்கேசனை வைத்து இலங்கையில் ஒருவர் கைதான முதலாவது சந்தர்ப்பமாக இதுதான் இருக்கு வாய்ப்புண்டு.

ஒருநாள் இரவு புளொட் முகாமிற்கு சென்ற பொலிசார், பீற்றரை கைது செய்து கொண்டு சென்றனர். அப்பொழுது அந்த முகாமில் இருந்த இன்னொரு புளொட் முக்கியஸ்தரான ஆர்ஆர் என்ற இராகவன், பீற்றரை அழைத்துக்கொண்டு செல்பவர்களின் பின்னால் தனது வாகனத்தில் சென்று கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்தார். பீற்றரை ஏன் கைது செய்தார்கள் என்பதை அறிந்துகொள்ளத்தான் அவர் சென்றிருந்தார். அவ்வளவுதான். மறுநாள் தமிழ் ஊடகங்களில் பீற்றர், ஆர்ஆர் கைது என கொட்டை எழுத்தில் தலையங்கம் போட்டார்கள்!

பின்னர் சிவராமின் சிம் அட்டை பீற்றரின் வாகனத்தில் இருந்து எடுக்கப்பட்டது. அதுதான் அவர் மீது குற்றம்சாட்டப்பட ஒரே காரணம். எப்படி அந்த சிம் அட்டை பீற்றரிடம் வந்தது?

அந்த சிம் அட்டையை பீற்றரிடம் கொடுத்தது, விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஒருவரும், புளொட் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஒருவரும்!

இதையெல்லாம் கேட்க, இடியப்ப சிக்கலாக உங்களிற்கு தோன்றும். சில பெரிய கைகள் செய்யும் ஒப்ரேஷன்கள் இப்படித்தான் தலையை சுற்றவைக்கும்.

பீற்றரிடம் சிம் அட்டையை கொடுத்தவர்களில் ஒருவர் புலிகளில் இருந்து பிரிந்து வந்தவர் என்று சொன்னோம் அல்லவா; அவரது பெயர் சுரேஷ். பின்னர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த சமயத்தில் புலிகளிற்கு அவர் பெரும் தலையிடி கொடுக்க, அவரை சுடுவதற்கு புலிகள் ஒரு பெண்ணை தயார் செய்தார்கள். அந்த பெண் சுரேஷின் காதலியாக நடித்து பழகி, கொழும்பில் அறையொன்றுக்குள் வைத்து சுரேஷை சுட்டுவிட்டு தப்பிச் சென்றார். அப்பொழுது பத்திரிகைகளிலும் இந்த செய்தி பரபரப்பாக பேசப்பட்டது.

சிவராம் விவகாரத்தில் இளநீர் குடித்தது யாரோ, கோம்பை சூப்பியது யாரோ என்ற கதையாக புளொட் சிக்குப்பட்டது இப்பொழுது வாசகர்களிற்கு புரிந்திருக்கும்.

சரி, சிவராமை கொன்றது யார்?

இதற்கு வித்தியாசமாக பதில் சொல்வதாக குறிப்பிட்டிருந்தோம் அல்லவா. புளொட், கருணா குழு இரண்டினாலுமே தனக்கு ஆபத்திருப்பதாக சிவராம் அச்சப்பட்டார். ஆனால், இந்த இரண்டு தரப்பும் சிவராமை கொல்லவில்லை. இதற்கு அப்பால் வேறொரு பெரிய கை இதில் சம்பந்தப்பட்டிருந்தது. அந்த "பிரதான கை" யார் என்பதை இப்பொழுது நாம் சொல்லப்போவதில்லை. ஆனால் வாசகர்களிற்கு ஓரளவு ஊகிக்க முடியுமென நினைக்கிறோம்.

(தொடரும்)

# மலையை பார்த்துக்கொண்டிருக்கும் கிராமம்!

மலையிலிருந்து குடியிருப்புக்களின் மீது எப்பொழுது கல் உருண்டு விழும் என்பது தெரியாமல், மலையை பார்த்தபடியே வாழும் கிராமமொன்று உள்ளது. கேட்பதற்கே அச்சமூட்டும் இந்த வாழ்க்கையை வாழ்பவர்கள், கொத்மலை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தவலந்தன்னை வேவண்டன் தோட்டத்தில் வாழும் மக்களே.

வேவண்டன் தோட்ட மக்கள், கடந்த எட்டு வருடமாகவே இந்த பிரச்சனையை சந்திக்கிறார்கள். இந்த தோட்ட கிராமத்திற்கு மேலிருக்கும் மலையிலிருந்து திடீர்திடீரென பெரும் கற்பாறைகள் உருண்டு விழுந்து கொண்டிருக்கின்றன. மழைக்காலங்களில் பாறைகள் விழுவது அதிகமாக இருக்கும்.

வேவண்டன் தோட்டத்தில் 56 குடும்பங்களை சேர்ந்த 276 பேர் வசிக்கிறார்கள்.


அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ இந்த பிரச்சனையில் அதிக அக்கறை காட்டாத நிலையில், மக்கள் இந்த ஆபத்தை சந்திக்கும் விதமாக தமது வாழ்க்கையை மாற்றியமைத்து கொண்டனர்.


மழைக்காலங்களில் இரவு யாருமே வீடுகளில் தங்குவதில்லை. அருகிலுள்ள பாடசாலைக்கு வேவண்டன் தமிழ் வித்தியாலயம் எல்லோரும் சென்று தங்குவார்கள். மீண்டும் மறுநாள் காலையில் வீடுகளிற்கு திரும்பி, மலையிலிருந்து கல் உருண்டு வருகிறதா என்று பார்த்தபடி இருப்பார்கள்.

கடந்த எட்டு வருடமாக இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு, இந்த கிராம மக்களிற்காக வேறொரு இடத்தில் வீடமைப்பு திட்டமொன்றை ஆரம்பித்தது. ஆனால் அங்கு வெறும் 20 வீடுகள்தான் கட்டப்பட்டு வருகின்றன. அரைவாசிக்கும் குறைவான கிராமமக்களிற்கே வீடு கிடைக்கவுள்ளது.

மிகுதியாக உள்ள 36 குடும்பங்களிற்கும் பிறிதொரு இடத்தில் வீடமைக்கப்படும் என கூறப்படுகிறது. 56 வீடுகளையும் ஒரே இடத்தில் அமைக்கத்தக்க இடம் அடையாளம் காணப்படவில்லையென்கிறார்கள் அதிகாரிகள். எப்படியோ, ஆபத்தில் உள்ள மக்களிற்கு விரைவில் மாற்றிடம் ஏற்பாடு செய்துகொடுப்பது மக்கள் பிரதிநிதிகளினதும், அதிகாரிகளினதும் கடமையாகும்!







# மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட புல்வெட்டும் இயந்திரம்!

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் விவசாய திட்டத்தில் பழுகாமத்தைச் சேர்ந்த மைக்கல் கேதீஸ்வரன் என்பவர் மாட்டு பண்ணை ஒன்றை அமைத்து வெற்றிகரமாக செயற்படுத்தி வருகிறார். சுயதொழிலை வெற்றிகரமாக நடத்தி, பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறார். இவர் பழுகாமத்தில் இரும்பு உருக்கி ஒட்டும் கடை ஒன்றையும் நடாத்தி வருகின்றார்.

இந்த மாட்டுப்பண்ணையில் 40 மாடுகளை வைத்து பராமரித்து வருகின்றார். ஒன்பது ஏக்கர் காணியில் இந்த பண்ணையை நடாத்தி வருகின்றார்.

புல் அரியும் இயந்திரமொன்றை தனது முயற்சியில் உருவாக்கி உள்ளார். இது குறித்து தமிழ்பக்கத்திடம் பேசினார். "இந்த இயந்திரத்தை பல கடைகளில் தேடினேன். ஒரு கடையிலும் நல்ல இயந்திரம் கிடைக்கவில்லை. இந்தியா, சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள்தான் இருந்தன. அவை ஒரு இலட்சத்திற்கும் அதிகமான விலை. இதற்கு பின்னர்தான் நானே இயந்திரம் செய்ய முடிவெடுத்தேன்" என்கிறார்.

சொன்னது மட்டுமல்ல, அதை செய்தும் முடித்திருக்கிறார். குறைந்த செலவில் அந்த இயந்திரத்தை வடிவமைத்துள்ளார்.

சி.ஏ.3 புற்களை அரிவதற்கு ஊதியம் கொடுத்து அரைநாள் செலவிட்டதாகவும், தனது இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்குள் மிகக் குறைந்த செலவில் இதனை செய்வதாகவும் கூறுகிறார். மேலும் உதவிகள் கிட்டுகின்ற சந்தர்ப்பத்தில் விவசாயதுறை தொடர்பான வேறு இயந்திரங்களை தயாரிக்க முடியும் என்கிறார்.

அடுத்த வருடம் மக்கள் மிகக் குறைந்த செலவில் குழாய் கிணறு தோண்டுவதற்கான இயந்திரத்தையும் வடிவமைப்பதாக கூறினார்.

இந்த பண்ணை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மாட்டுக்கு தேவையான புற்களை வளர்த்தெடுத்த பின்னர் மாடுகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்கப்படும். தற்போது நாளொன்றிற்கு சராசரியாக 60 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இங்கு 05 பேருக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று அவருடைய இரும்பு உருக்கி ஒட்டும் கடையிலும் 10பேருக்கு தொழில் வழங்கியுள்ளார். இவ்வாறு வளங்ளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றமை பாராட்டதக்கது.

19-ம் பக்க தொடர்ச்சி...

செய்யப்பட்டார். கோரி அன்டர்ஸனின் மோசமான போஃர்மைப் பார்த்து நியூசிலாந்து அணியே கழித்துக்கட்டி வைத்தது. ஆனால்,அது தெரியாமல் நன்றாக விளையாடுவார் என நம்பி அன்டர்ஸனை எடுத்த பெங்களூர் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. 3 போட்டிகளில் மட்டுமே வாய்ப்பு பெற்ற அன்டர்ஸன் 17 ரன்கள் மட்டுமே சேர்த்தார். . 3 விக்கெட் வீழ்த்தினார்.

### கிரன் பொலார்ட் (மே.இ.தீவுகள்)

மேற்கிந்தியத்தீவுகள் வீரரான கிரன் பொலார்ட் சிறந்த சகலதுறை வீரர். பொலார்டின் திடீர் அதிரடி



ஆட்டம், விக்கெட் வீழ்த்தும் திறமை ஆகியவற்றுக்காக மும்பை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் இவரைத் தக்கவைத்தது. கடந்த சில ஐபிஎல் சீஸன்களாக சொதப்பி வந்த பொலார்டை இந்த முறை மும்பை அணி கழற்றிவிட்டு இருக்க வேண்டும்

ஆனால், தக்கவைத்ததற்கு நல்ல தண்டனை கிடைத்தது. இந்த ஐபிஎல் சீசனில்கப்டன் ரோகித்சர்மா பலமுறை பொலார்டுக்கு வாய்ப்பு கொடுத்தும் துடுப்பாட்டத்தில், ரோஹித்துடன் போட்டிபோட்டு சொதப்பினார். இதனால், 7 போட்டிகளோடு பொலார்டை கழற்றிவிட்டனர். இந்தத் தொடரில் 7 போட்டிகளில் விளையாடிய பொலார்ட் 76 ரன்கள் மட்டுமே சேர்த்தார்.

### கிறிஸ் வோக்ஸ் (இங்கிலாந்து)

இங்கிலாந்து சகலதுறை வீரரான கிறிஸ் வோக்ஸ் இந்த முறை பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார். பெங்களூர் அணி ஏலத்தில் ரூ.7.60 கோடிக்கு வோக்ஸை ஏலத்தில் எடுத்தது.

கடந்த ஆண்டில் கொல்கத்தா அணியில் இடம்பெற்ற வோக்ஸ் 13 போட்டிகளில் 17 விக்கெட்டுகளைச்




சாய்த்தார். இதனால், நம்பி எடுத்த வோக்ஸை எடுத்த பெங்களூர் அணி மோசம் போனது. 5 போட்டிகளில் பங்கேற்ற வோக்ஸ் 17 ரன்கள் சேர்த்தால், 8 விக்கெட்டுகள் மட்டுமே கைப்பற்றினார்.

### மிட்ஷெல் ஜோன்ஸன் (ஆஸி.)

அவுஸ்திரேலியா ஆடுகளங்களில் மிட்ஷெல் ஜோன்ஸன் பந்துவீச்சில் அனல் பறக்கும். அத்தகைய சிறந்த பந்துவீச்சாளர் இந்த முறை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம் பெற்று கண்டுகொள்ளப்படவில்லை. கொல்கத்தா அணியின் வேகப் பந்துவீச்சுக்கு மிகப்பெரிய பலமாக இருப்பார் ஜோன்ஸன் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 10 போட்டிகளில் பந்துவீசிய ஜோன்ஸன் 2 விக்கெட்டுகளை மட்டுமே வீழ்த்தினார். சராசரியாக ஓவருக்கு 10 ரன்கள் விட்டுக்கொடுத்தார்.

### இம்ரான் தாஹிர் (தெ.ஆபிரிக்கா)

தென்னாபிரிக்காவின் சிறந்த சுழற்பந்து வீச்சாளரான இம்ரான் தாஹிர் இந்த முறை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியால் ரூ.ஒரு கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார். ஆனால், தொடக்கத்தில் ஒரு




சில போட்டிகளில் சிறப்பாகப் பந்துவீசிய தாஹிர் அதன்பின் சொதப்பினார். இதனால் சிஸ்கே அணி இம்ரானை ஓரம் கட்டியது. 6 போட்டிகளில் விளையாடிய இம்ரான் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்




# 15 சென்றதும் வென்றதும்!

மருதன்

மார்கோபோலோவுக்கும் இபின் பதூதாவுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. போலோவைப் போலவே பதூதாவும் இளம் வயதிலேயே தனது பயணங்களைத் தொடங்கிவிட்டார். 1325ம் ஆண்டு, ஜூன் மாதம் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது பதூதாவின் வயது 20 என்கிறார்கள். போலோவின் பயணத்தில், மூத்தவர்களும் குடும்பத்தினரும் உடன் இருந்தனர். ஆனால், பதூதா தனியாகத்தான் கிளம்பினார்.

பதூதா பிறந்தது, வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள 'மொராக்கோ' நாட்டின், டான்ஜியர் என்னும் இடத்தில். அவர் குடும்பத்தில் பலர், இஸ்லாமியச் சட்டங்களைக் கற்றறிந்த மேதைகள். ஒவ்வோர் இஸ்லாமியரும் மெக்காவுக்கும் மதீனாவுக்கும் புனிதப் பயணம் (ஹஜ்) செல்வது, வாழ்நாள் கனவு. இபின் பதூதாவும் அப்படித்தான் கிளம்பினார். அதுவே, அவரது வாழ்க்கையைத் தலைகீழாகத் திருப்பிப்போட்டது.

மார்கோபோலோவின் பயணக் குறிப்புகளில், தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றி எதுவும் இருக்காது. தான் பார்த்த புதிய நாடுகளையும், புதிய மனிதர்களையும், புதிய விலங்குகளையும் பற்றியே மாய்ந்து மாய்ந்து எழுதியிருப்பார். தன்னுடைய



உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்க மாட்டார். மிகவும் அபூர்வமாக ஒரே ஓர் இடத்தில், 'நான் கொஞ்சம் குண்டு என்பதால், என் எடையைத் தாங்கும் கனமான குதிரையைக் கொடுத்தார்கள்' எனக் குறிப்பிடுகிறார்.

ஆனால், பதூதாவின் பயணத்தில் தன்னைப் பற்றியும் எழுதுகிறார். அவருடைய முதல் பயணத்தின் குறிப்பே இப்படித்தான் ஆரம்பிக்கிறது... 'நான் தனியாகத்தான் கிளம்பினேன். வழித்துணையோ, பெரிய பயணக் குழுவோ இல்லை. நான் நேசிக்கும் நபர்களை விட்டுப் பிரிவது வருத்தமாக இருந்தாலும் பிரிந்துசெல்லவே முடிவெடுத்தேன். என் அப்பா, அம்மாவிடம் இருந்து விடைபெறுவது மிகவும் கடினமாக இருந்தது. அந்தத் துயரத்தையும் கடந்துதான் வீட்டைவிட்டு வெளியேறினேன், கூட்டைவிட்டு வெளியேறும் பறவையைப்போல' என தனது உணர்வுகளையும் குறிப்பிடுகிறார்.

இந்த ஹஜ் பயணம் மேற்கொள்ள, எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது தெரிந்தால்தான், பதூதா ஏன் இந்த அளவுக்கு வருந்தினார் என்பது புரியும். மொராக்கோவில் பெரும்பாலும் நடந்தும், சில சமயம் ஒட்டகம் மூலமாகவும் மெக்கா, மதீனா சென்று திரும்ப 16 மாதங்கள் பிடிக்கும். பதூதா ஊருக்குத் திரும்ப 24 ஆண்டுகள் ஆனது. ஏன்?

தன் முதல் பயணத்தைத் தொடங்கியபோது, பதூதாவிடம் இருந்தது ஒரு கழுதை மட்டுமே. உணவு, துணிமணிகள் மற்றும் தண்ணீர்கொண்ட ஒரு பெரிய மூட்டை. ஆடி அசைந்து நடக்கத் தொடங்கியது கழுதை. பதூதா பொறுமையாகப் பின்தொடர்ந்தார். ஆரம்பத்தில் சுதந்திரப் பறவையாக உணர்ந்தாலும், பெற்றோர் நினைவு வாட்டியது. உடல்நிலையும் படுத்த ஆரம்பித்தது. பயணத்தைத் தொடரலாமா, வீடு திரும்பிவிடலாமா எனத் தடுமாறியவருக்கு, வழிபோக்கர்கள் ஆலோசனை சொன்னார்கள். 'இவ்வளவு தூரம் கிளம்பி வந்துவிட்டாய். எதற்காகப் பாதியில் விடவேண்டும்? இரண்டு பயணக்குழு இப்போதுதான் இங்கிருந்து கிளம்பியிருக்கிறது. அவர்களுடன் சேர்ந்துகொள்' என்றார்கள்.

பதூதா அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டார். எடுத்த காரியத்தை முடித்தே தீர வேண்டும் என்னும் உத்வேகம் பிறந்தது. இடையில், காய்ச்சல் வாட்டியெடுத்தது. கொள்ளையர்கள் கூட்டத்தையும் சந்திக்க நேரிட்டது. பதூதா அசரவேயில்லை. 'கடவுள் என்னை என்ன செய்ய நினைக்கிறாரோ, செய்துகொள்ளட்டும். என் வழியில் சென்றுகொண்டிருப்பேன்' எனச் சொல்லிக்கொண்டார்.

'உன் கழுதையையும் பெரிய மூட்டையையும் விற்றுவிடு. யாராவது திருடிக்கொள்வார்கள். எந்தவித கனமும் இல்லாமல் சென்றால்தான், 'விரைவாகப் பயணத்தை முடிக்கலாம்' என்று சொன்னார்கள். பதூதா அதையும் செய்தார். வழியில் கிடைத்த உணவை உட்கொண்டார். போகும் வழியிலேயே ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இது எப்படி நடந்தது என்ற விரிவான குறிப்புகள் இல்லை.

1326ம் ஆண்டு, அலெக்சாண்ட்ரியா நகரில் உள்ள துறைமுகத்துக்கு வந்துசேர்ந்தார் பதூதா. இதுவரை 3,500 கிலோமீட்டர் தொலைவு வந்திருந்தார். இனி, மெக்காவையும் மதீனாவையும் தொட்டுப் பிடித்துவிடலாம் என்னும் நம்பிக்கை அவருக்குள் பிறந்தது.

'சரி, இரண்டு இடங்களையும் தரிசித்து முடித்த பிறகு வீடு திரும்பிவிடலாமா... மிச்ச வாழ்க்கையை என்ன செய்வது?' என்ற கேள்விகள் எழுந்தன.


அப்போது, ஷேக் ஃபர்ஹானுதின் என்பவரைச் சந்தித்தார். "எனக்கு ஓர் உதவி செய்யமுடியுமா? இந்தியாவில் என் சகோதரர் இருக்கிறார். அவரைப் பார்க்கும்போது, நான் விசாரித்தேன் என்று சொல்லுங்கள். சிந்து பிரதேசத்தில் என்னுடைய இன்னோர் உறவினர் இருக்கிறார். அவரிடமும் பேசுங்கள். சீனா போகும்போது அங்கு ஒருவரையும் நான் விசாரித்த தகவலைச் சொல்லுங்கள்" என்று பட்டியலிட்டார்.

பதூதா குழம்பிவிட்டார். "ஐயா, நான் அங்கெல்லாம் போகப்போவது இல்லை. நான் மொராக்கோவில் இருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ள வந்தவன். திரும்ப ஊருக்குத்தான் போகப்போகிறேன்" என்றார்.

அந்த முதியவர் புன்னகைத்து, "உன்னைப் பார்த்தால் மேலும் பல பயணங்களை மேற்கொள்வாய் எனத் தெரிகிறது. கடல் பயணம் மேற்கொள்ளப்போகிறாய். இப்படி ஊர் சுற்றுவதுதானே பிடித்திருக்கிறது... பிறகு ஏன் வீட்டுக்குப் போகவேண்டும்?" என்று கேட்டார்.

இபின் பதூதாவுக்கு சட்டென்று ஒரு மின்னல் வெட்டியதுபோல இருந்தது.

(பயணம் தொடரும்...)



# குச்சியால் அரிசிகளைத் தூக்கலாம்!

**தேவை:** பிளாஸ்டிக் பாட்டில், நீளமான பென்சில் அல்லது குச்சி, அரிசி தேவைப்படும் அளவுக்கு.

**செய்முறை:** மேஜையின் மீது சிறிதளவு அரிசியைப் பரப்பி, குச்சியை அதன் மீது வைத்து தூக்கிப் பாருங்கள். ஒரு அரிசிகூட குச்சியோடு வராது. ஒரு கைப்பிடி அரிசியை மேஜையின் மீது வைத்து, குச்சியைச் செருகித் தூக்கினாலும் அரிசி வராது. பிறகு, அரிசியை ஒரு பிளாஸ்டிக் பாட்டில் முழுவதும் நிரப்புங்கள். பாட்டிலின் வாய் வழியாக, படத்தில் காட்டியபடி குச்சியைச் செங்குத்தாகச் செருகவும். இப்போது, குச்சியின் மேல்முனையைப் பிடித்துத் தூக்குங்கள்.

என்ன ஆச்சரியம்! பாட்டிலும் அரிசியும் குச்சியோடு சேர்ந்து மேலே வரும். காரணம் என்ன?

அரிசிகளுக்கு உள்ளே குச்சியைச் செருகித் தூக்கும்போது, குச்சிக்கும் அதோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அரிசிகளுக்கும் இடையே ஏற்படும் உராய்வு விசை, குச்சியை நகரவிடாமல் தடுக்கிறது. இதனால், அரிசி நிறைந்த பாட்டில், குச்சியோடு சேர்ந்து மேலே வருகிறது.


ஒரு பொருள் மற்றொரு பொருள் மீது இயங்கும்போது, பொருள் இயங்கும் திசைக்கு எதிராக ஒரு தடைவிசை செயல்படுகின்றது. இதுவே, உராய்வு விசை எனப்படும்.

**பயன்பாடு:** நாம் தரை மீது நடப்பதற்கும் ஓடுவதற்கும் உராய்வு விசை தேவை. பனிப் பிரதேசங்களில் பனித் தரையின் மீது நடப்பது எளிதல்ல. பனித்தரையில் உள்ள நீர்ப்படலம், தரைக்கும் காலுக்கும் உள்ள உராய்வு விசையைக் குறைக்கும். அதனால், கால் வழுக்கிக் கீழே விழுவதற்கு வாய்ப்பு உள்ளது.










# புதிர்கள்





1 பண்ணை வீடு ஜோரா இருக்கு. அதன் படங்கள் 7 சின்ன வட்டங்களில் சிக்கி இருக்கு. எங்கே இருக்கு எங்கே இருக்கு? பெரிய படத்தில் அவை எங்கே இருக்கு?



4 தேவையான வண்ணப் பென்சில்களை எடுத்துக்க... எங்கே எந்த நிறம் எனப் பார்த்து தீட்டிக்க!

2 கடல் அடியில் சிக்கிக்கிட்டான் சின்னப் பயல்... கப்பலில் தவிக்கிறார் கேப்டன் அப்பா. வழியைக் காட்டி உதவி பண்ணு!






3 பென்சிலை எடுத்துக்க... புள்ளிகளைப் பார்த்துக்க... 1-ல் தொடங்கி 70 வரை இணைச்சுக்க. வரும் பட்டத்து யானையின் ராஜ பவனியைப் பார்த்து ரசிச்சுக்கோ!

6 எந்த நிழல் யாருக்குச் சொந்தம்? எடுத்துச் சொல்லுங்களேன் கொஞ்சம்!





5 நாம யாரு... வித்தியாசங்களையும் வித்தியாசமா கண்டுபிடிப்போம்ல. முதல் படத்தின் கண்ணாடி பிம்பமாக இரண்டாவது படம் இருக்கு. வலம், இடம் மாற்றத்தை மறந்துட்டு மற்ற 10 வித்தியாசங்களைக் கண்டுபிடிங்க பார்ப்போம்!

மாணவர் பூங்கா

விடைகள்:





6
1 - 4
3 - 6
5 - 2

## முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் சிறப்பு மலர்

### முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்தின் தயாரிப்புக்களை பனை சார் உற்பத்தி பொருட்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள் ஒடியல் மா, வெல்லக் கட்டிகள் என்பவற்றை பெற்று கொள்ளவும் என்பதை தெரிவிப்பதுடன் நெதர்லாந் நாட்டுக்கும் இலங்கையின் தென்பகுதிக்கு எமது சங்கத்தின் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றது.





பிரதான வீதி
முள்ளியவளை
தொலைபேசி எண்:
021 - 3202388

### Suthan Hardware & Multi Trade Center

சுதன் பல்பொருள்விற்பனை நிலையம்

கட்டிடத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் ஹாட்வெயார் பொருட்கள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.




உரிமையாளர்
P.இராஜவர்மன்
T.P: 077-4631579



### கலைமகள் மல்ரி சென்ரர்

புத்தகசாலை, முள்ளியவளை

Photocopy, Laminating செய்து கொடுக்கப்படும்.
அனைத்துப் பாடசாலை பொருட்கள் வீட்டுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்கள் பெற்றுக் கொள்ள முடியும்.



### ANNAM MULTI SHOP

Silavaththa Junction, Mullaitivu

அன்னம் பல்பொருள் வாணிபம் 30 வருடங்களாக இயங்கி வரும் எமது வாணிபத்தில் அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

திருகோணமலை வீதி, சிலாவத்தை சந்தி, S.பஞ்சலிங்கம்
T.P :-077 48 20014

### Sentamilkumaran Multi Shop & N.V.T SUPER MARKET

உங்களுக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்வதுடன் உங்கள் உறவுகளுக்கான பொதிகளை நம்பிக்கையாகவும் விரைவாகவும் அனுப்ப முடியும்



முள்ளியவளை வீதி
தண்ணீரூற்று
T.P: 0772881874



### பதுபுத்தகசாலை
### பதுசன் புடவை
### அழகுப் பொருள் வாணிபம்

உங்களுக்கு விரும்பிய அனைத்து ஆடைகளையும் மற்றும் பாடசாலை உபகரண பொருட்கள் அலுவலகப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
பதுசன் புடவை அழகுப் பொருள் வாணிடம் பதுபுத்தகசாலை.

பிரதான வீதி
தண்ணீரூற்று
TP: 0770503889

# மீண்டும் ஜப்பான் மோட்டார் சைக்கிள்கள்

வவுனியாவில்

SUPER CUB



- ✓ அசல் உதிரிப்பாகங்கள்
- ✓ துரிதமான வாகனப் பதிவு
- ✓ லீசிங் வசதிகள் செய்து தரப்படும்
- ✓ உத்தரவாதம் உண்டு

MD - 90



25 வருட அனுபவமிக்க விற்பனையாளர்

**CHRISTOES ENTERPRISES**

167/3 கந்தசாமி கோவில் வீதி, இறம்பைக்குளம், வவுனியா.

**077-3055106, 024-2220051**

# வெளிநாட்டு பார்சல் சேவை

உலக நாடுகள் அனைத்திற்குமான துரிதகதி ஆவணங்கள், பொருட்கள் என்பவற்றை மிக விரைவாகவும் உத்தரவாதத்துடனும் பிரபல்யம் வாய்ந்த கம்பனிகள் ஊடாக அனுப்புவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்




## சஜீஸ் கொமினிகேசன்

வெளிநாட்டு பார்சல் சேவை

இல.22, பஸ் நிலையம்,
வவுனியா.

தொ.பே.இல:024 2222166




### எமது கிளைகள்

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் செவை
A9, வீதி, நீதிமன்றம் முன்பாக,
கிளிநொச்சி.
0212285574

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
தபால் கந்தோர் அருகாமை,
முள்ளியவளை.
024 3248954

M.S.K. என்டர்பிறைசஸ்
(கந்தசாமி கோவில் முன்பாக)
கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
024 3244263

M.S.K. என்டர்பிறைசஸ்
7ம் வட்டாரம்,
முல்லைத்தீவு வீதி,
புதுக்குடியிருப்பு.
0213003424


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 27.05.2018 அன்று வெளியிடப்பட்டது.